# இந்து இளைஞன்

# THE YOUNG HINDU

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர் வருடாந்த வெளியீடு

**The Jaffna Hindu College Students' Annual**




**2002 – 2008**

உ

# இந்து இளைஞன்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர் வருடாந்த வெளியீடு

# THE YOUNG HINDU

**The Jaffna Hindu College Students' Annual for internal and Private Circulation Only**

**2002 - 2008**

மலர்: 62 - 68

இதழ்: 137 - 143

EDITORS :

| | | |
|---|---|---|
| *Tamil Editor* | : | Mas. S. Seran |
| *Asst. Tamil Editor* | : | Mas. T. Sivamynthan |
| *English Editor* | : | Mas. K. Harsan |
| *Asst. English Editor* | : | Mas. N. Thiruththanigan |

STAFF ADVISORY COMMITTEE :

| | | |
|---|---|---|
| Mr. V. Ganesarajah | : | *Principal* |
| Mr. P. Maheswaran | : | *Deputy Principal* |
| Mr. P. Srikantharajah | : | *Vice Principal* |
| Mr. P. Gnanathesigan | : | *Tamil Section* |
| Mr. N. Thangavel | : | *Tamil Section* |
| Mr. V. Sivarajah | : | *Tamil Section* |
| Mr. S. Srikumar | : | *English Section* |
| Mr. S. Gokulananthan | : | *English Section* |

உ

# பஞ்ச புராணம்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் - வளரும்
பிறையுடையாய் பிஞ்சகனே என்றுனைப் பேசினல்லால்
குறையுடையார் குற்றமோராய் கொள்கையினால் உயர்ந்த
நிறையுடையார் இடர் களையாய் நெடுங்கள மேயவனே.

## திருவாசகம்

பண்சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன் மண்டலத் தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலி கொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன் மேனி பாடுதுங்காண் அம்மானாய்.

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவில்
ஐயா நீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் திரை நோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கிவ் வண்டத்தொடுமுடனே
பூதலத்தோரும் வணங்கப் பொற் கோயிலும் போனகமு மருளிச்
சோதி மணிமுடித் தாமமுந் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசுவைத் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

தூயவெண் நீறு துதைந்த பொன் மேனியும், தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரும் சிந்தையும், நைந்துருகிப்
பாய்வது போல அன்புநீர் பொழிகண்ணும், பதிகச் செஞ்சொல்
மேய செவ்வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே.

திருச்சிற்றம்பலம்

# உள்ளடக்கம்

பக்கம்


| | |
|---|---|
| ⏩ அதிபரின் செய்தி | 01 |
| ⏩ உணர்வுகள் | 03 |
| ⏩ அன்பு | 05 |
| ⏩ வீரத்துறவி சுவாமி விவேகானந்தர் | 05 |
| ⏩ மீண்டும் பொழியும் அந்த மழை | 06 |
| ⏩ தகவற் தொழில்நுட்பம் | 06 |
| ⏩ கல்வியின் சிறப்பு | 08 |
| ⏩ வாசிப்பின் பயன்கள் | 09 |
| ⏩ இந்துசமயமும் மனித வாழ்க்கையும் | 11 |
| ⏩ கல்வியின் மகத்துவம் | 12 |
| ⏩ பரோபகாரம் | 13 |
| ⏩ சித்திரக் கலையின் வளர்ச்சி | 14 |
| ⏩ சுனாமியும் பாதிப்புக்களும் | 15 |
| ⏩ இளமையிற் கல்வியைக் கல் | 17 |
| ⏩ விட்டுக்கொடுப்பு வேண்டும் | 18 |
| ⏩ அன்பு | 19 |
| ⏩ சூழலைப் பேணுவோம் | 20 |
| ⏩ எப்பொழுதும் உதவிசெய்ய ஆயத்தமாயிரு | 20 |
| ⏩ யாதும் ஊரே யாவரும் கேளிர் | 21 |
| ⏩ முயன்று பார்... முயன்று பார்... | 22 |
| ⏩ இந்து அன்னை | 22 |
| ⏩ கற்றுக்கொள் | 23 |
| ⏩ நலந்தரும் நாமம் | 23 |
| ⏩ வெற்றிப் பாதையில் யாழ் இந்துவின் சாரணியம் | 25 |
| ⏩ இலக்கியமும் மனித விழுமியங்களும் | 26 |
| ⏩ இனப்பெருக்க வரைவிலக்கணத்தையே மாற்றி அமைத்துவிட்ட குளோனிங் முறை | 31 |

- Linux (லினக்ஸ்) 32
- தனிப் பெருங் கலையகம் 3?
- யாழ்ப்பாணத்தில் சமய கலாசார நிலைகள் நேற்றும் இன்றும் நாளையும் 38
- இறையும் இசையும் 40
- நட்பின் வருகைக்காய்... 43
- "விதைப்பு" 44
- மைந்தனே... 47
- அவள் ஏன் அழுகிறாள்? 48
- இன்றைய சிறுவரும் அவர்தம் உளநலனும் 50
- என் மாணவர்கள் என்னை அழைத்தபோது... 55
- எனது சேவைக் காலத்தில் நான் கண்ட அதிபர்கள் 62
- கருமத்தின் வழியே மறுபிறப்பாகும் 65
- திருக்கோயில் உற்சவமும் தத்துவார்த்தப் பின்னணியும் 66
- பாடசாலைகளில் நூலகங்களின் பங்கு 67
- சொல்லும் செயலும் என நடமாடிய தலைவர், ஓய்வுபெற்ற அதிபர் 69
- புண்ணியலிங்கம் என்ற ஒரு தவப்புதல்வன் 70
- சர்மா சேர் 72
- இசைவாக்கவாளர் கிருஸ்ணகுமார் 74
- திரு. த. ஞானப்பிரகாசம் 75
- முத்து எங்கள் இந்துவின் சொத்து 76
- இந்துவின் மைந்தர்களுள் ஒருவரான சண்முகவடிவேலு பொன்னம்பலம் 77
- இதயம் சிறந்த இந்துவின் நல்லாசான் 78
- பௌதிகவியல் ஆய்வுகூட உதவியாளர் திரு. பொன்னம்பலம் மகாஞானசம்பந்தர் 79
- திரு. நா. கா. மகாலிங்கம் 80
- *Editorial* 83
- *Thaipongal* 85

- *People and Animals on earth* 85
- *Self confidence and Reading* 86
- *Caring for elders* 87
- *Make life easy for our brain* 88
- *Chess* 91
- *Aviation History* 91
- *History of scouts in Sri Lanka* 93
- *I want a world of...* 94
- *Virus, The malicious software* 94
- *One of the greatest revolutionary Writer, Scientist and Futurist* 98
- *Literature and Language Learning* 100
- *Why does a cat always fall on its feet?* 101
- *The Joys of School Days* 102
- *Why I became a teacher...* 103
- *Jaffna Hindu College Boys* 105
- *Books - Our best guides and companions towards a glorious life* 107
- *Progress of Bilingual Education in Jaffna Hindu College* 108
- *Science* 110
- *Mr. K. V. Kurunathan Teacher of English* 113
- *Mrs. V. Sivagurunathan* 113
- *Senior Prefects* 114
- **கல்லூரி பரிசுத்தினங்கள்** 115
- **கல்வி தொடர்பான அறிக்கைகள்** 117
- *Academic Staff - 2008* 122
- *Non Academic Staff - 2008* 124
- *They have retired* 125
- *Transfers* 125
- *Obituary in Memoriam* 126
- *The Young Hindu Wishes to thank* 127

# கல்லூரிக் கீதம்

*வாழிய யாழ்நகர் இந்துக்கல்லூரி*
*வையகம் புகழ்ந்திட என்றும் (வாழி)*

*இலங்கை மணித்திரு நாட்டினில் எங்கும்*
*இந்து மதத்தவர் உள்ளம்*
*இலங்கிடும் ஒருபெருங் கலையகம் இதுவே*
*இளைஞர்கள் உள மகிழ்ந் தென்றும்*

*கலைபயில் கழகமும் இதுவே - பல*
*கலைமலி கழகமும் இதுவே - தமிழர்*
*தலைநிமிர் கழகமும் இதுவே!*

*எவ்விட மேகினும் எத்துயர் நேரினும்*
*எம்மன்னை நின்னலம் மறவோம்*
*என்றுமே என்றுமே என்றும்*
*இன்புற வாழிய நன்றே*
*இறைவன தருள் கொடு நன்றே!*

*ஆங்கிலம் அருந்தமிழ் ஆரியம் சிங்களம்*
*அவைபயில் கழகமும் இதுவே!*
*ஓங்குநல் லறிஞர்கள் உவப்பொடு காத்திடும்*
*ஒருபெருங் கழகமும் இதுவே!*
*ஒளிர்மிகு கழகமும் இதுவே!*
*உயர்வுறு கழகமும் இதுவே!*
*உயிரன கழகமும் இதுவே!*

*தமிழரெம் வாழ்வினிற் தாயென மிளிரும்*
*தனிப் பெரும் கலையகம் வாழ்க!*
*வாழ்க! வாழ்க! வாழ்க!*

*தன்னிகர் இன்றியே நீடு!*
*தரணியில் வாழிய நீடு!*

## Our Principal



Mr. V. Ganesarajah

*B.Com., Dip. in Ed., M. Ed., SLPS I*

# நமது கொடி

(எமது கல்லூரியின் நீலமும் வெண்மையும் கூடிய கொடியைப் போற்றிப் புகழ்ந்து எமது பழைய மாணவரும். முந்நாள் நல்லை ஆதீன முதல்வருமாகிய பரிபூரணத்துவ மெய்திய ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளால் 1937 இல் பாடப்பெற்ற பாடல்)

(திவ்ய தரிசனம் தரலாகாதா...? என்ற மெட்டு)

ஜெயக்கொடிதனின் வர்ணமே பாரீர்... எம்தம்கல்லூரி
மேகவர்ணனின் மேனிதன் நிறம்
காணீர் இக்கொடிதனில் இன்றே - ஜெயக்கொடி

கல்லூரி மாணவர் கனிந்துமே போற்றும்
கலைவாணி துகிலுமே வெள்ளை
கலைமகள் தாமும் களிப்புடனமரும்
கமலமுமே வெள்ளை தானே! - ஜெயக்கொடி

வாணி கணவனை நாபியால் பெற்ற
வாசுதேவன் நிறம் நீலம்
வாமனும் பள்ளி கொண்டிடும் ஆழியும்
வான்போல் நீல நிறம் தானே!! -ஜெயக்கொடி

நீலமேகம்தனிப் பாலசந்திரன் போல்
நீலமும் வெண்மையும் பாரீர்
நீடூழி காலம் நீடித்த ஸ்தம்பத்தில்
நீலவெண் துகில் தானே பறக்கும் - ஜெயக்கொடி

இந்து இளைஞன் 10.11.1937

## Our Deputy Principal



Mr. P. Maheswaran

*B. Sc. ( Hons), - Dip. in Ed.*

## Our Vice - Principal



Mr. P. Srigantharajah

*B. A., B. Phil(Hons), Dip. in Ed., SLPS 2 - I*




யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கவின் கலை மன்றம் 04.04.2006 அன்று வெளியிட்ட தீம், தீம் இசை இறுவட்டின் முகப்புத்தோற்றம்

## Principal - Emeritus



Mr. A. Srikumaran

*B.A. (Cey.) Dip. in Ed., S. L. P. S. I*

# Sectional Heads



Mr. P. Gnanathesigan
*B. A., Dip . in Ed., M. Ed.*
*S. L. T. S - 1*



Mr. C. Thavarajah
*Maths Trained*
*S. L. T. S - 1*



Mrs. S. Surenthiran
*B. Sc. (Hons), Dip. in Ed.,*
*S. L. T. S - 1*



Mr. N. Thankavel
*Tamil Trained*
*S. L. T. S - 1*



Mr. R. Balachanthiran
*Science Trained*
*S. L. T. S - 1*

# Editors

*Editor : Tamil*



Mas. S. Seran

*Asst. Editor : Tamil*



Mas. T. Sivamynthan

*Editor : English*



Mas. K. Harsan

*Asst. Editor : English*



Mas. N. Thiruththanigan

## ஒழுக்காற்றுச் சபை



இருப்பவர்கள் (இடமிருந்து வலம்): பொ. பாலச்சந்திரன், ந. தங்கவேல், பொ. ஞானதேசிகன், பொ. ஸ்ரீகந்தராஜா, வீ. கணேசராஜா (அதிபர்), பொ. மகேஸ்வரன் (பிரதி அதிபர் – செயலர்), செ. தவராசா, திருமதி ச. சுரேந்திரன்

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) : கி. சண்முகராசா, ச. நிமலன், பா. சற்குணராசா, நா. விமலநாதன்

## Staff Advisdry Committee



*Sitting (L - R) : Mr. P. Gnanathesigan, Mr. P. Srikantharaja (Vice - Principal), Mr. V. Ganesarajah (Principal), Mr. P. Maheswaran (Deputy Principal), Mr. P. Thangavel*

*Standing (L - R) : Mr. V. Sivarajah, Mr. S. Srikumar, Mr. S. Gokulananthan*

## இந்து இளைஞர் கழகம்



**இருப்பவர்கள் (இடமிருந்து வலம்):** திரு. பா.சற்குணராஜா (பெருஞ்செயலர்) , திரு. பொ. ஶ்ரீகந்த ராஜா (உபஅதிபர்), திரு. ந. தங்கவேல் (பெருந் தலைவர்), ச. அஜித், திரு. வீ. கணேசராஜா (அதிபர்), திரு. பொ. மகேஸ்வரன் (பிரதி அதிபர்), திரு. இ. ரகுபதி (பெரும் பொருளர்)

**முதல் வரிசையில் நிற்பவர்கள் (இடமிருந்து வலம்):** செ. சிவாநுஜன், த. விதுசன், ச. திரிபுரன், க. மகிந்தன், ஆ. நிரோஜன், வி. தர்சிககன், ச. நிவேதன், வ. நிலாஜனன், கு. நிசாந்தன், ஸ். பிரசாந், த. பிரவீந்

**பின் வரிசையில் நிற்பவர்கள் (இடமிருந்து வலம்):** சி. சாகித்தியன், த. யதுசன், த. சிவ மைந்தன், பே. கபில், கு. பானுஜன், ப. ருபலவன், ர. சிந்துஜன், இ. குகன்ராஜ், த. சிவதர்சன்



சிவஞான வைரவர் ஆலயத்தில் சிவராத்திரி தினத்தன்று
சமய தீட்சை அனுட்டிக்கப்பெற்றது.



திரு. ஆறு திருமுருகன் அவர்கள் கல்லூரி அன்னைக்குக் காணிக்கையாக வழங்கிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் திருவுருவச் சிலையை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் 30.01.2003 அன்று திரைநீக்கம் செய்து வைத்தார்.



கல்லூரி மட்ட விஞ்ஞானக் கண்காட்சி – 2008



யாழ்ப்பாண இந்துக் கல்லூரியின் தரம் 6 – 9 வரையான மாணவர்களின் "செயன்முறைத் திறனும் தொழில்நுட்பத் திறனும்" பாடக் கண்காட்சி 28.07.2008 அன்று நடைபெற்றது.

## அதிபரின் செய்தி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 1937 ஆம் ஆண்டு யூலை மாதம் இந்து இளைஞன் என்னும் சஞ்சிகை வெளியிடப்பட்டது. அக்காலத்தில் அதிபராக விளங்கிய திரு. வி. ஆசைப்பிள்ளை அவர்களின் வழிகாட்டலில் கதிரவேலு என்பவர் இதழாசிரியராக விளங்கினார். யாழ் இந்து அன்னையின் இந்து இளைஞன் இலக்கியக் கோவையில் பல அறிஞர்கள், எழுத்தாளர்கள், புகழ்பூத்த படைப்பாளிகளை உருவாக்கிய இந்து இளைஞன் மேலும் புதிய மலராக இன்று மலர்வதுகண்டு அகமிக மகிழ்கின்றேன்.

எமது கல்லூரியில் கற்கும் மாணவர்கள் அனைவரும் மீத்திறன் மிக்கவராவார்கள். இவர்களது கல்வி வளர்ச்சி சர்வதேச கல்வித் தரத்திற்கேற்ற வகையில் வீரியம் பெறுவது அவசியமாகும். இதற்குரிய பௌதீக வளங்களை வழங்க வேண்டியுள்ளது இன்றைய எமது கடமையாகும். அந்தவகையில் கணினிக் கல்விக் கற்றலுக்கு அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இதனை இன்று முழுமையாக ஆற்றுப்படுத்த வேண்டியுள்ளது. தற்போது எமது கல்லூரியில் 25 கணினிகள் உபயோகத்திலிருந்தாலும் மிகப் பழமை யானதாகவும் பழுதடைந்ததாகவும் காணப்படுவதால் கற்றலுக்குப் பொருந்துவனவாகக் காணப்படவில்லை.

எனவே நவீன கற்றல் சூழ்நிலைக்கேற்ற வகையில் கணினி கற்றலுக்குரிய அமை விடத்துடன் ஆசிரிய வளத்தையும் பெற்று கணினிக் கற்றலை வளப்படுத்தி ஊக்குவிக்க வேண்டும். இப்பணியை பழைய மாணவர்களும், பெற்றோர்களுமே நிறைவேற்ற வேண்டிய பணியாகும் என்பதைக் சுட்டிக்காட்ட விழைந்து நிற்கின்றேன்.

மேலும் கல்லூரியில் விளையாட்டுத்துறை மீளாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். விளையாட்டுத்துறை வளர்ச்சி கடந்த காலங்களில் குறைந்து வருவதாகப் பலராலும் குறை கூறப்பட்டு வருகின்றது. எனவே விளையாட்டுத்துறையின் விருத்திக்கு மைதான

விஸ்தரிப்பு பொருத்தமான பயிற்றுனர்கள் நியமித்தல், நவீனத்துவ செயற்பாடு என்பன மிக அவசியமாக அமைகின்றது. இவை கிடைக்குமாயின் கணிசமான வளர்ச்சியை ஏற்படுத்த முடியுமென நம்புகிறேன். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வரலாற்றுப் பதிவுகளை தகவல்களை சேகரித்து இன்றைய மாணவர்களது அறிவு ஆற்றலை வளப்படுத்தி பண்பாட்டை சீர்படுத்தி நடத்தைகளில் மாற்றத்தையும் திறன்களையும் மேம்படுத்து கின்றது.

இவ்வாண்டு இம்மலர் சிறப்பாக வெளிவருவதற்கு பங்காற்றிய மலர்க்குழுவினருக்கு வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவிப்பதுடன் எதிர்வரும் ஆண்டுகளில் இடைவிடாது வெளிவர எல்லாம்வல்ல ஞானவைரவப் பெருமானின் அருள் ஆசியை வேண்டுகின்றேன்.

உ

சிவமயம்

# இந்து இளைஞன்

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர் வருடாந்த வெளியீடு

மலர்: 62 - 68 | 2008 | இதழ்: 137 - 143

## உணர்வுகள்

நூற்றாண்டு கடந்து சரித்திரம் படைத்து ஓர் ஒளிர்மிகு கழகமாக திகழ்கின்றது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி. எமது கல்லூரியின் காலக்கண்ணாடியாகத் திகழும் வரலாற்று பெருமைமிக்க மாணவர் வருடாந்த வெளியீடு இந்து இளைஞன் ஆகும். வைரவிழா மலர் கடந்து அதன் பின்னர் சிறு இடைவேளைக்குப் பின்னர் மீண்டும் வெற்றிநடை போடுவதையிட்டுப் பெருமையும் பூரிப்பும் அடைகின்றோம்.

ஆயிரமாயிரம் அறிஞர்களை, பெரியோர்களை, சகலதுறை வல்லுநர்களை உரு வாக்கி அவர்கட்கெல்லாம் உணர்வூட்டி பெருமை கண்டவள் எமது இந்து அன்னை. அவளின் சாதனைகளையும் அச்சாதனைகளை நிகழ்த்திக் கொண்டிருப்பவர்களையும் இங்கு குறிப்பிடுவதே சாலச்சிறந்தது ஆகும். எது எவ்வாறாகினும் எமது இந்து அன்னை யின் மைந்தர்கள் நிகழ்த்தும் சில சாதனைகள் இலைமறை காய்களாக மறைந்து கிடப்பது நாம் அனைவரும் அறியவேண்டிய உண்மை. இவை என்றோ ஒருநாள் **"இந்து இளைஞனில்"** பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும் என்பதில் ஐயமில்லை.

வளர்ந்து வரும் எமது தமிழ்ச் சமூகம் எனும் அழகிய கோபுரத்தைத் தாங்கும் தூண்களாக விளங்கும் இந்து அன்னையும், சிற்பிகளாகத் திகழும் அன்னையின் ஆசான்களும் சிற்பங்களாக மிளிரும் அன்னையின் மைந்தர்களும் **"தமிழன் என்றோர் இனம் உண்டு. தனியே அவர்க்கோர் குணமுண்டு"** எனும் வார்த்தைகளை மெய்யாக்க அன்றி லிருந்து இன்றுவரை இலட்சியக் கனவுகளுடன் பயணித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் மிகையாகாது.

மாணவர்கட்கு உரிய விழுமியங்களில் இருந்து விலத்தி தமது எதிர்கால இனிய கனவுகளை உடைத்தெறிந்து இப்படித்தான் வாழவேண்டும் என்பதை விடுத்து, எப்படியும் வாழலாம் என்று வாழும் மாணவர் சமூகத்தை விழித்தெழச்செய்து சமுதாயத்தை உரு வாக்கும் சிலையும் நீ, சிற்பியும் நீ எனப் புரியச் செய்யவேண்டும்.

சிலைகளில் படிந்த கறைகளைக் களைந்து சிந்தனைக்கு ஒளியூட்டி விழித்தெழுவதே எமது இன்றைய தேவை. ஏனெனில் ஒளிமயமான எதிர்காலம் எமக்காகக் காத்திருக் கின்றது.

நூற்றாண்டு கடந்துவிட்டோம். அன்றுமுதல் இன்றுவரை எமது இந்து அன்னையின் மலர்ச்சிக்காக வியர்வைகளை, குருதிகளைச் சிந்திய அன்னையின் அதிபர்கள், ஆசிரியர்கள், பழையமாணவர்கள் அனைவருக்கும் சிரம் தாழ்த்துகின்றோம்.

சுயவிருப்பங்களை மறந்து அன்னையின் எழுச்சிக்காக நாம் அனைவரும் ஒன்றி ணைய வேண்டியதே காலத்தின் தேவை. சரித்திர சஞ்சிகையின் இதழாசிரியர் என்ற உறவில் என் உணர்வுகளை எழுத்திலே முடிந்தவரை வடித்து பகிர்ந்து கொண்டேன். புரிந்துகொள்வீர், உணர்ந்து கொள்வீர் என்ற நம்பிக்கையுடன் விடைபெறுகின்றேன்.

## அன்பு

பிரேமசங்கர் சந்திரு
Grade - 6D

அன்பை வளர்க்க வேண்டும் – தம்பி!
அன்பைப் பெருக்க வேண்டும் – தம்பி!
உன் போல் பிறரை எண்ணி – நல்ல
அன்பு காட்ட வேண்டும் – தம்பி!

பாம்புக்கும் கீரிக்கும் உள்ளது பகை
பெற்றோருக்கும் பிள்ளைக்கும் உள்ளது – அன்பு
எல்லா சமயங்களாலும் போதிக்கப்படுவது – அன்பு
நாம் ஏழைகளுக்கு காட்ட வேண்டும் – அன்பு

ஜீவன்களிடம் இருப்பது – அன்பு
உயிர்களுக்கு நாம் காட்ட வேண்டியது – அன்பு
கெட்ட குணத்தை அகற்றுவது – அன்பு
நேயம், பற்று என்ற பட்டத்தைப் பெற்றதும் – அன்பு

அன்பை ஆராதிக்காத எவரும் இல்லை
அன்பைப் பற்றி கவிதை எழுதாத கவிஞரும் இல்லை
அன்பில்லாமல் நானில்லை நீயுமில்லை
அன்பில்லாமல் இந்த உலகமே இல்லை

அன்பே சிவம்

## வீரத்துறவி சுவாமி விவேகானந்தர்

யோ. சுவஸ்திகன்
தரம் - 6F

சுவாமி விவேகானந்தர் 1863 ஆம் ஆண்டு தை மாதம் 12 ஆம் திகதி இந்தியாவில் வாழ்ந்த வழக்கறிஞரான விஸ்வநாதருக்கும் புவனேஸ்வரிதேவியாருக்கும் மகனாக அவதரித்தார். இவரது இளமைப் பெயர் நரேந்திரனாகும். சிறுவயதிலேயே இவர் குறும்புத்தனம் மிக்கவராகக் காணப்பட்டார். சிறுவயதில் தெய்வ விக்கிரங்களுக்கு பூசை செய்வதையே தமது விளையாட்டாகக் கொண்டார்.

அவருக்கு ஞாபகசக்தி மிக அதிகம். அதனால் குறுகிய காலத்தில் அதிக நூல்களைக் கற்றார். அவ்வாறே கிரேக்க தத்துவம், ஜேர்மன் தத்துவம் என்பன

வற்றைக் கற்று பி. ஏ பரீட்சையில் சித்தி யடைந்தார்.

தனது பதினெட்டு வயதில் இராம கிருஷ்ணரை தமது குருவாகத் தேர்ந்தெடுத் தார். தமது மனதிலே கடவுள் பற்றிய சந்தேகத்திற்கு குருவிடம் தெளிவு பெற்றார். இதனால் ஞானத்தையும் பெற்றார்.

1886 ஆம் ஆண்டு இராமகிருஷ்ணரின் மறைவிக்குப் பின்பு அவரது பொறுப்புக்களை நரேந்திரனே ஏற்க வேண்டியாயிற்று. குரு வின் விருப்பப்படி சமூகத்திற்கு சேவையாற்ற துறவு வாழ்வை மேற்கொண்டார்.

"சமயம் வாழ வேண்டுமானால்!
சமூகம் வாழவேண்டும்"

என்பதே இவரது தத்துவமாகும்.

இவர் 1897 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்து **'நமது மதம்'** என்ற தலைப்பில் சொற் பொழிவு ஆற்றினார். அதுபோல அமெரிக்கா சென்று சிக்காக்கோ மகா நாட்டிலும் உரை யாற்றினார். இவ்வாறாக உலகெங்கும் சைவ சமயத்தை கட்டியெழுப்பிய பெருமை அவரையே சாரும்.

## மீண்டும் பொழியும் அந்த மழை

*சி. ஹரிவிக்னேஸ்*
தரம் – 7C

மழை பல துளிகளாக மண்ணில் விழும்
அத்துளிகளினால் தாவரங்கள் செழிப்பாகும்
இம் மழைத்துளிகளால் விவசாயி மனம் மகிழ்வான்
துளிகள் வெள்ளமாக மாறி குளம், குட்டைகளை நிரம்பும்
குட்டைகள் நிரம்பி நீர் வயலுக்குச்செல்லும்
நெற் பயிர்கள் வளர உதவும்
வளர்ந்த பின் நெல் மணிகள் கிடைக்கும்
வெள்ளமான மழைத்துளிகள் வெயிலில் ஆவியாகி வானம் செல்லும்
மீண்டும் பொழியும் அந்த மழை.

## தகவற் தொழில்நுட்பம்

*ஆ. ஹரிசங்கர்*
தரம் – 7A

மனிதன் தோன்றிய காலத்திலிருந்து இற்றைவரையான காலப்பகுதியை வர லாற்று ஆசிரியர்கள் பல்வேறு யுகங்களாகப் பிரித்து ஆராய்கின்றனர். அதன்படி நாடோடி யுகம், விவசாய யுகம், கைத்தொழில் யுகம், தகவற் தொழில்நுட்ப யுகம் என்பவையே அவையாகும். எனவே நாம் தற்பொழுது வாழும் யுகம் தகவற் தொழில்நுட்ப யுக மாகும். தகவற் தொழில்நுட்பம் என்றால் என்ன என்பதை முதற்கண் நோக்குவோ மாயின் கணனித் தொழில்நுட்பமும், தொடர் பாடல் தொழில்நுட்பமும் இணைந்து உரு வானதே தகவற் தொழில்நுட்பமாகும்.

தகவல் இது ஓர் ஆழமான கருத்துரு வாக்க இயந்திரம். வார்த்தைகளின் வர்ண விளையாட்டில் இன்பங் கொள்ள வைக்கும் இனிய பொக்கிசம். மனிதருக்கு மனிதர் கருத் தைப் பரிமாற்றிக் கொள்ளும் மேலான படைப்பாக்கம் என்பது சாலப்பொருந்தும்.

ஒலி எழுப்பி, ஒளிபரப்பி, புகைபோக்கி, பறவைகளை தூது அனுப்பி தகவல்களைப் பரிமாறிக்கொண்டனர். நம் முன்னோர்கள் காலப்போக்கில் இச் செயற்பாடுகளிலே அறி வியல் பூர்வமான கவிவு நிலை ஏற்பட்டு புதிய தொழில்நுட்ப முறைமைகள் கண்டறியப்

பட்டன. இதற்கு மூலகாரணமாக அமைந்தது விஞ்ஞானத்தின் விந்தைகளே ஆகும்.

புதுமை உலகிலே கருத்தப் பரிமாற்ற முறைமைகளில் புதிய அணுகுமுறைகள் கையாளப்படுகின்றன. கணனியின் வருகை இவையாவற்றின் வளர்ச்சியிலும் மேலான பங்காற்றி வருகிறதெனலாம். தகவல்களைப் பரிமாற்றிக் கொள்வதிலே தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை என்பவற்றோடு முக்கியமாக கணனியும், தொலைபேசி இணைப்பும் இணைந்து உருவாக்கிய **"இணையத்தளம்"** முக்கிய பரந்த, விரிந்த செயற்பாட்டிற்கு உறுதுணை வகிக்கின்றது எனலாம். காலம், நேரம், தேவை, விரைவு என்பவற்றை முதன்மைப்படுத்துவதாகப் புதிய தொழில்நுட்ப அடிப்படைகளில் தகவல் பரிமாற்றம் மேற்கொள்ளப்படுவது நாம் அறிந்தவையே.

உலகையே உள்ளங்கைக்குள் கொண்டுவரும் அளவுக்கு கையடக்கத் தொலைபேசிகளில் இணையத்தள வசதி ஏற்படுத்தி கவிஞர்களின் கற்பனைக்குக் கருத்துருவாக்கம் கொடுத்திருக்கிறது. இக் கைத் தொலைபேசி, தகவற் தொழில்நுட்ப வளர்ச்சியின் புதிய பரிணாமம். செய்தித் துறைக்கு, செய்ம்மதித் தொழில்நுட்பத்தையும் இணைத்து செயற்றினாக்கியது இத்தகவற் தொழில் நுட்பம். உலகின் ஒரு மூலையில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளை நேரடியாக நாம் பார்த்து இரசிக்க இச் செய்ம்மதித் தொலைக் காட்சிச் சேவை நமக்கு வரப்பிரசாதம்.

தகவற் தொழில்நுட்பம் இன்று பல் வேறு துறைகளிலும் தனது செல்வாக்கினைச் செலுத்தி வருகிறது. மருத்துவத்துறை, பொறியியல்த்துறை, வணிகத்துறை, [illegible] துறை, நிருவாகத்துறை என [illegible]ந்துறைகளிலும் இதன் செல்வாக்கு அதிகரித்து வருகிறது. காகிதாதிகள், கோப்புகள், அலுமாரிகள் போன்றவற்றால் நிறைந்திருந்த அலுவலகங்களை காகிதங்களற்ற அலுவலகமாக மாற்றியது இத்தகவற் தொழில்நுட்பம் என்றால் அது மிகையாகாது. வணிகத்தைத் திறம்பட நடாத்த உதவும் வங்கித்துறையானது தனது நிதிப்பரிமாற்றப் பணிகளுக்கு தகவற் தொழில்நுட்பத்தை இணைத்து வெற்றிகாமாகப் பணியாற்றுகிறது.

இலத்திரனியல் வணிகம் இல்லத்தரசிகளும் இல்லங்களில் இருந்து வணிகப் பணியாற்றக்கிடைத்த அரிய சந்தர்ப்பம். இன்றைய **"உலக மயமாதல்"** என்ற செயற்பாட்டு நிகழ்விலே தகவற்தொழில்நுட்பமே முன்னனி வகிக்கின்றது.

அதாவது கணனி வலையமைப்பிலே உலகம் சுருங்கி ஓர் கிராமமாக இயங்கி வருவதும் ஒரு நாடு இன்னோர் நாட்டின் மீது செல்வாக்குச் செலுத்துவதும் அறிவியல் பூர்வமான கற்கைகள் போன்ற நவீன அறிவியல் அறிவுகள் யாவுமே தகவற் தொழில் நுட்பத்தின் பரிணாம வளர்ச்சியினை எமக்குக் காட்டி நிற்கின்றன.

எனவே அறிவோம் புதிய தகவலைப் படைப்போம் புதிய சாதனைகள் எனக் கூறி விஞ்ஞானத்தின் விந்தையது சிந்தைதனை வளர்க்கிறது. அதைக் கண்ணாரக் காண்பதற்கும் நெஞ்சார வியப்பதற்கும் தகவற் தொழில்

இலட்சியத்தில் ஆழ்ந்து ஈடுபட வேண்டும் - ஒரு கணம் ஈடுபடுவதல்ல ; அமைதியாகவும் குலையாத முயற்சியோடும் நிலையாகவும் ஈடுபடவேண்டும். சாதகப் பறவை இடி மின்னல்களுக்கு இடையிலும் ஆகாயத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்கும். அது மழை நீரைத் தவிர வேறு நீரைக் குடிக்காது அத்தகைய ஈடுபாடே தேவையானது.

- சுவாமி விவேகானந்தர் -

## கல்வியின் சிறப்பு

✍ க. துலாஞ்சன்
7A (2008)

**"கல்வி என்பது கல்லுதல் என்று பொருள்படும்.** அதாவது உள் ஆழுதல் என்னும் கருத்துடையதாகும். மறைந்து இருப்பதனை தோண்டி எடுத்தல் ஆகும். எடுக்க எடுக்க குறையாத செல்வத்துள் ஒன்றுதான் இக்கல்வி. இதனையே சுவாமி விவேகானந்தர் **"மனிதனுக்குள் புதைந்திருக்கும் பூரணத்தை வெளிப்படுத்துவதே கல்வி"** எனக் கூறி உள்ளார்.

அதாவது கல்லின் உள்ளே தீ இருப்பது போல அறிவும் ஆற்றலும் மனிதனிடத்தே இயல்பாக உள்ளத்தேதான் அமைந்திருப்பன. அவை சாதாரணமாக மறைந்து கிடக்கின்றன. அவற்றை மூடி இருக்கும் திரையினை அகற்றுவதே கல்வி என்கிறார்.

**"வெள்ளத்தால் அழியாது வெந்தழலால் வேகாது**
**வேந்தராலுங் கொள்ளத்தான் முடியாது"**

இப்பாடலூடாக விளக்கப்படுவது யாதெனில் வெள்ளத்தினாலே தீயினாலே அழியாததும் வேந்தரால் கைப்பற்ற முடியாததும் கொடுக்கக் கொடுக்கக் குறையாததும் கள்வரால் கைப்பற்ற முடியாததும் பாதுகாப்பதற்கு எளிதாகவும் அமைந்ததே கல்விச் செல்வமென அழகாகக் கூறப்படுகிறது.

**"மன்னனும் மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்**
**மன்னனிற்கற் றோன் சிறப்புடையன் - மன்னனுக்குத்**
**தன்றேசமல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்**
**சென்றவிட மெல்லாங் சிறப்பு"**

என்று ஔவைப்பிராட்டியார் கூறுவதிலிருந்து மன்னனுக்கு தன் தேசத்தில் மட்டும் தான் சிறப்புண்டு எனவும், குற்றமறக் கற்றோனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்புண்டு என்று தனது உள்ளக்கிடைக்கையை வெளிப்படுத்துகின்றார்.

கல்வி, வாழ்நாளை வீணே கழிப்பதைத் தவிர்க்கும் சிரஞ்சீவி மருந்தாகும். உலகில் மக்கள் நெறியறிந்து வாழும் வாழ்வே வாழவெனப்படுகின்றது. மக்கள் சிறந்து வாழ்வதற்கும் பகுத்தறிவே மூல காரணமாகின்றது. அப் பகுத்தறிவினை வளர்த்து மனிதனை மனிதனாக வாழச் செய்யவல்ல அருமருந்து கேடில் விழச் செல்வமாகிய கல்வியாகும்.

**"குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்**
**மஞ்சள் அழகும் அழகல்ல நெஞ்சத்து**
**நல்லம் யாமென்னும் நடுவு நிலைமையாற்**
**கல்வீ யழகே அழகு."**

என்று நாலடியார் என்னும் சிறந்த பழைமையான நூலிற் கூறுவதிலிருந்து கல்வி அழகே **"உண்மையான அழகு"** என உணரப்படுகிறது.

**"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு"**

என அழகாக வள்ளுவப் பெருந்தகையும்,

**"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'**

என ஔவைப்பிராட்டியும் கல்வியின் மகத்துவம் பற்றி கூறுவதிலிருந்து அதாவது எண்ணெனெப்படும் கணக்கும் எழுத்தெனப் படும் மொழியும் (இலக்கியமும்) உயிர் வாழும் மக்களுக்கு கண்கள் எனப் போற்றிக் கற்க வேண்டியதாகும்.

**"கல்வி நலமற்ற ஊர்களை எரியினுக்கு இரையாக்கி விட வேண்டுமென்றார்"** மகாகவி பாரதியார்.

வெறும் புத்தகப் படிப்போ அன்றி எழுத்துப் படிப்போ கல்வி என்று கூறிவிடமுடியாது. தனக்கென வாழாது பிறர்க்கும் பயன் படும் எவனும் கல்வியறிவு படைத்தவனாகவே உள்ளான். எனவே வாழ்க்கையே கல்விக்காக கல்வியே வாழ்க்கைக்காக என வாழக் கற்றுக்கொள்வோம். சமுதாயத்தையோ, பண்பாட்டையோ சீரழிக்காது சமூகத் திறமை உள்ளவராகவும் உயர்ந்த பண்பாட்டை உடையவராகவும் மனிதனை வழிநடத்தி செல்வதே கல்வியின் சிறப்பாகும்.

# வாசிப்பின் பயன்கள்

✍ *N.* **சுதர்சனன்**
*7A*

**"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்"** என்ற கூற்று வாசிப்பதன் பயன்பாடு பற்றிச் சுட்டி நிற்கின்றது. பிள்ளைப் பருவத்திலிருந்து தகவல்களை ஈட்டிக்கொள்வதற்கும் மொழிப் பயிற்சியின் செம்மைக்கும் வாசிப்பு துணை போகின்றது. மேலும் இளையவர்களின் கலை நாட்டம் வளர்ச்சி பெறுவதற்கும் அத்தியாவசியமான ஒன்றாக இது திகழ்வதை நாம் அறியமுடியும்.

இளம் சிறார்கள் தம்மைச் சுற்றியுள்ள உலகத்தைப் புரிந்து கொள்ள பாடசாலை, கல்வி நிறுவனம், சமூகச் சூழல், மத ஸ்தாபனங்கள் என்பன உதவுகின்றன. சிறுவர் இளைஞர்களாக மலரும் போது அவர்களது உலகக் கண்ணோட்டம் எத்தகையதாக ஆகின்றதோ அதைப் பொறுத்தே தனியாள் ஆளுமை விருத்தியும் ஏற்படுகின்றது. இந்தக் கண்ணோட்டம் பலவகையில் பெறப்பட்டாலும் வாசிப்பின் பங்கு கணிசமானது.

ஆளுமை செப்பனிடப்பட்டு சிறந்த மனிதர்கள் உருவாக வேண்டுமாயின் சரியான, ஆரோக்கியமான கருத்துக்கள் மனித மனதிலே பதிக்கப்படவேண்டும். தொழில் சார் நிபுணத்துவத்திற்கான பயிற்சிக்கு மட்டுமல்லாது சிறந்த சமூகத்தினைக் கட்டியெழுப்புவதற்கும் வாசிப்பு வேண்டப்படும் ஒன்றாகவே அமைந்து விடுகின்றது.

இங்கு ஆரோக்கியமான செழுமை மிக்க உலகக் கண்ணோட்டம் எது என்பது குறித்து பலரும் தமக்குள் வேறுபடலாம். இது குறித்து அறிஞர்களிடையே வாதப் பிரதி வாதங்கள் நடந்தவாறே உள்ளன. இனியும் நடந்தேறும். இங்கு கருத்துக்கள் வரலாற்றுப் பின்னணியில் வைத்து நோக்கப்படுவது முக்கியமாகும்.

அந்தவகையில் அறிஞர் பலர் பெருமளவு பங்காற்றியுள்ளனர். அவர்களுள் பாரதியின் சிந்தனைகள் இருபதாம் நூற்றாண்டிலே மதிக்கப்பட்டன. பாரதி ஆய்வுகள் இதைப் புலப்படுத்தி நிற்கின்றன. **"அச்சமில்லை, அச்சமில்லை அச்சமென்பதில்லையே"** என்று முழங்கியவன் பாரதி. பிறிதோர் இடத்தில் பெண்ணுரிமை பேசும் பாரதி **"மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையை கொழுத்துவோம்"** என்றும், வேறோரிடத்தில் **"தனியொருவனுக்குண வில்லை எனின் ஜெகத்தினை அழித்திடுவோம்"** என்றும் ஆவேசப்படுகின்றான். இவற்றையெல்லாம் வாசிக்கும் ஒருவன் இக்கருத்துக்களால் கவரப்பட்டு அவற்றை

உள்வாங்கிக் கொள்கிறான். இக்கருத்துக்கள் அவனது நடத்தைக் கோலங்களில் சிறப்பான செல்வாக்கை ஏற்படுத்த முனையும்.

மேலும் கலை இலக்கியம் பயில்விற் கும் மொழி துணை செய்கின்றது. கலை களை ஆழ்ந்து ரசிக்கவும், அவற்றை உரு வாக்கவும் மொழிச் செம்மையும், செழுமை யும் அவசியம். கலை அனுபவம் தரும் இனிமையான உணர்வுகள் எம்மிடையே அலாதியான ஆனந்தத்தை, பரவசத்தை ஏற் படுத்தி மனதிற்கு ஒளியைக் கொடுக்கின்றன. பாரதியிடத்தும், பாரதிதாசனிடத்தும், மகா கவியிடத்தும் இந்த அழகின் சிரிப்பைக் கண்டு கொள்ளலாம். இங்கு குறிப்பிடப்பட்ட வர்களை விடப் பலர் எம்மிடையே உண்டு.

இவ்விதமாக இலககயச சுவையை உள்ளாழ்ந்து இரசிப்பதற்கும், புதிய படைப் பாக்கங்களை ஆக்குவதற்கும், தகவற் கல்வி அறிவை பெற்றுக்கொள்ளவும், கணனி யுகத்தின் சாதனைகளை எட்டவும், விந்தை புரியும் விஞ்ஞான விநோதங்களை ஆய்வு செய்யவும், பிரயோகிக்கவும் அடிப்படை பயிற்சியாக வேண்டப்படுவது வாசிப்புச் செய்ம்முறை.

உலகியல் நடப்புச் செய்தி ஊடகங் களான பத்திரிகை வாயிலாக வெளிக்கொண ரப்படுகின்றது. இவற்றை அறியவும் வாசிப் புத் துணை செய்கின்றது. சிறந்த நூல்களை வாசிக்கும்போது அது இட்டுச் செல்லும் அனுபவச் சூழல் தரும் சுகானுபவம் உள்ளக் களிப்பை எமக்கு ஏற்படுத்துகின்றது. சிறு கதை, கவிதை, நாவல்கள் என்பன கூறும் கதை மாந்தர் அவர் தம் மானிட உணர்வுகள், அவலங்கள் எம்மைத் தொற்றி இனிமையான நெஞ்சை நெகிழவைக்கும் ஆனந்தம், அன்பு என்பவற்றை மட்டுமன்றி துயரம், சோகம், ஏக்கம், தவிப்பு என நவரச உணர்வுகளை யும் ஏற்படுத்தி நிற்கும்.

பௌதீக, இரசாயன, இயற்கை, உயிரியல் விஞ்ஞானம் என்பனவெல்லாம் எமது வாழ்க்கையில் முன்னேற்றத்திற்கு உதவியுள்ளன. மருத்துவ உலகின் வளர்ச்சி மனித ஆயுள் எல்லையை நீடிக்க உதவி யுள்ளது. பொறியியல் போன்ற துறைகள், சோதிடம், தர்க்கம், தத்துவம், மானிடவியல், உளவியல், பேர் உளவியல் என அறிவுத் துறைகள் விரிந்து செல்கின்றன.

இன்று 21 ஆம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைத்துள்ள நாம் கணனிப் பயன் பாட்டில் கூட வளர்ந்து வருகின்றோம். இத் துறைகளை ஆழ்ந்து துறைபோக விரும்பும் ஒருவர் இவற்றை நூல்கள் வாயிலாக கற்க வேண்டிய அவசியம் உண்டு. இவ்வாறு நோக்குகையில் கற்றல் செயற்பாட்டில் ஓர் அங்கமாக வாசிப்பு இருக்கின்றது என்ற உண்மையை எம்மால் புரிந்து கொள்ள முடியும்.

சுருக்கமாகக் கூறுவோமானால் கற்றல் செயற்பாட்டுக்கும், ஆளுமை விருத்திக்கும், சிறந்த மனிதப் பண்புகள் உருவாகவும், முழுமையான நிறைவான ஆற்றல்களை எட்டுவதற்கும் வாசிப்பு உதவுகின்றது. இவ் வாறு அனைத்து அறிவியல் வளர்ச்சிக்கும் உதவும் வாசிப்புப் பழக்கத்தைக் கடைப் பிடித்து பயனடைவோமாக.

"மதங்களால் வேறுபடாத கோயில் நூலகம்"
"கல்வி எனும் பெட்டகத்தின் திறவுகோல் நூலகம்"
"கல்விக் கடலைக் கடப்பதற்கு ஓடம் நூலகம்"

நூலகவாரம் - 2007 - கல்லூரி மட்ட மாணவர்
வாசக ஆக்கப் போட்டியில் வெற்றிபெற்ற வாசகங்கள்

- ஆக்கம் 7C-

# இந்துசமயமும் மனித வாழ்க்கையும்

✍ செ. சேந்தன்
தரம் - 7D

எமது வாழ்க்கைக்குச் சமயம் ஒரு பற்றுக்கோடாக அமைகின்றது. மக்கள் தமது வாழ்வில் நன்மை ஏற்பட்டாலும், தீமை ஏற்பட்டாலும் எல்லாமே இறைவன் செயல். அவன் இன்றி ஓர் அணுவும் அசையாது என்று அமைதி அடைகின்றனர். இதனால்தான் மணிவாசகர் **"நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ. இதற்கு நாயகமே"** என்று பாடியுள்ளார்.

சமயநெறியானது மனிதனின் விலங்குப் பண்பினை நீக்கி, மனிதத் தன்மையை வளர்த்துத் தெய்வத் தன்மையை ஏற்படுத்துவதாகும். எமது சமயத்தின் அடிப்படைத் தத்துவம் அன்பு நெறியே. இதனையே திருமூலர் **"அன்பே சிவம்"** என்று கூறியுள்ளார்.

எமது சமயம் அன்பின் வடிவமாக இறைவனைக் காண்கின்றது. அன்பின் வழியாக இறைவனைக் காட்டுகின்றது. இவ்வன்பை வளர்ப்பதற்காக வாழ்க்கையை இல்லறம், துறவறம் என இருநிலைகளில் வைத்து நெறிப்படுத்துகின்றது. ஒவ்வொரு நிலைகளிலும் செய்யவேண்டிய நெறிகளை வகுத்துக் கூறுவதோடு, அவற்றைச் செய்யத் தவறும் போது கிடைக்கும் பலன்களையும் கூறி நிற்கின்றது.

சமய நெறியுடனான வாழ்க்கையையே எமது மகான்களும் பெரியோர்களும் வாழ்ந்துள்ளனர். அவர்கள் வாழ்ந்த வாழ்வியல் எம்மை நெறிப்படுத்துகின்றது. அவர்கள் யாவரும் உலகியலுள் வாழ்ந்தாலும் அதனுள் மூழ்கி விடாமல் ஆன்மீக வாழ்வைத் துய்த்துள்ளார்கள் என்பதில் ஐயமில்லை.

மானிடப்பிறவி எடுத்தவர்கள் உடலாலும், அறிவாலும், மனத்தாலும் சக்திகளை ஒன்றுபடுத்தி அவற்றை ஓர் ஆன்மீக சக்தியாக உருவாக்க வேண்டும். அதுவே தெய்வீக அன்பாக மாறிவிடுகின்றது.

கண்ணப்பநாயனார் திருக்கோயில் வழிபாடு செய்தாரா? சிவபெருமானை வழிபட்டாரா? சிவபுராணம் படித்தாரா? ஒன்றுமில்லையே. பிறப்போ வேடுவகுலம். தொழிலோ வேட்டையாடுதல். முதன்முறையாக வேட்டையாடக் காட்டிற்குச் சென்றபோது அங்கு சிவலிங்கத்தைப் பார்க்கின்றார். பார்த்த மாத்திரத்திலேயே எல்லாவற்றையும் மறக்கின்றார். தன் வாழ்க்கையையே சிவனுக்கு அர்ப்பணித்து விடுகின்றார். சிவவடிவம், சிவசின்னம் கண்ணப்பருடைய உள்ளத்திற் பெரிய மாறுதலை ஏற்படுத்தியது. ஆறு நாட்களிலேயே ஞானம் பெற்றுப் பரமுத்தி அடைந்தார்.

எனவே சமயம் வேறு, வாழ்க்கை வேறு என்று கருதுவது தவறு. வாழ்க்கையோடு இயைந்ததுதான் சமயம். அத்துடன் வாழ்க்கையை வழிப்படுத்துவதும் வளப்படுத்துவதும் சமயமே என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

- திருவள்ளுவர் -

# கல்வியின் மகத்துவம்

பி. குணவரன்
தரம் - 8A'

உலக வாழ்வை உயர்வடையச் செய்யும் செல்வங்களை இரண்டாக வகுக்கலாம். ஒன்று பொன், பூமி, மண்விளைதானியங்கள் முதலிய பொருட்செல்வம். மற்றையது மனங்களில் அறியாமை இருள் அகற்றி அறிவொளி ஏற்றுகின்ற கல்விச் செல்வம். ஆனால் இவற்றுள் கல்விச் செல்வமே சிறந்ததாகும். இதைத்தான் வள்ளுவர்,

**"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றை யவை"**

என்று கூறினார். இதன் பொருள் யாதெனில், ஒருவனுக்குக் கல்வியே சிறந்த செல்வமாகும், மற்றையவை எல்லாம் செல்வங்கள் அல்ல என்பதாகும்.

**"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு"**

என்று கூறிய வள்ளுவர் நாம் எவ்வளவுக்குத் தோண்டுகின்றோமோ அந்தளவிற்கு நீர் ஊறும். அதேபோல நாம் எவ்வளவு கற்கின்றோமோ அதன் அடிப்படையில் எமது அறிவு வளர்ச்சியும் வளரும்.

இப் பிறவியில் நாம் கற்ற கல்வி ஏழு பிறவிக்கும் தொடர்ந்து இன்ப வாழ்வைத் தரும். இதைத்தான் வள்ளுவர்,

**"ஒருமைக்கண் தான்பெற்ற கல்வீ ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப் புடைத்து"**

என்று கூறினார். இதன் பொருள் வள்ளுவரின் தீர்க்கதரிசனத்தை எடுத்துக் காட்டுகின்றது.

பொருட்செல்வமானது தீயினால் பொசுங்கத்தக்கது, கள்வரால் கொள்ளையிடப்படவல்லது, நீரினால் அடித்துச் செல்லப்படவல்லது. சாதாரணமாகக் கூறுவதானால் நிலையற்ற தன்மை வாய்ந்தது. ஆனால் சிறந்த செல்வமாகிய கல்வியோ மாறான தன்மைகளைக் கொண்டது. ஒருவராலும் அழிக்க முடியாதது. கொடுக்குந் தோறும் குறையாதது. மாறாகப் பல்கிப் பெருகக்கூடியது.

**"மன்னனும் மாசறக் கற்றோனும் சீர் தூக்கின்**
**மன்னனில் கற்றோன் சிறப்புடையன்**
**மன்னனுக்கு தன் தேசமல்லாற் சிறப்பில்லை**
**கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு"**

என்று பாடினார் ஒளவையார். இதன் பொருள் யாதெனில் மன்னனுக்குத் தன் தேசத்தில் தான் சிறப்பு. ஆனால் கற்றோனுக்குச் சென்ற தேசமெல்லாம் சிறப்பு என்பதாகும்.

எனவே கல்வியின் மகத்துவத்தை உணர்ந்து, அதனைக் கற்று நற்பிரஜையாக வாழ்வோம்.

☆☆☆

# பரோபகாரம்

✍ பே. டினேஷன்
தரம் - 8A '

இவ்வுடல் பரோபகாரம் செய்வதற்காகவே உருவாக்கப்பட்டது.

ஆம்! பரோபகாரம் இவ்வுலகில் வாய்க்கப்பெற்றிருக்கும் பல வகையான நற்பண்புகளில் ஒன்றாகும். பரோபகாரம் என்பது பற்றி நோக்கின் அது ஒருவருடைய தேவை கருதி பலன் கருதாது உதவுதல் என்று கூறலாம். மேலே குறிப்பிடப்பட்டுள்ள பழமொழி சமஸ்கிருத மொழியில் உள்ள ஒரு பழமொழி ஆகும். இப் பழமொழியின் கருத்து முற்றிலும் சரியானது.

பணம் இருந்தால் மட்டுமே பரோபகாரம் செய்யலாம் என்று எண்ணுதல் தவறு. பணம் இல்லை ஆயினும் பிறரிடத்து அன்புடனும், இன்முகத்துடனும் பழகுதல் ஒரு பரோபகாரம் ஆகும்.

**"அன்புதான் இன்ப ஊற்று**
**அன்புதான் உலக ஜோதி**
**அன்புதான் உலகமகா சக்தி"**

அன்பு வழியான பரோபகாரத்தை மனிதர்க்கு மட்டுமன்றி உயிரினங்களாகிய மிருகங்கள், பறவைகள் போன்றவைக்கும் செய்யலாம். இதனால் நன்மையே விளையும்.

பரோபகாரம் பற்றி வள்ளுவர் கூறுவதாவது,

**"வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற்**
**றெல்லாம்**
**குறியெதிர்ப்பை நீர துடைத்து"**
குறள் - 221

அதாவது ஒன்றும் இல்லாத ஏழைக்கு ஒன்றை உவந்து கொடுப்பதே ஈகை (பரோபகாரம்). மற்றவர்க்கு கொடுப்பதெல்லாம் பிரதிபலனை எதிர் பார்த்து கொடுப்பதே ஆகும்.

அதுபோலவே பிறர்க்கு ஈயாது வைத்திருக்கும் பொருட்கள் அனைத்தும் பிறர்க்கு உதவி செய்பவரிடம் சென்று சேரும் என்ற கருத்திற்கமைய பின்வரும் பாடல் அமைந்துள்ளது.

**"பிறர்க்கு உதவி செய்யாப் பெருஞ்**
**செல்வம் - வேறு**
**பிறர்க்கு உதவி ஆக்குபவர் பெறாப் -**
**பிறர்க்குதவி**
**செய்யாக் கருங்கடல் நீர் சென்று**
**புயல்முகந்து**
**பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு"**

இப்பாடல் சிவப்பிரகாச சுவாமிகளால் இயற்றப்பட்ட நன்னெறி வெண்பாக்களைச் சேர்ந்ததாகும்.

ஆதி காலந்தொட்டே பல கொடையாளிகள் (பரோபகாரிகள்) வாழ்ந்துள்ளதாக இலக்கியங்கள் பலவற்றில் இருந்து அறிய முடிகிறது. அவர்களுள் பாரி, ஆய்ய, எழிலி, நள்ளி, மலையன், பேகன், ஓரி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் **"கடைஏழு வள்ளல்கள்"** எனச் சிறப்பிக்கப்படுகின்றனர். இவர்களுள் பாரி மன்னன் முதன்மை ஆனவர். இவர், செல்லும் வழியில் ஒருநாள் ஒரு முல்லைக்கொடி கொழுகொம்பற்று

வாடிவதங்கி இருப்பதைக் கண்டு மனம் வருந்தி தன் தேரையே அதற்கு கொழு கொம்பாகக் கொடுத்தார். இவரைப்போல் ஔவை மூதாட்டி காலத்தில் வாழ்ந்த அதிய மானும் சிறப்புப் பெற்றவர். அதாவது இவர் நீண்டஆயுள் வழங்கக்கூடிய ஒரு நெல்லிக் கனியை பசியால் வாடியிருந்த ஔவை யாருக்கு கொடுத்தார் என்று இலக்கியங் களில் இருந்து அறியமுடிகிறது.

எனவே, நாம் மற்றவரின் தேவை அறிந்து எம்மாலான உதவிகளை இல்லை யென்னாது வழங்குவோமாயின், மேல் உலகோர் தம் கதவைத் திறந்து வைப் பார்கள் என்பது திண்ணம்.

**"இல்லா இடத்தும் இயைந்த அளவினால்**
**உள்ள இடம்போல் பெரிது உவந்து - மெல்லக்**
**கொடையொடு பட்டகுணன் உடைமாந் தர்க்கு**
**அடையாவாம் ஆண்டைக் கதவு"**

நாலடியார்
அதிகாரம் (10)
ஈகை

## சித்திரக் கலையின் வளர்ச்சி

*அ. நிக்ஷன் ஜோராம்*
தரம் - *8B'*

கவின் கலைகளுள் சித்திரமும் ஒன் றாகும். ஒருவன் தனது மனதில் தோன்றும் எண்ணக்கருவை கோடுகளால் வரைந்து வர்ணம் தீட்டி மற்றவர்களுக்குப் புரிய வைப்பதே சித்திரமாகும். இதற்கு பேச்சு, எழுத்து தெரிய வேண்டியதில்லை. கண் களால் பார்த்தே அறிந்து கொள்ளலாம்.

சித்திரமானது மனிதன் கற்குகையில் வாழ்ந்த காலத்திலேயே ஆரம்பமாயிற்று. வேட்டையாடிக் களைத்து ஓய்ந்திருந்தபோது தனது பொழுதுபோக்காக மனதில் தோன்றி யவற்றை கோட்டுச் சித்திரங்களாகவும் வர்ணம் தீட்டியும் வரைந்து மகிழ்ந்தான். தாம் கண்ட வற்றையே காட்சிகளாக வரைந்தான். இதனால் மிருகங்கள், பறவைகள், வேட்டை யாடுதல் போன்ற காட்சிகளையே சித்திர மாகத் தீட்டியுள்ளான்.

இதன் மூலம் கற்கால மனிதன் வேட்டை யாடப் பயன்படுத்திய உபகரணங்கள், அதன் வடிவங்கள், அக்காலத்தில் வாழ்ந்த மிருகங்கள், பறவைகள் போன்றவற்றின் தோற்றங்களை இன்றும் நாம் காணக் கூடிய தாக உள்ளது. இவ்வாறு இவர்கள் பொழுது போக்காக வரைந்த ஓவியங்களின் பரிணாம வளர்ச்சியின் பயனாய் பண்டைய அரசர் களின் எண்ணக்கருக்களை அவர்களின் மாளிகைச்சுவர்கள், வழிபாட்டு இடங்கள் போன்றவற்றில் வரைவித்து தானும் வரைந்து பார்ப்போரையும் மகிழ்வித்து சித்திரக்கலை வளர்ச்சிக்கு ஊக்கமளித்துள்ளார்கள்.

காசியப்ப மன்னனால் சிகிரியாக் குகை யில் வரைவிக்கப்பட்ட ஓவியங்கள் இன்றும் அழியாப் புகழுடன் காணப்பட்டு நம் நாட்டுக்கு புகழைத் தேடித் தருகின்றன. இவ்வாறு வளர்ச்சி பெற்ற சித்திரக்கலையை அழியவிடாது பேணிப்பாதுகாத்து நமது பிற்கால சந்ததியினரும் பண்டைய கலாசா ரங்களை அறியவும் பார்த்து மகிழவும் வழிவகுப்பது நமது கடமையாகும்.

# சுனாமியும் பாதிப்புக்களும்

✍ C. V. Vinusanth J. Elilayan

உலகிலேயே இந்து சமுத்திர பிராந்தியம் மிகவும் அழகான பிராந்தியம். ஆனாலும் அங்குள்ள மக்கள் இயற்கை அனர்த்தங்களால் பல இன்னல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. குறிப்பாக 26 டிசம்பர் 2004 இல் நிகழ்ந்த சுனாமி ஆழிப் பேரலை அனர்த்தத்தைக் குறிப்பிடலாம். கண் இமைக்கும் நேரத்தில் ஆயிரக்கணக்கான உயிர்களை இது காவு கொண்டது. டிசம்பர் 26 ஆம் திகதி சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளில் இலங்கையும் ஒன்று. இவ்வனர்த்தம் மக்களின் பல்வேறுபட்ட சமூக, பொருளாதார, குடியியல், வாழ்வியல் ரீதியிலான கட்டுமானத்தில் குறுகிய காலத்திலோ அல்லது நீண்டகாலத்திலோ பாதிப்பை ஏற்படுத்தியுள்ளமையை நாம் அறிந்துகொள்ள முடியும். இது தவிர ஒரு நாட்டில் நடக்கவிருக்கும் அல்லது நடந்து கொண்டிருக்கும் இயற்கை அனர்த்தங்களை முன்கூட்டியே அறிந்து அவ்வனர்த்தத்திலிருந்து மக்களைக் காக்கவேண்டியது அந்நாட்டு இறைமையே என்பதையும் நாம் இங்கு வலியுறுத்தக் கடமைப் பட்டுள்ளோம்.

## பாதிப்புக்கள்

சுனாமி அனர்த்தம் ஏற்படுத்திய சேதம் என்று பார்க்கும் பொழுது

| | |
|---|---|
| உயிரிழப்பு | 30, 920 |
| காணாமற்போனோர் | 5, 620 |
| வீடுகள் | 72, 121 |
| மருத்துவ மனைகள் | 72 |
| மீன்பிடிப் படகுகள் | 15, 300 |
| பாடசாலைகள் | 182 |
| பாலங்கள் | 23 |
| வீதிகள் | 1615 km |

இவை தவிர இவ்வனர்த்தத்திலிருந்து தப்பிய மக்களிடமும் சில மனபாதிப்புக்களை அவதானிக்க முடியும்.

* குடித்தொகைப் பரம்பலில் மாற்றமும் வீழ்ச்சியும்
* குடும்ப சமனிலைத் தன்மை பாதிப்படைதல்.
* பொருளாதார இழப்புக்கள் பற்றிய கவலை
* அவயவ இழப்புக்கள் பற்றிய கவலை
* இயற்கை வளர்ச்சியிலான பாதிப்பு

பாதிக்கப்பட்ட மக்களில் சிலர் தற்கொலை முயற்சியை தேர்வு செய்கின்றனர். நாம் ஒற்றையர் அல்லவே. மனிதன் ஒரு சமூகப்பிராணி எனப்படுகின்ற போதிலும் அவன் தனிமையாக, தனது உணர்வுகளை தன்னுள் அடக்கிவாழ நினைக்கின்றான். இந்தப் போக்கே அவனை அவனுக்குவரும் சோதனைகளை எதிர்த்துப் போராட சக்தி இல்லாமல் செய்கிறது. அத்துடன் தற்கொலை முயற்சிக்கும் தூண்டுகின்றது. ஒருவர் தனிநபராக உயர்வதற்கும் முன்னேறுவதற்கும் அவனின் ஆளுமைத் தன்மை மாத்திரமன்று அதுதவிர அவன் உலகத்தின், ஒரு சமுதாயத்தின் அங்கமாய் இருப்பதால் தான் ஒருவரின் பிறப்புமுதல் இறப்புவரை ஏன் சுடுகாடுவரை சமூகம் அவரிடம் செல்வாக்குச் செலுத்துகின்றது. அவ்வாறில்லாமல் தான் ஒரு அனாதை என உணரும் / நினைக்கும் ஒருவரிடம் பல்வேறு நடத்தை மாற்றங்களை அவதானிக்கலாம். குறிப்பாக இவ்வனர்த்தத்தினால் பாதிப்படைந்தோரிடம் இவை காணப்படும்.

* பதட்டம்
* இலட்சியம் அற்றபோக்கு

* உணவில் நாட்டமின்மை
* எதிலும் ஆர்வமில்லா நிலை
* உடலில் சக்தி குறைந்தது போன்ற உணர்வு
* சுற்றுசூழல் தனிமையாகவும் வெறுமையாகவும் தோன்றுதல்
* எல்லாமே துண்டிக்கப்பட்டதான அனுபவம்
* தற்கொலை முயற்சி
* வாழ்வதற்கு எந்தக் காரணமுமே இல்லை என்கிற நிலை
* குடிபோதைக்கு அடிமையாதல்
* பாதுகாப்பு அற்ற உணர்வு
* இழந்த உறவுகளை மீளமீள நினைத்துக் கவலையடைதல்

## மீள்கட்டுமானம்

இலங்கையில் சுனாமி (Casestaly) மீள்கட்டுமானம் என்று பார்க்கும் பொழுது சுனாமி பற்றிய கற்கை அதாவது விடய ஆய்வு அவசியமாகிறது. அனர்த்தம் பற்றி ஆய்ந்து புனர்நிர்மாணப் பணிகளை முன் னெடுப்பது மீண்டும் ஒரு சுனாமியிலிருந்து எம்மைக் காப்பாற்ற முடியும். இவ் வகையில் சுனாமி புனர்நிர்மான செயன்முறையை இரண்டு விதமாக வகைப்படுத்தலாம்.

* நுண்பாக முறையியல் (Micro approach) ஒவ்வொரு தனிப்பகுதியையும் தனித்தனி சிறு கூறுகளாக அணுகுதல்.
* பெரும்பாக முறையில் (Macro approach) பிரதேசம். தொகுதி அடிப்படையில் அணுகுதல்.

நுண்பாக முறையியல் (Micro approach) கீழிருந்து மேலாகவும், பெரும்பாக முறையியல் (Macro approach) மேலிருந்து கீழாகவும் இரண்டு பொருத்தமான முறையில் செயற்படுத்தப்பட வேண்டும்.

புனர்நிர்மாண அணுகுமுறைகளை அணுகி இவ்வனர்த்தத்தினால் பாதிக்கப் பட்ட மக்களின் துயரங்களையும் மன வெம் மையையும் அவர்களுடைய சமூக, பொருளா தார மேம்பாட்டை உயர்த்துவது இந் நாட்டு அரசினதும் பொது நிறுவனங்களினதும் தலையாய கடமையாகும்.

பேரலையே "சுனாமி " எனும் வடிவில் வந்தது - அது
ஓரவஞ்சமின்றியே மூவினத்தைப் பறித்தது
தாரம் பிள்ளை தந்தை என்று வரிந்தெடுத்தது
வாரம் நான்கு கடந்தபோதும் உருக வைத்தது - அது
உருகவைத்தது .....
இறந்த மக்கள் சாந்திபெற இறையை வேண்டுவோம் - நாம்
அறத்துடனே மக்களுக்காய்ப் பணிகள் புரிகுவோம்
திறம் மிகுந்த மானிடராய் மீண்டும் எழுவோம் - நாம்
பிறந்த தேசம் தன்னை மீளக் கட்டியெழுப்புவோம் - நாம்
பிறந்ததேசம் தன்னை மீளக் கட்டியெழுப்புவோம்.

2005 இல் சுனாமியால் இறந்தவர்களின் அஞ்சலி நிகழ்வின்போது
ஆசிரியர் பொ. ஞா. அவர்களால் இயற்றப்பட்டு மாணவர்களால் இசைக்கப்பட்டது. -

## Bilingual Education Students Union



***Seated (L- R) :*** *Mr. S. Srikumar (Teacher - in - Charge), Mr. P. Maheswaran (Deputy Principal), Mr. V. Ganesaraja (Principal), Mas. B.Nandikaran (President), Mr. P. Sriskantharajah (Vice Principal)*
***Standing (L - R) :*** *Mas. P. Sayanthan (Editor), Mas. E.Kawsihen (Secretary), Mas. V. Theebanraj (Assistant Secretary), Mas. S. Maurathan (Vice President), Mas. T. Harishanth (Treasurer)*

## English Union - 2008



***Sitting (L - R) :*** *Mr. P. Sriskantharajah (Vice - Principal), Mr. M. Maheswaran (Sub - Co - ordinator), Mr. M. Sivathasan (Teacher - in - charge), Master K. harsan (President), Mr. V. Ganesarajah (Principal), Mr. P. Maheswaran (Deputy Principal), Master . G. Mogunasinth (Secretary) Master A. Ahilan (Treasurer)*
***Standing (L - R) :*** *Master. U.Thanasri, Master V. Kisho, Master . Sanchayan (Editor)*
***Absent :*** *Master Y. Yathukulan (Vice President), Master. T. Prahathanan, Master. M. Anurathan, Master. T. Dany Hamshananth, Master. K. Kajanan, Master. S. Yathavan*

# கவின் கலை மன்றம்



இருப்பவர்கள் (இடமிருந்து வலம்): செல்வி த. செல்லத்துரை (சங்கீத ஆசிரியர்), திரு. ம. சி. சிவதாசன் (சித்திர ஆசிரியர்), திரு. கி. பத்மநாதன் (பொறுப்பாசிரியர் - சங்கீதம்), செல்வன் சி. சேரன் (தலைவர்), திரு. வீ. கணேசராஜா (அதிபர்), திரு. பொ. மகேஸ்வரன் (பிரதி அதிபர்), திரு. P. ஸ்ரீகந்தராஜா (உதவி அதிபர்), செல்வி ச. கவிதா (சங்கீத ஆசிரியை)

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) : திரு. து. இராமதாஸ் (நடன ஆசிரியர்), செல்வன் பா. அருண், செல்வன் க. எழில்வேள் (உப செயலர்), செல்வன் பு. இரோசன் (பொருளாளர்), செல்வன் தி. கன்னீவன், செல்வன் த. நிருஷன், திரு. ப. கஜன் (சித்திர ஆசிரியர்)

# தமிழ்ச் சங்கம் - 2007



இருப்பவர்கள் (இடமிருந்து வலம்): பொ. ஸ்ரீகந்தராஜா (உபஅதிபர்), தி. ஜனாகரன் (பொருளாளர்), சு. கோகிலன் (பெருஞ்செயலாளர்), ந. தங்கவேல் (பெருந்தலைவர்), யோ. அஜித் (தலைவர்), வீ. கணேசராஜா (அதிபர்), பொ. மகேஸ்வரன் (பிரதி அதிபர்), வா. சிவராஜா (பெரும் பொருளாளர்), ச. செந்தில் குமரன் (செயலாளர்)

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) : செ. செல்வநிகேதன், சி.சேரன், ம.கபிலன், க.எழில்வேள், பா. அருண்

# Our Troop 4th Jaffna Jaffna Hindu College - Scout Group



***Standing 1st Row:*** *Mas. U. Sailayan, Mas. T. Suthesan, Mas. S.Kirushanth, Mas. P. Sanchuthan, Mas. K. Ragulan, Mas. S. Kaviyaran, Mas. T. Ajantharajah, Mas J. Logabavan, Mas. K. Kirishanth, Mas. N. Aathesan, Mas. S. Karmegan, Mas. B. Muralitharan, Mas. K. Mathusan, Mas. P. Thujeevan, Mas. P. Janojh, Mas. S. Vidthyasagar, Mas. K. Gowthan, Mas.K. Pirashanth, Mas. T. Thanushan*

***Standing 2nd Row:*** *Mas. T. Vakesan ( P. L), Mas. T. Pirashanth, Mas. S. Vijitharan, Mas. P. Satheeskumar, Mas. Y. Vithushan (P. L), Mas. T. Sujeevan (P. L), Mas. P. Kirushnapirabhu (P. L), Mas. P. Gajamalan, Mas. P. Dhushanthan (P. L), Mas. T. Majurashakthiyan, Mas. N. Kokularajah (P. L), Mas. N. Lavalojan, Mas. K. Shivanujan, Mas. I. Abinayan, Mas. S. Piranavan*

***Sitting 2nd Row:*** *Mas. J. Arujeenan (Treasurer), Mas. R. Raviraj (Ass.Troop Leader), Mr. S.Krishnathas (Scout Leader), Mr. P. Maheswaran (Deputy Principal), Mr. V. Ganesarajah (Principal), Mas. R. Raviraj (Troop leader), Mr. N. Parameswaran (Group Scout Leader), Mr. P. Sriskantharajah (Vice Principal), Mr. B. Satkunarajah (Scout leader), Mas. K. Pothikaichelvan (Quater Master)*

***Sitting 2nd Row:*** *Mas. T. Papikaran, Mas. S. Sahirajah, Mas. P. Thenilan, Mas. V. Sinthujan, Mas. J. Kalistus, Mas. S. Sinthujan, Mas. S. Yarlamuthan, Mas. R. Sankeerthanan, Mas. K. Yathursan, Mas. Keerthanaram*

## விவாதமன்றம்



**இருப்பவர்கள் (இடமிருந்து வலம்) :** செல்வன் க.விக்னன் (பொருளாளர்), திரு. வா.சிவராசா (பொறுப் பாசிரியர்), திரு.பொ.மகேஸ்வரன் (பிரதி அதிபர்), செல்வன் ச.செந்தில்குமரன் (தலைவர்), திரு.வீ.கணேசராஜா (அதிபர்), திரு. பொ. ஸ்ரீகந்தராஜா (உபஅதிபர்), செல்வன் ப. நிரோசன் (செயலாளர்)
**நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) :** செல்வன் செ. செல்வநிகேதன், செல்வன் பா. அருண், செல்வன் ச.சுஜன், செல்வன் சி. சேரன் (விவாத அணித்தலைவர்), செல்வன் ம. கபிலன், செல்வன் அ. அகிலன், செல்வன். க. டினேஸ்

**படத்தில் இடம்பெறாதோர் :** செல்வன் சி. யதுகுலன்

## கலை மாணவர் மன்ற நிர்வாகசபை உறுப்பினர்கள்



**இருப்பவர்கள் (இடமிருந்து வலம்) :** திரு. கமலநாதன் (பொறுப்பாசிரியர் 2008), ப. பத்மநாபா (செயலாளர்), த. பிரதீபன் (தலைவர்), திரு. வீ. கணேசராஜா (அதிபர்), திரு. பொ. மகேஸ்வரன் (பிரதி அதிபர்), திரு. வா. சிவராஜா (பொறுப்பாசிரியர் 2009), வ. தேசிகன் (பொருளாளர்), ர. சோபிகன் (பத்தாராதிபர்)
**நிற்பவர்கள் மலர்க்குழு :** பு. பிரகாஷ் (தமிழ்), கு. ஜனார்த்தன் (புவியியல்), ந. பிரபாகர் (தமிழ்), சி. சுதன் (அரசியல்), ம. கஜன் (புவியியல்), செ. ஜெயப்பிரதாப் (அரசியல்), ம. கபிலன் (இந்துநாகரிகம்), ப. மோகனகாந் (இந்துநாகரிகம்)

# இளமையிற் கல்வியைக் கல்

வி. சுஜீபன்
தரம் - 8C

இப்பூவுலகில் மானிடராக வாழ்கின்ற நாம் இருவகைச் செல்வங்களை அனுப வித்துக் கொண்டிருக்கிறோம். அவையாவன பொருட்செல்வம், கல்விச் செல்வம் என்பன வாகும். இவற்றுள் கல்விச் செல்வம் சிறப்பு டையது. இது தேடுவதற்கு அரியது. கண் ணுக்குப் புலப்படாதது, சூறையாட முடியா தது, தகனத்துக்கு உள்ளாகாதது. இது ஒரு அழிவற்ற செல்வம் ஆகும்.

இந்தக் கல்விச் செல்வம் வருந்தித் தேடவேண்டியது ஒன்றாகும். வருந்தித் தேடி விட்டாலோ அழிவில்லாதது. நிலையான ஒரு பொக்கிஷம் இக் கல்விச் செல்வமாகும். இந்தக் கல்விச் செல்வமானது நீராலோ அல்லது நெருப்பாலோ அழிக்க முடியாதது. இதை நாம் மற்றோருக்கு அழிக்கும் போதும் வளர்பிறை போல் வளருமே தவிர தேய்பிறை போல தேயாது. ஆனாலும் பொருட் செல்வமோ நீராலோ அல்லது நெருப்பாலோ அழிந்து விடும். நிலையற்றது. எளிதில் திருடராலும் எதிரிகளாலும் சூறை யாடப்பட்டு விடும் தன்மை வாய்ந்தது இது. மற்றோருக்கு கொடுக்கும் போதும் குறைந்து கொண்டே போகும். இதனாலே தான் ஆன்றோர் கல்விச் செல்வத்து நிக ரான செல்வம் வேறில்லை என்று பகன்றுள் ளனர்.

**“கற்றோருக்கு சென்ற இடமெலாம் சிறப்பு”** என்பது முதுமொழி. கல்வி கற்றோர் எத் தகைய இடத்திற்குச் சென்றாலும் தமது கல்வியின் வலிமையினால் எக்காரியத்தை யும் திறம்படச் செய்து முடிக்கும் ஆற்றலைப் பெறுவர். மானிடரிடம் உள்ள அறியாமை யைப் போக்கி அறிவு என்னும் ஒளியை ஊட்டுவது இந்தக் கல்வியாகும். **“இளமையிற் கல்வி சிலையில் எழுத்து”** என்பது முதியோர் வாக்காகும். நாம் கல்வியை இளமையில் இருந்தே கற்க வேண்டும். எங்களுடைய பசுமையான சின்னஞ் சிறிய உள்ளங்களில் கல்வி நன்கு பதியும் தன்மை உள்ளது. நன்கு பதிந்துவிட்டாலோ அக் கல்வியை அழிக்க முடியாது. சிறுவர்களாகிய நாம் இக் கல்வியை மிகுந்த ஆர்வத்துடனும், ஆசை யுடனும், பயபக்தியுடனும் கற்க வேண்டும். கல்வியை கற்பவராகிய நாம் கற்றல், சிந் தித்தல், தெளிதல் என்ற படிகளைக் கடைப் பிடிக்க வேண்டும்.

கல்வி கற்பதற்கு எமக்கு வயதுக் கட்டுப்பாடில்லை. எமது வாழ்நாள் முழு வதும் கற்றுக்கொண்டு இருக்கலாம். ஒரு மனிதனால் உலகிலுள்ள சகல கலைகளை யும் கற்று தேர்ந்துவிட முடியாது அதனா லன்றோ முதியோர்கள் **“கற்றது கை மண்ண ளவு கல்லாதது உலகளவு”** என்று கூறினர். கல்வி கடல் போன்றது. எல்லையற்றது. கற் கக்கற்க இனிமை வாய்ந்தது. உலகிலுள்ள எல்லா அழகுகளிலும் இக் கல்வியே சிறந் தது. இத்தகைய சிறப்பு வாய்ந்த கல்வியைத் தேட நாம் சலியாது முயற்சிக்க வேண்டும். எம்மிடம் இந்தக் கல்வி அழகு ஒன்று மட்டும் இருந்துவிட்டால் மற்றைய அழகுகள் எல் லாம் தானாக வந்து சேர்ந்துவிடும்.

எனவே, இந்த அழியாததும் அழகும் மிக்கதுமான கல்விச் செல்வத்தைப் பெற்று இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்வதற்கு இந்து அன்னையின் மாணவர்களாகிய நாம் முயற் சிப்போமாக.

# விட்டுக்கொடுப்பு வேண்டும்

✍ இ. விதுஷன்
தரம் - 8C

ஒரு காட்டிலே இரண்டு சிங்கங்கள் உற்ற நண்பர்களாய் வாழ்ந்து வந்தன. அவை இரண்டும் ஒரே குகையில் ஒன்றாக வாழ்ந்தன. அச்சிங்கங்களை விட பலசாலி யான மிருகங்கள் அக்காட்டில் இருந்த தில்லை. அதனால் அவை இரண்டும் கண் ணில் மாட்டும் விலங்குகளையெல்லாம் வேட்டையாடி உண்டன.

அக்காட்டில் வேறு ஒரு குகை ஒன்றில் ஒரு குள்ளநரி வசித்து வந்தது. அது இவர் களின் நட்பை பார்த்துப் பொறாமையுற்றது காரணம் அச்சிங்கங்கள் இரண்டும் ஒற்றுமை யாக வேட்டையாடி உண்பதால் நரியால் வெளியில் சென்று திருப்திகரமாக உண்ண முடியவில்லை.

எனவே அது நீண்டகாலமாக பசியால் வாடியது. ஒருதினம் அந்நரி அவ்விரண்டு சிங்கங்களை பிரித்து அவற்றுள் சண்டையை உண்டு செய்ய எண்ணியது.

ஒருமுறை ஒரு சிங்கத்தை தனியே சந் தித்து இவ்வாறு கூறியது.

**"சிங்கமண்ணா நியாயமாகப் பார்த்தால் நீர்தான் எமது காட்டிற்கு ராஜாவாக இருத்தல் வேண்டும். ஆனால் உமது நண்பர் என்று கூறிக் கொண்டு வேறு ஒருவர் உமது பதவியில் பங்கு போடுகிறார். பதவியில் மட்டுமா உமது உண விலும் பங்கு போடுகிறார். நீர் எப்பொழுதாவது முழுமையாக ஒரு விலங்கையாவது பிடித்து உண்ண முடிந்ததா? இல்லையே ஆகவே நீர் அவரிடம் ஏமாந்துள்ளீர். இனியாவது யோசித்து நடந்துகொள்ளும்.**

நரி கூறியதைக் கேட்டு சிங்கம் யோசித் தது. நரி தனது எண்ணம் சற்று ஈடேறியதை எண்ணி மனத்துள்ளே சிரித்துக் கொண்டு நேராக மற்றைய சிங்கத்திடம் சென்று முதலில் கூறியவாறே கூறியது.

அச்சிங்கமும் நரி கூறியது சரிதான் என யோசித்தது. சிங்கங்களிடையே வெறுப்பை ஏற்படுத்திய மகிழ்ச்சியில் மனதிருப்தியுடன் தனது வீடான குகைக்குச் சென்றது. மறுதினம் சிங்கங்கள் இரண்டும் வேட்டையாடச் சென் றன. அன்றைய உணவிற்கு மான் ஒன்று கிடைத்தது.

அம் மானை இரு சிங்கங்களும் சேர்ந்து பிடித்து அடித்துக் கொன்றன. இரண்டு சிங்கங்களும் மனத்துள்ளே இதைத் தாமே முழுமையாக உண்ண வேண்டும் என்று எண்ணின.

இதனால் இவை இரண்டிற்குள்ளும் வாக்குவாதம் மூண்டது. இதை நரி ஒளித் திருந்து பார்த்துக் கொண்டிருந்தது. சிங்கங் களிடையே மூண்டவாக்குவாதம் காலப் போக்கில் கைக்கலப்பானது. சிறிது நேரத் தில் இரண்டும் அடிபட்டு இறந்தன.

இரு சிங்கங்களையும் உண்டபின் நரி மகிழ்வாக வீடு சென்றது. இரு சிங்கங்களில் ஒன்று விட்டுகொடுத்திருந்தாலும் இரு உயிர் களும் போயிருக்காது. ஆகவே சிறுவர் களாகிய நாங்களும் விட்டுக் கொடுக்கப் பழகுவோம்!

☆☆☆

# அன்பு

சி. சிவசங்கர்
தரம் - 8E

அன்பு என்பது இன, மத, மொழி வேறுபாட்டிற்கு அப்பாற்பட்டது. இறைவனின் உண்மையான பெயர் ஆத்மா ஆகும். ஆத்மாவின் உண்மையான பெயர் அன்பு ஆகும். அன்பு ஒன்றே ஒன்று. ஆனால் அது எங்கும் நிறைந்திருக்கிறது ; எம் துயரங்களினைத் தீர்க்கிறது.

எம்மிடம் அன்பு மட்டும் இருந்தால் எம்மால் எதனையும் இலகுவாக அடைய முடியும். அன்பு மட்டுமே அனைவரையும் இணைக்கிறது. அதோடு எமக்கு அன்பினாலே தூய்மை கிடைக்கப் பெறுகிறது. அன்பைப் பற்றி திருவள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்.

**"அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து**
**இன்புற்றார் எய்தும் சிறப்பு"**

இவ்வுலகத்திலே இன்பம் அடைந்தவர் அடையும் சிறப்பு, அவர் அன்புடையவராகப் பொருந்தி வாழ்ந்த வாழ்க்கையின் பயனே என்பர்.

இக்குறளிலிருந்து அன்பின் சிறப்பை அறியமுடிகிறது. உலகினில் உள்ளவற்றில் ஒன்று மட்டுமே நிலைத்துள்ளது. அதுவே அன்பாகும். எம்முடைய அனைத்துப் பயிற்சிகளிற்கும் உயிரோட்டமாக அமைவது அன்பு மட்டுமே ஆகும். எமது உடலிலும் மனதிலும் மாற்றங்கள் ஏற்படலாம். ஆனால், அன்பு மாற்றம் இல்லாதது. அது நிலையானது இறைவன் பிறப்பும் இறப்பும் அற்றவன். அது போல அன்பும் பிறப்பும் இறப்பும் அற்றதாகும். எம்மிடத்தில் அன்பு இருக்கும் இடத்தில் எம்முடன் பேரானந்தமும் நிலைத்திருக்கும். நாம் எமது ஒவ்வொரு பணியையும் அன்புடனேயே செய்யவேண்டும். ஆகவே, எம் இதயத்தினை அன்பினாலே நிரப்பவேண்டும்.

நாம் எண்ணத்திலே அன்பினைக் கைக்கொள்வது சத்யம் எனப்படும். நாம் செயலிலே அன்பினைக் கைக்கொள்வது தர்மம் எனப்படுகிறது. நாம் நமது உணர்ச்சியிலே அன்பினைக் கைக்கொள்வது சாந்தி எனப்படும். நாம் புரிதலிலே அன்பைக் கைக்கொள்வது அஹிம்சை எனப்படும்.

நம்பிக்கை இருக்கும் இடத்திலே தான் அன்பு நிலவுகிறது. அன்பு இருக்கின்ற இடத்திலேதான் அமைதி நிலவுகிறது.

அன்பானது மனித மனத்தினை மாத்திரம் இளகவைக்கும் என்பதல்ல.விலங்குகள், தாவரங்களும் கூட அன்பினைப் பயக்கின்றது. அன்பு என்பது ஓர் மஹாசக்தி ஆகும். ஆகவே, அன்பினால் எம் இதயத்தை நிரப்பிடுவோம்.

**"அன்புடன் நாளைத்தொடங்கு ;**
**அன்புடன் நாளை நிரப்பு ;**
**அன்புடன் நாளைச் செலவிடு;**
**அன்புடன் நாளை நிறைவு செய்"**

- பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா -

## சூழலைப் பேணுவோம்

✍ ப. பிரதீஸ்
தரம் - 8E

சுற்றத்தாருடன் இணைந்துமே - நாம்
சூழல் சுத்தம் பேணிடுவோம்.

வீட்டைத் தூய்மைப் படுத்திடுவோம்
வீதித் தூய்மை பேணிடுவோம்.

சாதி மதம் தனைப் பாராது - நாம்
சாலைத் தூய்மை பேணிடுவோம்

பலருடன் சேர்ந்து கூட்டாக - நாம்
பற்றைகள் சுத்தம் பேணிடுவோம்

நல்ல வளிதனை சுவாசிக்கவே - நாம்
நல்ல சூழலைப் பேணிடுவோம்.

சாலவும் சிறந்து வாழ்ந்திடவே - நாம்
சாக்கடைச் சுத்தம் பேணிடுவோம்.

சுகமாய் வாழ வழிவகுக்க - நாம்
சூழல் சுத்தம் பேணிடுவோம்.

## எப்பொழுதும் உதவிசெய்ய ஆயத்தமாயிரு

✍ சாரணன், ப. கஜமாலன்
தரம் - 9B

பிறருக்கு உதவி செய்தல், எல்லா உயிர்களிடத்தும் அன்பாயிருத்தல், பெரியோருக்குக் கீழ்ப்படிதல் போன்ற நற்பண்புகளை வளர்ப்பதும், பிறர் நலன் கருதிப் பணியாற்றும் சமூக சேவை இயக்கங்களில் சாரணர் இயக்கம் தலைசிறந்து விளங்குகின்றது என்று கூறின் சாலச் சிறந்ததாகும்.

எப்பொழுதும் உதவிசெய்ய ஆயத்தமாயிரு எனும் இலட்சியத்துடன் செயற்படும் இவ்வியக்கம் இன்று உலக நாடுகள் பலவற்றிலும் சிறப்புச் சேவையாற்றுகிறது என்று கூறின் மிகையாகாது.

**"சேர் றொபேட் பேடன் பவுல்'** எனும் ஆங்கிலேயரால் ஆரம்பிக்கப்பட்ட இவ்வியக்கமானது சாதி, மத, இன பேதமின்றி மக்களுக்குத் தொண்டாற்றுகின்றது. சாரணர்கள் உண்மை பேசுபவர்களாகவும், கீழ்ப்படிவுள்ளவர்களாகவும், பிற உயிர்களிடத்து அன்புடையவர்களாகவும் இருந்து வருகிறார்கள்.

ஆறு வயது முதல் பதினொரு வயது வரை உள்ளவர்கள் முதலாவது அணியிலும், பதினொரு வயதிற்கு மேல் பதினெட்டு வயது வரை உள்ளவர்கள் இரண்டாவது அணியிலும், பதினெட்டு வயதுக்கு மேற்பட்டோர் மூன்றாவது அணியிலுமாக மூன்று அணிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர்.

சாரணர்கள் தமக்குரிய சீருடையினை அணிந்து சின்னங்களைச் சூடியிருப்பார்கள். பிறருக்கு வணக்கம் செய்யும் போது தங்கள் இடது கையில் பெருவிரலையும் சிறுவிரலையும் மடக்கிக் கொண்டு ஏனைய மூன்று விரல்களாலும் வணக்கம் செய்வார்கள்.

நான் கடவுளுக்கும் எனது தாய்நாட்டிற்கும் என்னால் இயன்ற கடமையைச் செய்வேன் என்றும், எப்பொழுதும் பிறருக்கு உதவி செய்ய ஆயத்தமாயிருப்பேன் என்றும், சாரணர் இயக்கத்திற்குரிய சட்டங்களுக்கு

அடங்கி நடப்பேன் எனும் மூன்று உறுதி மொழிகளை நினைவூட்டும் வகையிலே சாரணர்கள் வணக்கத்தை மூன்று விரல்களாலும் செலுத்துகின்றனர்.

மக்கள் பெருந்திரளாகக் கூடும் வைபவங்களிலும், ஆலய உற்சவங்களிலும், பொது நிகழ்வுகளிலும் சேவையாற்றும் சாரணர்கள் பிறர்நலன் பேணுதல், ஆபத்துக் காலத்தில் உதவி அளித்தல் ஆகியன சாரணர்களின் தலையாய இலட்சியமாகும்.

எமது பாடசாலையில் இச் சாரணர் இயக்கமானது பல ஆண்டுகளாக வீறுநடை போட்டு வருகின்றது என்று கூறுவதில் சாரணன் ஆகிய நான் பெருமையடைகின்றேன்.

நுவரெலியாவில் நடைபெற்ற ஏழாவது தேசிய ஜம்போறி நிகழ்வில் யாழ் மாவட்டத்திலுள்ள மாணவர்களை விட அதிகளவிலான சாரணர்கள் கலந்து கொண்டார்கள் என்பதோடு தேசிய ஜம்போறி நிகழ்வில் தமிழ் மொழி அறிவிப்பாளராக பங்குபற்றி யாழ் இந்துவின் பெருமையை மெருகூட்டியமையை நினைத்து பெருமைப்படுகின்றேன்.

நற்பிரசைகளை உருவாக்கும் சாரணர் இயக்கத்திற் சேர்வதன் மூலம் நாம் நல்லவர்களாக, வல்லவர்களாக வாழமுடியும் என்று கூறுகின்றேன்.

வாழ்க! சாரணீயம் வளர்க! அதன் சேவை.

# யாதும் ஊரே யாவரும் கேளிர்

✍ செ. சேயோன்
தரம் – 9A

**“யா**தும் ஊரே யாவருங் கேளிர்” என்பது புறநானூறு. சங்ககால மக்களது மன நிலையை, பண்பாட்டின் உச்ச நிலையை எடுத்துக்காட்டுவதாக இக்கூற்று விளங்குகின்றது. **“சாதிகள் இல்லையடி பாப்பா”** என்கிறது பாரதியார் பாடல். **“சாதியிரண்டொழிய வேறில்லை”** என்பது ஒளவையார் பாடல். **“ஒன்றே குலம் ஒருவனே தேவன்”** என்பது திருமூலரின் திருமந்திரம். **“நாம் எல்லோரும் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகளே”** என்ற கருத்து பைபிளிலும் திருக்குர் - ஆனிலும் வற்புறுத்தப்படுகின்றது.

யாதும் ஊரே யாவருங் கேளிர் என்று வெறுமனே வாயினால் சொல்லிவிட்டால் மட்டும் போதாது. இக்கருத்தை ஏற்றுக் கொள்ளும் ஒருவர் நிச்சயமாகப் பரந்த மனப்பான்மை உள்ளவராகவே இருக்கவேண்டும். இவ்வுலகில் மானிடப்பிறவி எடுத்த ஒவ்வொருவரும் விட்டுக்கொடுக்கின்ற உயரிய கொள்கையுடையவராக, பரந்த மனப்பான்மை உள்ளவராக இருப்பாரேயாயின் இன்று உலகில் நடைபெறுகின்ற பலவித பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண முடியும். ஆனால் இன்று நாமோ விட்டுக்கொடுக்கின்ற மனப்பான்மையின்றி, பரந்த மனப்பான்மையின்றி மிகக் குறுகிய வட்டத்துக்குள் நின்று சிந்திக்கின்றோம். இதனாலேயே மதத்துக்காக, மொழிக்காக, கொள்கைக்காக, நோக்கத்திற்காகச் சாகின்றோம், சாகடிக்கப்படுகின்றோம், ஒருவரையொருவர் பகைக்கின்றோம், வதைக்கின்றோம் இது நாம் வெறுக்க வேண்டிய, வெட்கப்படவேண்டிய, வேதனைப்படவேண்டிய ஒரு விடயமாகும்.

எந்த ஊரும் எமது ஊரே. எல்லோரும் எமது சுற்றத்தவரே என்று வாழவேண்டிய மனிதன் **“நானே பெரியவன்”** என்ற அகங்காரத்துடனும் எல்லாமே எனது என்ற மமகாரத்துடனும் வாழ்கின்றான். ஒரு சிலந்தி எவ்வாறு தன்னைச்சுற்றி ஒரு வலையைப் பின்னி, தானே அவ்வலைக்குள் சிக்குண்டு துன்பப்படுகின்றதோ அதுபோலவே மனிதனும் ஒரு குறுகிய வட்டத்துக்குள் நின்று

சிந்திப்பதனால் எத்தனையோ இடர்களை எதிர்நோக்குகின்றான்.

இத்தகைய பரந்த மனப்பான்மையை நாம் பாடசாலைகளிலோ அன்றி நமது சூழலிலோ இருந்து வளர்த்துக்கொள்ள முடியும். நமது சூழலில் நடைபெறுகின்ற நிகழ்வுகள், பண்டிகைகள், கொண்டாட்டங்களின் போதும் பாடசாலைகளில் நடைபெறுகின்ற சமய வழிபாடுகள், விழாக்கள், நிகழ்வுகளின் போதும் நாம் இன வேறுபாடின்றி, மத வேறுபாடின்றி, வர்க்க வேறுபாடின்றி நடந்து கொண்டால் இப் பரந்த மனப்பான்மை தானாகவே அமைந்துவிடும்.

எனவே, உலக சமாதானம் என்ற கொள்கை அனைவராலும் முன்மொழியப் பட்ட இக்கால கட்டத்திலே உலக ஐக்கியத்திற்காக ஒவ்வொரு மனிதனும் பாடுபட வேண்டும். அதாவது "யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்ற மனப்பான்மையுடன் ஒவ்வொரு மனிதனும் செயற்பட்டு வருவானாயின் உலக சமாதானம் என்பது எமக்கு எட்டாக் கனியல்லவே.

## முயன்று பார்... முயன்று பார்...

ச. சந்தோஷன்
தரம் - 9D

அடியில் முட்கள் இருந்தாலும்
அடித்துக் குத்திக் கிழித்தாலும்
செடியில் பூத்து அழகாகச்
சிரிக்கும் ரோஜா மலரைப் பார்

இடையில் கற்கள் கிடந்தாலும்
எதிர்த்து முட்டித் தடுத்தாலும்
தடைகள் தாண்டி நடைபோட்டுத்
தாவிச் செல்லும் நதியைப்பார்

வெடிகள் வைத்துப் பிளந்தாலும்
வெட்டிக் கொத்திச் சிதைத்தாலும்
நெடிதாய் உறுதி குலையாமல்
நிமிர்ந்து நிற்கும் மலையைப் பார்

படிகள் தட்டி விழுந்தாலும்
பலர் கைகொட்டி நகைத்தாலும்
முடியும் என்று திடமாக - நீ
முயன்று வெற்றி அடையப்பார்.

## இந்து அன்னை

த. துஷாகரன்
தரம் - 9D'

முக்கனிச் சாறெடுத்து
முத்தமிழ் தேனெடுத்து
உன்தாழ் பணிவேன்
இந்து அன்னையே! வணக்கம்

தங்கத் தாமரையாய் விரித்திருக்கும்
என் இதயக் கோயிலில்
வைரமாக ஜொலிக்கின்றாய்
தலை பணிந்தேன் தாயே

உன் தேன் சிந்தும் இதயத்திலே
உன் மழலை யாகிய என்னை
அன்போடு காக்கின்றாய்
அறிவு தந்து வளர்க்கின்றாய்

அறிவென்னும் உணவெடுத்து
அன்போடு என்னைத் தூக்கி
பசிக்குணவு தருவது போல
என் அறிவுப்பசிக்கு அறிவு தருகின்றாய்

தலைக்கு மேலே வளர்ந்தால்கூட
தாயிற்கு தனயன் பிள்ளைதான்
உன்னை விட்டு பிரிந்தால்கூட
நீ எனக்கு தாய் தானே

பத்துமாதம் சுமந்து என்னை
அன்போடு பெற்றெடுத்தாள் என் அன்னை
எட்டுவருடம் எனைத்தாங்கி
அறிவு தந்து வளர்த்தெடுத்தாய்

## கற்றுக்கொள்

அ. பாலகஜன்
தரம் - 10 C

உலகமே ஒரு பாடசாலை
உனக்கு கற்றுக்கொள்ளுவதே
ஒரேவேலை!

அவமானப்படும் போதெல்லாம்
அதில் உண்டாகும்
காயங்களிடம்
அதிவேகத்தைக் கற்றுக்கொள்!

பூகம்பம் வந்த
மறுநாளும்
மொட்டவிழ்க்கும்
மலர்ச்செடியிடம்
இயக்கத்தை கற்றுக்கொள்!

சாலைகளைக் கடக்க
உதவும்
பார்வையற்றவரின்
ஊன்றுகோலில்
லட்சியத்தை
கற்றுக்கொள்!

உலகத்தையே
உள்வாங்கும்
சமாதியிடம்
சமாதானத்தை கற்றுக்கொள்!

## நலந்தரும் நாமம்

ச. யதுசன்
தரம் - 10E'

"பத்தித் திருமுகம் ஆறுடன் பன்னிரு
தோள்களுமாய்
தித்தித் திருக்கும் அமுது கண்டேன்
செயன் மாண்டடங்கப்
பத்திக் கமலத் துருகிப் பெருகிப் புவனம்
என்றித்
தத்திக் கரைபுரளும் பரமானந்த
சாகரத்தே"
- கந்தர் அலங்காரம் - 47

கலியுகத்திற்கு குகப்பெருமானே சிறந்த வரப்பிரசாதி ஆன தெய்வம் என சாஸ்திரங்கள் விளம்புகின்றன. கந்தனை கரங்குவித்து வணங்குபவர்களுக்கு கலியின் கொடுமையும் கால பயமும் கிடையாது என்பதை "கந்தனை போற்றுவோர் மேல் காலனும் அணுகொணாதே" பழனி தல புராணம் கூறுகின்றது.

இறைவனது திருநாமங்களைக் கூறுவதால் பெறும் ஆனந்தமே பேரானந்தம் என்கிறோம். அவரது நாமத்தைப் புகழ்ந்து சொல்பவர்கள் மிகப் பாக்கியவான்கள். அவர்கள் இனிப்பிறவாத பேற்றையும் இப்பிறப்பில் வறுமையில் சிக்காமல் இன்பம் பெறுவார்கள்.

எங்கும் ஏக உருவாய் பொங்கித் ததும்பி பூரணமாய் விளங்கும் இறைவன்

எனும் இன்பக் கடலிலிருந்து வெளிப்படும் ஓர் இனிமையான அமிர்தம். இந்த அருமை யான அமிர்தமே ஆறுமுகங்களும் பன்னிரு கரமுமாய்த் திகழும் ஆறுமுகப் பரம்பொருள்.

இந்த அமிர்தத்திற்கு கந்தன், ஞான சக்திதரன், குமாரன், கார்த்திகேயன், வேலா யுதன், சரவணபவன், வள்ளிமணாளன் முதலிய நாமங்கள் உண்டு. இந்த அமிர் தத்தைக் கண்டால் உவட்டாத இன்பம் ஊறும்.

இவன் நாமத்தைச் சொன்னாலும், கேட் டாலும், நினைத்தாலும் உளம் உருகும். ஒப்பற்ற ஆனந்தம் பெருகும். இந்த அமிர் தமே முத்திக்கொரு வித்தாக திகழ்கிறது. காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி பரம் பொருளையே நினைத்து வேதங்கள் காணாத இறைவனைக் கண்டோர் பலர். ஆவி பிரியும் மரணப் போராட்டம் ஏற்பட் டால் ஒருமுறை முருகா என ஓதினால் இறைவனது இரு கழல்களும் தோன்றி முத்தி அருளும்.

**"முருகா என உனை ஓதும் தவத்தினர்**
**முதுலகில்**
**அருகாத செல்வம் அடைவர், வியாதி**
**அடைந்து நையார்**
**ஒரு காலமும் துன்பம் எய்தார் பரகதி**
**உற்றிடுவார்**
**பொரு காலன் நாடு புகார் சமராபுரிப்**
**புண்ணியனே"**

முருகா எனும் நாமத்தின் சிறப்புகள் கோடி **"முருகா"** என்பது குன்றாத இளமை யும் அழகும் என்று பொருள். இயற்கை அழகே கந்தவேளின் அழகு. **"உன்னைக் காணாத கண் என்ன கண்ணோ"** உன் திருவடிவாத அழகைக் காணாத கண்கள் கண் அல்ல. புண்களே. எதிலும் சார்பற்ற பெருமான்தானே மாயையால் சூழப்பட்ட மக்களுக்கு விடுதலை அளிக்கிறார்.

**"ஆதியோடு அந்தமாகிய நலன்கள்**
**ஆறுமுக மென்று தெரியேனே"**

திருப்புகழ்

இத் திருப்பெயருக்கு எல்லா நலங் களையும் உடையவன் என்பது பொருள். அருவமே உருவமாக அநாதியாக விளங்கும் ஆறுமுகப் பரம்பொருளை தரிசித்தால் ஆன் மாக்களின் அஞ்ஞான இருளைப் போக்கி மெய்ஞ்ஞானம் கைவரப்பெறும் அதிட்டம் கிடைக்கும்.

**"ஆடு மயினிலில் ஏறி அமரர்கள்**
**சூழ வலம் வரும் இளையோனே"**

என அருணகிரி அற்புதக் கடலின் வாகனமாம் மயிலின் மாண்பினைப் போற்றிப் பாடுகிறார். **"மயிலைப் பாடிப் பரவுவோர் சீர் பெறுவர்"** எனவும் கூறுகிறார். எம்பெருமானை நினைந்து நினைந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து உணர்ந்து உணர்ந்து உருகும் அடியார் முன் திருவடி புனையும் குமாரனின் அருளைப் போற்ற முடியுமா? பக்தர்கள் எத்தனை பிழை செய் தாலும் எத்தனை குறை கருதினாலும் எந்தை முருகன் எல்லாவற்றையும் பொறுத்து மன் னித்து பிரியமுடன் அருள்தருவான். தேவ ரைக் காக்க அவுணர் குலத்தை அழித்த ஆனந்த சொருபன் திருத்தாள் போற்றி. குறக்கொடியைக் கொண்ட குமரனின் குஞ்சிதபாதங்கள் போற்றி.

**"ஆடும்பரிவேல் அணிசேவலென**
**பாடும் பணியே பணியாய் அருள்வாய்**

என்ற அருணைக்கிளியின் வாய்மொழிக்கேற்ப வேலின் சிறப்பை சாற்றுதல் நன்று. முரு கனின் திருக்கரத்தில் விளங்கும் படையை **"படை அரசு"** என்று புகழ்வர். இப்படைக் கலம் அன்பர்களுக்கு துணைபுரியும். எனவே வேலுண்டு வினை இல்லை என்று தோகை மேல் உலவும் கந்தன் சுடர்க் கரந்திருக்கும் வெற்றிவாகையைப் போற்றுகின்றனர்.

☆☆☆

**"மருவும் அடியார்கள் மனதில் விளையாடும்
மரகத மயூரப் பெருமாள் காண்"**
- திருப்புகழ் -

தன்னை நினைப்பவர் நெஞ்சிலே திருவடி புனையும் கந்தவேள் பதினாறு பேறு களும் தருவதோடு பிறவிப்பழியை ஒழிக்கும் பிள்ளைப்பெருமான் முருகன். கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்கும் ஆறுமுகப் பெருமானது திருவுருவத்தைத் தரிசிப்பதை கண்கள் பெற்ற பயனாகக் கொள்ள வேண்டும்.

முருகப் பெருமானது திருவடிக் கமலங் களை கண்களால் கண்டு அன்பு மேலிட்டு கரங்களால் தொழுது உள்ளம் உருக வேண்டி நின்றால் ஆறுமுக வள்ளல் அருள் செய்வது திண்ணம். எம்பெருமான் நினைவு மட்டும் இருந்தால் போதும். அவன் அருள் எம்மை நாடிவரும். அனைவரையும் நொந்து மனம் வாடாமல் அல்லல் களைந்து ஆதரிக் கும் தெய்வம் ஆறுமுகத் தெய்வம்.

இக்கலியுகத்தின் கடலாக விளங்கும் கந்தவேளைப் போற்றி கசிந்து உளம் உருகி மனமார வழிபட்டு மறைவழி ஒழுகி இன்பம் பெற்று உய்வோமாக.

**"ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க
வெற்பை கூறு செய்தனி வேல் வாழ்க
குக்குடம்வாழ்க செவ்வேள் ஏறிய மஞ்சை வாழ்க
யானை தன் அணங்கும்வாழ்க மாறிலா வள்ளி வாழ்க
வாழ்க சீர் அடியாரெலாம்.**
- வேலுண்டு பயமில்லை -

**உசாத்துணை நூல்கள்**
திருப்புகழ், கந்தர் அலங்காரம்

# வெற்றிப் பாதையில் யாழ் இந்துவின் சாரணியம் ...

✍ **த. சுஜீவன்**
**சாரணர் துருப்பு**

4 ஆவது யாழ்ப்பாணச் சாரணர் துருப் பானது தமிழர் தம் வாழ்வில் தாயென மிளிரும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தனது 9 தசாப்த சேவையில் வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது. எமது சாரணர் துருப்பானது 1910 ஆம் ஆண்டு எமது அன் றைய அதிபர் சஞ்சீவராவ் அவர்களால் ஆரம் பிக்கப்பட்ட காலம் முதல் **"எதற்கும் தயாராக இரு"** (Be prepared) என்ற தாரகமந்திரத் துடன் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரு கின்றது. மற்றும் எமது துருப்பு 1916 ஆம் ஆண்டு சட்டரீதியாக ஆரம்பிக்கப்பட்டது. எமது துருப்பு பாடசாலை ரீதியில் மட்டு மல்லாது சமூகரீதியிலும் தன் சேவையை வழங்கி வருகின்றது.

எமது துருப்பானது ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் முதலுதவி, வீதிக்கடமைகள், பரிசளிப்பு விழா, இல்ல மெய்வல்லுநர் போட்டி ஆகியவற்றின் போது தன் சேவையை முன்னின்று நடாத்திவருகின்றது. எமது துருப்பு யாழ் மாவட்டத்திலே தன் சேவையாலும் பற்பல திறமைகளாலும் தனக் கென ஒருதனித்துவமான இடத்தைப் பேணி வருகின்றது. யாழ் மாவட்டத்திலே சாரணிய வளங்கள் நிறைந்த துருப்பு எமது 4 ஆவது யாழ்ப்பாணம் சாரணர் துருப்பு என்பதில் ஓர் ஐயமுமில்லை.

எமது துருப்புச் சாரணர்கள் பயிற்சிப் பாசறைகள், மாவட்டப் பாசறைகள், ஜம் போறிகள், சர்வதேசப் பாசறைகளில் கலந்து எமது துருப்பிற்கு பெருமையினைச் சேர்த்து வருகின்றனர். மாவட்டப் பாசறைகளின் போது சிறந்த துருப்பிற்கான கேடயங்களை யும் பதக்கங்களையும் பெற்றுவருகின்றோம்.

4 ஆவது யாழ்ப்பாணம் சாரணர் துருப் பினர் பல்வேறு தேசிய ஜம்போறிகளில் கலந்து

திறமைகளை வெளிக்காட்டி எமது யாழ் இந்துவிற்கு புகழினைத் தேடித் தந்துள்ளனர். ஆனால் 7 ஆவது சாரணர் ஜம்போறி 4 ஆவது யாழ்ப்பாணம், யாழ். இந்துக் கல்லூரி சாரணர் துருப்பின் வரலாற்றில் ஓர் மைல் கல்லாகும். இவ் ஜம்போறியில் எமது துருப்பினைச் சேர்ந்த 42 சாரணர்கள் எமது துருப்புத் தலைவர் ந. நவசாந்தன் தலைமையில் மலை சூழ்ந்த நுவரெலியாவில் பங்கு பற்றி முன்னோடிச் செயற்பாடுகளில் ஈடுபட்டு பலரினதும் பாராட்டினைப் பெற்றுக் கொண்டோம்.

இவ் ஜம்போறியில் நாம் உபபாசறைப் பிரிவில் நான்காம் இடத்தினைப் பெற்றுக் கொண்டோம். மற்றும் 7 ஆவது ஜம்போறியில் நாம் ஒளிவிட்டுப் பிரகாசித்தமைக்கு முக்கிய காரணம் பாடசாலைச் சமூகம், சாரண ஆசிரியர்கள், பழைய சாரணர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகளும் தான் என்பதில் ஐயமில்லை.

இன்றுவரை எமது துருப்பில் சுமார் 95 சாரணர்கள் **ஜனாதிபதி விருதினைப்** (President Award) பெற்று எமது துருப்பின் தனித்துவத்தை பேணிவருகின்றனர். இனி வரும் காலங்களில் இவ் எண்ணிக்கை அதிகமாகும் என்பது உறுதி.

இவ்வாறு பலசாதனைகளை வேதனைகளின் மத்தியில் நிகழ்த்திவரும் யாழ். இந்துவின் சாரணியம் போற்றப்பட வேண்டியதொன்றாகும்.

சாரணியம் வாழ்க! யாழ் இந்து சாரணியம் வாழ்க!
(குழுச் சாரணர் கீதத்தின் அடி)

# இலக்கியமும் மனித விழுமியங்களும்

✍ *க. உஷாந்தன்*
தரம் - *11F*

மனிதனுடைய வாழ்க்கையைச் செம்மைப்படுத்துகின்ற பெரும்பணியைச் செய்வன இலக்கியங்களே. இலக்கியம் என்பது வெறுமனே சொற்களாலும் எழுத்துக்களாலும் கட்டப்பட்ட காகிதக்கட்டிடம் அல்ல. மாறாக, இலக்கியம் என்பது மனிதனின் மானுடநேசம் நோக்கிய பயணத்துக்கான நேர்மையான உயிருள்ள வழிகாட்டியாகத் திகழ்கின்ற சொல்லோவியம் ஆகும். அந்த வகையில் இலக்கியங்கள் மனித விழுமியங்களைப் பேணுகின்ற முயற்சியில் பெறுகின்ற வகிபங்கினை மதிப்பிடுவதே இந்தக் கட்டுரையின் ஆதார நோக்கம் ஆகும்.

இலக்கியமும் மனித விழுமியங்களும் என்கின்ற தலைப்பினைப் பெற்றிருப்பதால் இக்கட்டுரை, முதலில் **"இலக்கியம்"**, **"விழுமியம்"** என்பன பற்றிய விளக்கங்களில் மனம் செலுத்துகின்றது. **"இலக்கியம் என்பது ஒரு காலப்பகுதியில் நடப்பிலிருக்கின்ற அரசியல், பொருளாதார, சமுதாய, சமய, பண்பாட்டு நடவடிக்கைகளினடியாக உருத்திரண்ட சிந்தனைகளின் திரட்சி"** ஆகும். இந்த வகையில் நோக்கும் இலக்கியமும் சமூகமும் நெருப்பும் சூடுமாக இணைந்திருப்பது புலப்படும்.

மனித நடைமுறைகளின் ஒன்றிணைந்த வடிவமாக விளங்குகின்ற சமூகம் இலக்கிய உற்பத்தியில் பெரும் பங்காற்றுகின்றது. மனிதனுடைய வாழ்வியல் நடைமுறைகளே எழுத்து வடிவில் இலக்கியமாக எழுந்து நிற்கின்றன.

**"விழுமியம் என்றால் ஒழுக்கம், வாய்மை, நேர்மை, தியாகம், விட்டுக்கொடுப்பு, அறம், பண்பு, முதலான நல்லியல்புகளின் தொகுதி எனலாம்."** பொதுவாக மனிதனுக்கு வேண்டிய முக்கியமான நல்லியல்புகள் இவையென்பதால் இலக்கியங்களும் மனித விழுமியங்களையே முன்னிறுத்தி நிற்பதைக் காண முடியும்.

தமிழ்மொழியின் இலக்கியப் பாரம்பரியம் ஏறத்தாழ இரண்டாயிரம் வருடங்கள் நீட்சி கொண்டது. காதல், வீரம், பக்தி,

உலகியல் எனப் பல்வேறு பொருள் மரபு களுடன் தமிழ் இலக்கிய மரபு பயணித்து வருகின்றது. இவ்வாறு பல்துறைப் பண்புகள் கிளைத்து நிற்கின்ற போதிலும் இலக்கியத் தின் உள்ளீடு பொருளாக - சாரமாக - விழு மியப்பண்பு சுவறியிருப்பதனையும் அவ தானிக்க முடியும்.

இலக்கியத்தின் சிறப்புப் பண்புகளில் ஒன்று, அது தனிமனிதனுக்குரிய விழுமியங் களையும், ஒட்டுமொத்தமான சமூகத்துக் குரிய விழுமியங்களையும் உணர்த்தி நிற்ப தாகும்.

தனிமனித ஒழுக்கங்களைச் சுட்டுகின்ற மிகச் சிறந்த இலக்கியங்களாகத் திருக் குறள், நாலடியார், ஆசாரக்கோவை, திரிக டுகம், இன்னா நாற்பது, இனியவை நாற்பது, ஆகிய அறநீதி இலக்கியங்களும், சிலப்பதி காரம், மணிமேகலை, கம்பராமாயணம் ஆகிய காப்பியங்களும், பாரதியாரின் கவிதைகளும் மிளிர்கின்றன.

மனிதவிழுமியங்களில் முதன்மையா னது வாய்மை ஆகும். ஆணுக்கும், பெண் ணுக்கும் பொதுவான விழுமியங்களில் முதன்மைநிலை பெறுவதும் வாய்மை ஆகும். வாய்மையை மனிதனிடத்தில் நிலைபெறச் செய்வதற்காக உபதேச வடிவிலும், உதார ணக் கதைவடிவிலும் போதனை செய்து கொண்டிருக்கின்றது தமிழ் இலக்கியம்.

உள்ளத்தால் கூட ஒருவன் பொய்யை நினைக்கக் கூடாது. அத்துடன் ஒழுக்கங்கள் யாவற்றையும் நன்கு கடைப்பிடித்து, நல்லவர் உள்ளங்கள் மகிழும் படியாக வாழ்ந்தால் எல்லோரும் அவனைத் தம் நெஞ்சில் இருத் துவர் என்று சுட்டிக்காட்டுகின்றது உலகப் பொதுமறையான திருக்குறள்

**"உள்ளாதால் பொய்ய தொழுகின்**
**உலகத்தார்**
**உள்ளத்து ளெல்லாம் உளன் "**

என்கிறார் வள்ளவர்.

சில செயல்கள் உடனடிப்பலன்களைத் தரும். ஆனால் ஆராய்ந்து பார்த்தால் வாய்மையைப் போல நிலையான பலனைத் தரக்கூடிய சிறந்த குணம் எதுவுமேயில்லை என்று திருக்குறள் மேலும் குறிப்பிடும்.

**"யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை**
**எனைத்தொன்றும்**
**வாய்மையின் நல்ல பிற"**

என்கின்றது அக்குறள். இவ்வாறு வாய்மை யின் வல்லமையை வடிவப்படுத்திச் செல் கின்ற வள்ளுவர், வாய்மையிலிருந்து வழுவு வதால் வரத்தக்க வடுக்களையும் வரைந்து செல்கின்றார்.

**"தன் நெஞ்சு அறிவது பொய்யற்க**
**பொய்த்தபின்**
**தன் நெஞ்சே தன்னைச் சுடும்"**

தன் மனம் அறிந்த உண்மையான விடயங்களைத் திரித்துப் பொய் பேசக் கூடாது. அப்படிப் பேசினால் அவனுடைய மனமே அவனைத் தண்டிக்கும் என எச்சரிக் கின்றார் வள்ளுவனார்.

காப்பியங்களின் மகுடம் எனப்படு கின்ற கம்பராமாயணத்திலும் வாய்மையின் பெருமை இராமன், தசரதன் ஆகியோர் வாயிலாக எடுத்துக்காட்டப்படுகின்றது."

**"வாய்மை என்னும் ஈதன்றி வையகம்**
**நன்மையென்னும் ஒன்று சொல்லுமோ?"**

என்று வசிட்டரிடம் கேட்டு வாய்மையை விட நன்மை பயக்கத்தக்கது வேறொன்றுமில்லை என்று ஆனித்தரமாக இராமன் கூறிவிடு வதைக் காணலாம்.

வாய்மையைப் பற்றிக் கதை வடிவில் உபதேசித்த அரிச்சந்திர புராணமும் குறிப் பிடத்தக்க இலக்கியமே. எந்தக் கஷ்டம் வந்த போதிலும் உண்மை பேசுவதிலிருந்து பிறழாத அரிச்சந்திரனின் வாழ்க்கை, எல்லாக் காலத்துக்கும், எல்லாத் தேசத்தவர்க்கும்

எல்லாத் தலைமுறைக்கும் பொருத்தமான எடுத் துக்காட்டாக மிளிர்கின்றது.

**"கதி இழக்கினும் கட்டுரை இழக்கிலேன்"**

என்று உண்மையின் உயர்வை உலகுக்கு உணர்த்தினான் அரிச்சந்திரன் என்னும் பெருமகன்.

திருக்குறள் முதலான இலக்கியங்கள் வலியுறுத்துகின்ற மற்றுமொரு விழுமியம் விருந்தோம்பல் ஆகும். இன்முகங்காட்டி ஒருவரை வரவேற்பதும், அவரின் மனங் கோணாதபடி உபசரிப்பதும், அவர் விடை பெறுகின்ற வேளையில் அவரோடு வாசல் வரை கூடச்சென்று வழியனுப்புவதும் சீரிய மனிதவிழுமியங்களில் ஒன்றாகும். வள்ளுவர் இன்னுமொருபடி மேலே சென்று, வந்த விருந்தினை உபசரித்து வழியனுப்பி விட்டு, அடுத்த விருந்துக்கு ஒருவரை எதிர்பார்த்து நிற்கின்ற சிறந்த விழுமியத்தைத் திருக்குறள் தீட்டுகின்றது.

**"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல் விருந்து வானத் தவர்க்கு"**

பெரியவர்களை உபசரித்து அனுப்பி விட்டு, வீடுதேடி வருகின்ற விருந்தினர்க் காகக் காத்திருக்கின்ற நல்லவனை வானத் திலுள்ள தேவர்கள், தம்முடைய விருந்தினர் களாக ஏற்றுப் போற்றுவர் என்று விருந்தோம் பலின் சிறப்பின் பலனைத் திருக்குறள் எடுத்துக்காட்டுகின்றது.

பசித்த வயிற்றுக்கு அன்னமிடுவதும், இரந்து வருபவருக்குப் பொருள் கொடுப் பதும் மனித விழுமியங்களில் உயர்ந்தவை என்கின்றன இலக்கியங்கள். சங்ககாலத்தில் பசியைப் போக்கிய பண்பாளர்களைப் பசிப் பிணி மருத்துவர் என்று போற்றின சங்க இலக்கியங்கள். இரந்து வருபவருக்கு இல்லை என்று சொல்லாத மனமே உயர்ந்த மனம் என்று புகழ்கின்றது புறநானூறு.

மணிமேகலை என்னும் பெருங்காப் பியம், பசிதீர்க்கும் பண்பின் பொலிவைத் தெளிவாகக் கூறிநிற்கின்றது. பசித்து வரு பவர்களுக்கு **"உண்டி கொடுத்தவர்களே உயிர் கொடுத்தவர்"** என்று சுட்டிக்காட்டி உணவு கொடுக்கும் உன்னத விழுமியத்தை உலகின் செவிகளுக்கு உரத்துச் சொல் கின்றது மணிமேகலை.

சென்ற நூற்றாண்டின் யுகக்கவிஞன் பாரதி பின்வருமாறு முழக்கமிட்டு இந்த விழுமியத்தின் பெறுமதியை உணரவைக் கின்றான்.

**"தனியொருவற்கு உணவில்லையெனில்**
**இந்த ஜகத்தினை அழித்திடுவோம்"**

என்கிறான் பாரதி.

மன்னுயிர்க்காகத் தமது செல்வங்களை ஈந்த பாரி, காரி, பேகன், அதிகமான் முத லான மன்னர்களின் வரலாறுகளைச் சொல்லி இளந்தலைமுறையை ஆற்றுப்படுத்துகின்றது புறநானூறு. கர்ணனின் கொடை மாண்பை மகாபாரத இலக்கியம் பறைசாற்றி நிற் கின்றது. சிபி, மநுநீதிச்சோழன் ஆகியோரின் செயற்பாடுகள் இன்னும் சுவையானவை. பருந்தின் பசியைத் தீர்ப்பதற்காகப் புறாவுக் குப் பதிலாகத் தனது தசையை அரிந்து கொடுத்தவன் சிபிச்சக்கரவர்த்தி. தன்னு டைய மகனின் தேர்ச்சில்லில் அகப்பட்டுப் பசுக்கன்று இறந்ததால் ஆராய்ச்சி மணியை இழுத்து அடித்த தாய்ப்பசுவின் துயரத்தைத் தானும் அடைய வேண்டும் என்பதற்காகத் தனது தேர்ச்சில்லின் கீழ் மகனைக்கிடத்தித் தேரை ஏற்றியவன் மநுநீதிச்சோழன். உயர் திணைகளுக்கு மாத்திரமன்றி அஃறிணை களுக்கும் வாய்பேசாத ஜீவன்களுக்கும் நீதி செலுத்துகின்ற நேர்மையை மேற்கூறிய சம்பவங்கள் உணர்த்துகின்றன.

இல்லற வாழ்வின் செம்மையைக் கூறி வாழ்க்கையை ஒழுங்குபடுத்துகின்றன இலக் கியங்கள். பழிக்கு அஞ்சி அறநெறியில்

பொருள் ஈட்டி அதனைப் பகுத்துத் தகுதி யுடையோருக்கு அளித்துத் தானும் உண்ணு கின்ற பழக்கமுடையவர்களுக்கு வாழ்க்கைப் பாதை அச்சமின்றி முழுமைபெறும் என் கிறார் வள்ளுவர்.

**“பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை**
**வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்”**

என்கின்றார் அவர்.

ஒருவனுக்கு ஒருத்தி என்பது மனித உறவு சார்ந்த விழுமியங்களில் முக்கியமா னது. குடும்பங்களில் ஏற்படுத்தப்படும் ஒழுங்கு முறைசார்ந்த வாழ்க்கை முறைக்கு இந்த விழுமியம் அடித்தளம் அமைக்கின் றது. கம்பராமாயணம் என்னும் காப்பியத் தின் நாயகன் இராமன், இந்த விழுமியத்தின் சிறந்த அடையாளமாக விளங்குகின்றான். சீதை என்னும் தன் மனைவியைத் தவிர வேறு ஒரு பெண்ணைத் தனது மனதாலும் தீண்டப் போவதில்லை என்று **“ஏகபத்தினி விரத”**ப் பண்பினை அறிமுகப்படுத்துகின் றான் இராமன்.

கட்டிய மனைவியைத் தவிர ஏனைய பெண்களைக் கண்ணெடுத்தும் நோக்கக் கூடாது என வலியுறுத்துகின்ற தமிழ் இலக் கியங்கள், பிறபெண்களை நோக்குவதால் ஏற்படும் அழிவுகள், இன்னல்கள் என்ப வற்றையும் எடுத்துக்காட்டத் தவறவில்லை. சிலப்பதிகாரம் இதற்கு நல்ல எடுத்துக்காட் டாக மிளிர்கின்றது.

கோவலன் தனது மனைவியாகிய கண்ணகியைப் பிரிந்து கணிகையர் குலத்துப் பெண்ணான மாதவி மீது மையல் கொண்ட தால் தனக்கும் தன்னைச் சேர்ந்தவர்களுக் கும் மாத்திரமன்றி ஒரு நகரத்தின் அழி விக்கே காரணமாகி விடுகின்றான்.

கோவலன் மாதவியிடம் தனது பரம் பரைச் சொத்துக்களை இழக்க நேரிட்டது, பிறந்த ஊரான பூம்புகாரை விட்டு மதுரைக்கு இடம் பெயரவேண்டி ஏற்பட்டது; மதுரையில் 'திருடன் என்ற அவப்பெயர் பெற்றுக் கொள் ளப்பட நேரிட்டது. கண்ணகி கைம் பெண்ணாக நேரிட்டது ; பாண்டியன் இறக்க நேரிட்டது; கோப்பெருந்தேவி இறக்க நேரிட் டது ; மதுரை தீப்பற்றி எரிய நேரிட்டது; இத் தகைய அவலங்களைச் சுட்டிக்காட்டிய சிலப்பதிகாரம் புலனடக்கம் என்கின்ற உயரிய விழுமியத்தையும் உணர்த்து கின்றது.

கற்பு என்னும் விழுமியம் பற்றிப் பல இலக்கியங்கள் சுட்டிச் செல்கின்றன. திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம் முதலான இலக்கியங்களில் கற்பின் மகத்துவம் வலியுறுத்தப்பட்டிருக் கின்றது. **“உரைசால் பத்தினியை உலகோர் ஏற்றுவர்”** என்று கற்பின் மாட்சியைக் காட்சிப் படுத்துகின்றது. சிலப்பதிகாரம் கண்ணகி, சீதை, தமயந்தி, அனுசூயை, சாவித்திரி முத லானோர்களின் வரலாறுகளையும் கற்பின் சிறப்பையும் எடுத்துக்காட்டிச் சமூகத்தை வழிநடத்துகின்றன இலக்கியங்கள்.

செய்ந்நன்றி என்னும் சீரிய விழுமிய மும் தமிழ் இலக்கியப் பரப்பில் சிறந்த இடம் பிடித்துள்ளது. ஒருவர் செய்த உதவியை ஒருபோதும் மறக்கக் கூடாது என்பதை வலியுறுத்துவதில் தமிழ் இலக் கியங்கள் கண்டிப்பாக இருக்கின்றன. அவ சியப்பட் உதவியை வேளை அறிந்து செய்த போது, அந்த உதவியின் பரிமாணம் பூமியைவிடப் பெரியதாகின்றது.

**“காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது”**

என்று இதனைத் திருக்குறள் தெளிவாகக் காட்டிச் செல்கின்றது. இவ்வாறு நன்றி மறப்பதால் ஏற்படுகின்ற இழிவையும் திருக் குறள் எச்சரிக்கின்றது

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு"**

எந்த அறத்தைக் காப்பாற்றாமல் விட்டாலும் செய்ந்நன்றி என்கின்ற அறம் எப்பாடுபட்டேனும் காப்பாற்றப்பட வேண்டும் என்று சுட்டப்படுவதிலிருந்து செய்ந்நன்றி என்கின்ற விழுமியத்தின் சிறப்பு உணர்த்தப்படுகின்றது.

சில மகாமனிதர்கள், ஞானிகள் இவர்களுடைய வாழ்க்கைச் சம்பவங்களை எடுத்துக் காட்டுவதனூடாகவும் செய்ந்நன்றி என்கின்ற விழுமியம்வளர்க்கப்படுவதனைக் காணலாம். மகாபாரதத்தில் கர்ணன், இராமாயணத்தில் கும்பகர்ணன், கந்தபுராணத்தில் சிங்கமுகன் ஆகியோர் செய்ந்நன்றி மறவாத மாண்பாளர்களாக மிளிர்கின்றனர். பாண்டவர்கள் தனது சகோதரர்கள், அஸ்தினாபுரத்தின் முடிக்குரிய அரசன் தானே என்பதையெல்லாம் அறிந்திருந்தும் இவற்றை மதிக்காமல், துரியோதனன் தன்னை அங்க தேசத்து அரசனாக்கிப் பெற்றுத்தந்த கௌரவத்துக்காகப் போர்க்களம் சென்று உயிர் நீத்த கர்ணன், இராவணன் கொல்லப்பட்ட பின்னர் தனக்கு இராமன் பெற்றுத்தருவதாகச் சொன்ன இலங்கையின் அரசாட்சி உரிமையைத் தருவதாகக் கூறி இராமன் பக்கம் வருமாறு விபீஷணன் வருந்திக் கேட்டபோது நீர்க்குமிழி போன்ற இந்த நிலையற்ற வாழ்வை விரும்பி இராவணன் எனக்குத் தந்த உணவை நான் மறந்து அவனுக்குத் துரோகம் செய்வேனோ? எனக்கேட்டுச் செருமுனைக்குச் சென்று உயிர்நீத்த கும்பகர்ணன் ஆகியோரின் வாழ்வியல் நடைமுறையானது செஞ்சோற்றுக்கடன் என்கின்ற விழுமியத்தினை வாழ்விப்பதாக அமைந்திருப்பதனைக் காணலாம்.

இராமாயணம், மகாபாரதம் என்னும் இதிகாசங்கள் சிறந்த விழுமியங்களின் கட்டமைப்புக்களாகத் திகழ்கின்றன. இராமன், பெற்றோர் சொல்லை மதித்தல், பெரியோரைக் கனம் பண்ணுதல், சகோதர பாசம், சமத்துவ மனப்பாங்கு, ஏகபத்தினி விரதம் முதலான விழுமியங்களின் அடையாளமாக விளங்குகின்றான்.

**"மன்னவன் பணியன்றாகில் நும்பணி மறுப்பனோ என்**
**பின்னவன் பெற்ற செல்வம் யான் பெற்றதன்றோ?"**

என்று குறிப்பிடுவதன் மூலம் பெற்றோர் சொல்லை மதித்தல், உண்மையான சகோதர பாசம் என்பவற்றை வெளிப்படுத்துகின்றான் இராமன். வேடனான குகன், வானர ராஜனான சுக்கிரீவன், அரக்கர் குலத்தவனான விபீஷணன் ஆகியோரைத் தனது சகோதரர்களாகக் குறிப்பிடுவதன் மூலம் சமத்துவப் பண்பை அடையாளப்படுத்துகின்றான்.

சீதை கற்பின் அடையாளமாகவும், பரதன், இலக்குவன், கும்பகர்ணன் ஆகியோர் சகோதர பாசம் என்னும் விழுமியத்தின் குறியீடுகளாகவும் திகழுகின்றனர். மகாபாரதத்திலும் பொறுமை, மனவுறுதி, வாய்மை, ஒழுக்கம் முதலான விழுமியங்கள் சுட்டப்பெற்றுள்ளன.

அறநீதி இலக்கியங்களில் ஆசாரக் கோவையும், நாலடியாரும் முக்கியமானவை. செய்ந்நன்றி அறிதல், பொறையுடைமை, இனியவை கூறல், இன்னாசெய்யாமை, கல்வி, ஒப்புரவறிதல், அறிவுடைமை, நல்லினத்தார் நட்பு என்ற எட்டும் ஆசாரங்கள் அனைத்துக்கும் விதையாக அமைகின்றன என்கிறது ஆசாரக்கோவை. பொய்பேசுதல், புறங்கூறுதல், பிறர் பொருளை வவ்வுதல், பொறாமைப்படுதல் என்ற நான்கு தீய செயல்களையும் ஐயமற்ற அறிவுடையவர் சிந்திக்க மாட்டார். யாரேனும் இந்தத் தீச்செயல்களை எண்ணிச் செயற்படுவாராக இருந்தால் அவர் நகரத்துள் விழுந்து துன்பப்படுவார் என்றும் எச்சரிக்கின்றது ஆசாரக்கோவை.

நாலடியாரும் திருக்குறளைப் போல விழுமியங்களைப் போதிக்கின்ற இலக்கியம் ஆகும். உலகவாழ்க்கையில் ஒருவர் எங்ஙனம் ஒழுக்கத்துடன் நடந்துகொள்ள வேண்டும் என்பதை நாலடியார் வலியுறுத்தும். பிறருடைய இரகசியத்தை அறிய முற்படாமல் காதைச் செவிடாக்கிக் கொள்ள வேண்டும். பிறருடைய மனைவியைக் காமக் குறிப்புடன் பார்க்காமல் கண்களைக் குருடாக்கிக் கொள்ள வேண்டும். பிறரைப் பற்றிப் புறங்கூறநேரும் பொழுதெல்லாம் வாயினை ஊமையாக்கிக் கொள்ளவேண்டும் என்றெல்லாம் நாலடியார் கூறும் விழுமியங்கள் வரவேற்கத்தக்கன.

# இனப்பெருக்க வரைவிலக்கணத்தையே மாற்றி அமைத்துவிட்ட குளோனிங் முறை

ஸ்ரீ. பிரணவன்
தரம் - 11F

இனப்பெருக்கம் என்பது ஒரு இனமானது தனது இனத்தைப் பெருக்கமடையச் செய்வதே ஆகும். பொதுவாக ஓர் அங்கியின் இனப்பெருக்க முறையானது இரு பிரிவுகளுள் அடங்கிவிடுகின்றது.

1) **இலிங்கமுறை**

2) **இலிங்கமில்முறை**

என்பனவாகும். இவற்றில் **"குளோனிங் முறை"** என்று உலகெங்கும் பரவலாகப் பரபரப்பாகப் பேசப்படும் இந்த அங்கி இனப்பெருக்க முறையானது இரண்டாவது முறையான இலிங்கமில் இனப்பெருகக் முறைக்குள்ளேயே அடக்கப்படுகின்றது. அதாவது ஆண், பெண் இனச்சேர்க்கை இல்லாமலேயே ஓர் உடற்கலத்தில் (one body cell) இருந்து இன்னொரு வளமான எச்சத்தை உருவாக்கிக் கொள்ளுதலே குளோனிங் முறை எனப்படுகின்றது.

முதன் முதலாக ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த ரோஸலின் எனும் நிறுவனத்தில் 1995 ஆம் ஆண்டு **"மெகான்"** → **"மொராக்"** என்ற ஆடுகளின் ஆண் விந்தும் பெண் முட்டையும் மற்றொரு ஆட்டின் கருவறையில் வைத்து உருவாக்கப்பட்டன. இவை இரண்டும் ஓர் ஆட்டின் கருப்பையில் இருந்த கருவில் இருந்து எடுக்கப்பட்ட கலங்கள் மூலம் உருவாக்கப்பட்டன. ஆனால் அதன் பின்னர் உருவான **"டொலி"** ஆடுதான் முதன்முதலில் ஓர் உடற்கலத்திலிருந்து உருவாக்கப்பட்டது.

குளோனிங் செய்வதற்கு இரண்டு கலங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஒன்று வழங்குநர்கலம். மற்றையது பெறுநர் கலம். வழங்குநர் கலம்தான் குளோனிங் செய்யப்பட வேண்டிய விலங்கின் உடற்கலம். பெறுநர் கலமான்து குறித்த இனப் பெண் விலங்கின் சூலகத்தில் இருந்து வெளியேறி இன்னும் கருவுறாத முட்டைக்கலம். இது கருவுற்று வளரத் தேவையான தூண்டலை வழங்கிய கணத்தில் இருந்து வளரக்கூடியது.

மிகவும் சக்திவாய்ந்த நுணுக்குக்காட்டியினால் முட்டைக்கலத்தை (பெறுநர்கலம்) அவதானித்து நுண்துளைக் குளாய்மூலம் துளைத்து உள்ளே காணப்படும் பரம்பரைக் காவிகளான D.N.A க்களைக் கொண்ட நிற மூர்த்தங்களை உறிஞ்சி எடுத்துவிடுவார்கள். பின் வழங்குநர் கலமானது அதன் கரு சகிதமாக முட்டைக்கலத்துடன் ஒட்டிப் பிணைய வைக்கப்படுகின்றது. பின்னர் இக் கூட்டுக்கலமானது தகுந்த செவிலித்தாயின் கருப்பையில் பதிக்கப்படுகின்றது. அப்போதிலிருந்தே உரிய விலங்குக் குட்டியாக வளரத் தொடங்கிவிடுகின்றது.

இயற்கையாக ஒரு முட்டையும் விந்தும் இணைந்து கருக்கட்டல் நிலையை அடைய எத்தனிக்கும்போது மின்தூண்டல் பிறப்பிக்கப்படுவது வழமை. அதேபோல் குளோனிங் முறையிலும் கலப் பிணைவின்போது சிறிய

அளவிலான மின் அதிர்ச்சியொன்று புறத்தே யிருந்து வழங்கப்படுகின்றது. இக்குளோனிங் முறையானது **"ரொஸ்லின் முன் மாதிரி "** என உலகெங்கும் விளக்கப்படும் ஒரு வெற்றிகர மான திட்டமாகும். இம்முறைமூலம் பிறக்கும் குழந்தைகள் முற்றுமுழுதாக வழங்குநர் கலத்தின் இயல்பை ஒத்திருந்தன. வாடகைக் கர்ப்பப்பையின் சொந்தக்காரரின் இயல் பையோ பெறுநரின் இயல்பையோ கொண்டி ருக்கவில்லை. இது பலமுறைகள் பரிசோதிக் கப்பட்டு முடிவுசெய்யப்பட்டது.

குளோனிங் குழந்தை உருவாக்கல் படிமுறையைப் பின்வருமாறு காட்டலாம்.



ஆயினும் குளோனிங் முறை மூலம் ஒரு வரைப் போலவோ உருவமும் மரபுப் பண்பும் கொண்டவரை உருவாக்க முடியும். ஒரே குணம் கொண்டவரை எப்போதும் உருவாக்க முடியாது. இவ் அறிவிய லானது தன் திசையில் முன்னேறிக் கொண்டுதான் இருக்கும். அதை பயன் படுத்துவது ஆக்கத்திற்கா அல்லது அறி விற்கா என்பதை தீர்மானிக்க வேண்டியது மனிதகுலம்தான்

# Linux (லினக்ஸ்)

✍ *T. ஹரிகரன்*
கணிதப்பிரிவு - 2008

இன்றைய உலகில் கணனியின் தேவை வெகுவாக அதிகரித்துவிட்டது. கணனி இன்றி எந்தவொரு செயலும் நடை பெறாதென்றளவிற்கு எம்மை கணனி ஆக்கிர மித்துவிட்டது என்றால் அது மிகையாகாது. அத்தகைய கணனியின் இயக்கத்திற்கு இன்றி யமையாத ஒன்றே Operating system ஆகும். இதைக் கணனியில் நிறுவிய பின்னரே நாம் அதைப் பயன்படுத்த முடியும். இத்தகைய Operating system ஆனது பல்வேறு நிறுவ னங்களினால் வெளியிடப்படுகின்றன. உதார ணமாக Microsoft, Mandrake, Sun, Red Het ... etc. ஆனால் பெரும்பாலான Operating systemகள் விலை கொடுத்து வாங்கப்பட வேண்டியவையே ஆகும். ஆனால் பயன் படுத்துவதற்கு எளிதாகவும், இலவசமாகவும் கிடைக்கின்ற Operating system ஆகிய Linux பற்றி தெரிவிப்பதே இக்கட்டுரையின் நோக்க மாகும்.

நமது மண்ணிலே பொதுவாக **கணனி** உபயோகிப்பவர்கள் Microsoft **இனுடைய** Window Xp ஐயே தமது **கணனிகளில்** பயன்படுத்துகின்றனர். அதைவிட **எளிதான**, மிக முக்கியமாக இலவசமாகக் **கிடைக்கும்** Linux ஐ மறந்துவிடுவது **வேதனைக்குரியது.** இவ் Linux ஆனது *1991*ஆம் **ஆண்டு** பின்லாந்திலே கண்டுபிடிக்கப்பட்டது. **இந்** நாட்டைச் சேர்ந்த ஹெல்சிங்கி **(Helsinki)**

பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த Linus Torvalds என்ற மாணவரின் முயற்சியினால் உருவானதே இந்த Linux ஆகும். இவரே இவ் Linux இன் கெர்னெல் (Kernel) எனப் படும் கரு மூலப் பகுதியை உருவாக்கினார்.

இன்று உலகில் பல்லாயிரக்கணக்கான Software Programmers இன் உழைப்பினால் Linux உயர்ந்து நிற்கின்றது. இவ் Software இற்கான மூல வரிகளை (Source Code) யாரும் பார்வையிட முடியும் என்பதோடு அதனுள் தமது எண்ணங்களைச் செலுத்தி மேலும் விருத்தியாக்கி பயன்படுத்த முடியும். இதுவே இன்றைய Linux இன் அபரிமிதமான வளர்ச்சிக்குக் காரணமாகும்.

இவ் Linux ஐ மெருகூட்ட செய்தது Free Software Foundation என்ற அமைப்பே ஆகும். இன்று எல்லோரும் Linux ஐ Gnu / Linux என அழைக்கின்றனர். Unix ஐ அடிப் படையாக கொண்டே Linux உருவாக்கப் பட்டது. எனவேதான் Linux ஆனது Unix இலுள்ள அனைத்து வசதிகளுடனும் உலாவருகின்றது. Posix (Portable Operating System interface for Unix) வரையறையின் அடிப்படையிலேயே Linux உருவாக்கப்பட் டுள்ளது.

இலவசமாகக் கிடைப்பதனால் இதனை யாரும் குறைத்து மதிப்பிடக்கூடாது. ஏனெனில் இது இன்று விலைக்கு கிடைக்கும் பல Operating System களைவிட மிகச் சிறந்த முறையில் கணனி வல்லுநர்களால் உருவாக்கப்பட்டு உலாவருகின்றது. விலைக்குக் கிடைக்கும் பல Operating system களுடன் போட்டி போட்டு அவற்றை தட்டிச் செல்லும் அளவிற்கு அபரிமிதமான வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இத்தகைய சிறப்பு வாய்ந்த Linux இல் பின்வரும் வசதிகள் / அம்சங்கள் உள்ளன.

* **கிராபிகல் யூசர் இன்டபேஸ் *(Graphical User Interface - GUI):***
  கணனியில் உள்ள மெனுக்கள் ஐகான்கள் (Icons) போன்றவற்றை Mouse, Keyboard கொண்டு இயக்க உதவும். இடைமுகப்பே இதுவாகும். பல Animationகளைச் செய்ய இது உதவும்.

* **மல்டி - யூசர் *(Multi user)***
  பல பயனாளர்களை ஒரு கணனியில் உருவாக்கி பயன்படுத்த இது உதவும். பலர் ஒரே நேரத்தில் கணனியில் இணைந்து பணியாற்ற இவ்வசதி அனுமதி யளிக்கின்றது.

* **அப்ளிகேஷன் ஏற்பு *(Application)***
  பல இலவச Software களை இணையத் தளத்தில் பெற்று பயன்படுத்த முடியும். Free software Foundion வெளியிடும் பெரும்பாலான GNU Software கள் Linux இல் இயங்கும்.

* **மல்டி ராஸ்க்கிங் *(Multi tasking)***
  பல Programme களை ஒரே நேரத்தில் இயங்கச் செய்ய இது வழிகோலுகின்றது. மேலும் Linux ஐ Server இல் பயன் படுத்தவும் முடியும்.

* **நெட்வேர்க் இணைப்பு *(Network)***
  Linux ஐ இலகுவாக network இணைப் பில் பயன்படுத்த முடியும். இதை எளிதாக Lan (Local Area Network) இல் பயன் படுத்தலாம்.

* **விண்டோ மேனேஜர் *(Window Manager)***
  Window frames, Menus, Icons, Colours போன்றவற்றை விரும்பியவாறு கவர்ச்சி யாக மாற்றியமைக்க இது உதவும். GNOME, KDE போன்ற DesktopManager களையும் இதில் பயன்படுத்தலாம்.

* **மல்டி டெஸ்க்டோப் *(Multi desktop)***

பல application களை ஒரே நேரத்தில் பயன்படுத்தும் போது desktop முழுதும் நிரம்பி இருக்கும். பார்ப்பதற்கு அழகாக இருக்காது. இதைத் தவிர்க்க Linux இல் பல desktop களை ஏற்படுத்தி விரும்பிய applicationகளை விரும்பிய desktopகளில் பயன்படுத்தலாம்.

**ரீபூட் தேவைப்படாது *(Reboot)***

பல Operating Systemகள் சரிவர செயற் படாதபோது நாம் அவற்றை Reboot செய்ய வேண்டி இருக்கும். ஆனால் Linux இன் திடநிலை (Stability) காரணமாக இந்தநிலை ஏற்படாது.

இத்தகைய வசதிகள் கொண்ட Linux இலவசமாக உலகெங்கும் பலவிதத்திலும் நன்மை பயக்கக்கூடியதாகக் கிடைக்கின்றது. இணையத்தளங்களிலோ அல்லது நண்பர் களிடமிருந்து பெறும் CDகளை Copy செய் வதன் மூலமோ இதை நிறுவி பயன்படுத்த லாம். மேலும் இவ் CDகளுடன் Linux ஐ பயன்படுத்த வழிகாட்டும் வழிகாட்டி நூல் களும் இலவசமாகக் கிடைக்கின்றன. மேலும் இவற்றில் பயன்படுத்தப்படும் சகல Software களும் கூட இலவசமாகவே கிடைக்கின்றன. இந்த Linux ஆனது மேன்ரெக் (Mandrake) ரெட்ஹெட் (Redhat), சுசீ (Suse) போன்ற பல நிறுவனங்களால் பல்வேறு மேம்பட்ட வசதி களுடன் வெளியிடுகின்றன. இந்த Linux ஆனது அதிக நம்பகத்தன்மையைக் கொண்ட தாக அமைந்துள்ளது. இதை Web sever, E-mail sever போன்றவற்றில் பயன்படுத்து வது நம்பகரமானது. மேலும் இத்தகைய Linux இல் ஏதேனும் பிரச்சினைகள், சந் தேகங்கள் ஏற்படின் அவற்றைத் தீர்க்க ஏராள மானோர் காத்திருக்கின்றனர். Linux users Groups எனப்படும் இவர்களிடம் இலவசமாக நேரடியாகவோ அல்லது இணையம், ஏனைய தொடர்பாடல் கருவிகள் மூலம் ஆலோசனை பெறமுடியும். உங்கள் கணனியின் எந்த Hardware ற்கும் இது ஒத்துழைப்பு வழங்கி செயற்படும்.

இன்று நம்நாட்டில் அத்தியாவசிய பொருள்கள் யானைவிலை, குதிரை விலைக்கு கிடைக்கும் போது எதிர் காலத்தை வழிப்படுத்தப் போகின்ற கணனி மென்பொருள் இலவசமாகக் கிடைத்திருப் பது எமக்கு வரப்பிரசாதமே. எதிர்கால மாணவ சமுதாயம் கணனி, அதுசார் தொழில் நுட்பங்களில் முன்னேறுவதற்கு இது பெரிதும் உதவும் எனின் அது மிகையாகாது. இத் தகைய சிறப்புக்களுடன் கூடிய Linux ஐ அனைவரும் பயன்படுத்தி பாருங்களேன் எதிர்காலம் வளமுறும்.

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்

- வள்ளுவர் -

## வர்த்தக மாணவர் ஒன்றிய செயற்குழு



இருப்பவர்கள் (இடமிருந்து வலம்) : க. அஜித் (இதழாசிரியர்) , பா. ஜெயரட்ணராஜா (பொறுப்பாசிரியர்), இ. சஞ்சயன் (தலைவர்), பொ. மகேஸ்வரன் (பிரதி அதிபர்), வீ. கணேசராஜா (அதிபர்), அ. அன்ரன் (செயலர்), பொ. ஸ்ரீகந்தராஜா (பகுதித்தலைவர்), ம. சரிதாஸ் ( பொருளாளர்), கி. சண்முகராசா (பொறுப்பாசிரியர்)

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) : வி. அனுரதன், சி. டுஷ்யந்தன், கி. கபிலன், கு. வினோஜன், க. வாகீசன், ந. சுதாகரன், கு. மகிந்தன், சு. பிரசன்னா, உ. தமோனுதன்

## Service Club



***Seated ( L - R) :*** *Master. T. Janakaran (Treasurer), Master. S. Sanjeevan (Editor), Mr. P. Maheswaran (Deputy Principal), Mr. V. Ganesarajah, (Principal), Master. M. Sivajeevan (President), Mr. V. Thavakulasingham (Teacher in Charge), Mr. P. Srikantharajah (Vice President), Master. S. Kajendran (Secretary)*

***Standing (L - R) :*** *S. Kajaram, Master. S. Mayuran, Master. K. Nirujan, Master. S. Dineshanth, Master. V. Aruran, Master. M. Navanetha Sharma, Master. B. Banujan, Master. S. Niroshan, Master. T. Nanthagobi, Master. M. Ramji, Master. M. Ramanan*



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கவின்கலை மன்றம் 04.04.2006 அன்று
பாடசாலை இசை ஆவணமாக வெளியீடு செய்த "தீம் தீம்" இசை இறுவட்டு
நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக திரு. W. S. செந்தில்நாதன் கலந்துகொண்டார்.




04.04.2006 அன்று "தீம், தீம்" இசை இறுவட்டு வெளியீட்டு
நிகழ்வில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சி

# தனிப் பெருங் கலையகம்

யோ. அஜித்
உயிரியற்பிரிவு - 2008

இந்துமா சமுத்திரத்தின் முத்தெனத் திகழ்வது ஈழமணித் திருநாடு. ஈழத்தின் மணி மகுடமென அமைவது வீணாகானபுரம், சிங்கை நகர், உத்திரதேசம் எனப்பல பெயர்களாலும் அழைக்கப்படும் ஈழத் தமிழர் தம் இணையிலா நகரம் ஆதியில் பூதலம் புகழும் சங்கிலி மன்னன் ஆண்ட புகழ்பெறு நகரம் எழிசை வல்லோன் யாழிசைப் பாணன் இனிய நற்பரிசாய்ப் பெற்ற எம் நகரம் யாழ்ப்பாண மா நகரம்.

யாழ். மாநகரில் குன்றாத கல்வியோடு தெய்வ மணங்குலவி பொன் மாது செழித்தோங்கு வண்ணார் பண்ணையிலே அறிஞர்கள், கலைஞர்கள் அவதார பீடமாய் ஈழத்தமிழர் வாழ்விற்கு அறிவூட்டி இதயத்தால் அரவணைத்து தமிழரெம் வாழ்வினிற் தாயென மிளர்கின்றாள் நம் இந்து அன்னை.

நாவலர் பெருமானின் உன்னத வாழ்வோடும் அவர் முகிழ்ந்த விழிப்புணர்வோடும் சைவ சமயத்தினதும் தமிழினதும் மறுமலர்ச்சியின் எடுத்துக்காட்டுச் சின்னமாகத் தோன்றிய இக் கல்லூரி சைவத்துக்கும் தமிழுக்கும் செய்யப்பட்ட பெருந்தொண்டாகும். அன்னையவள் தோற்றம் பெற்ற வரலாறு மிக நீண்டது.

19 ஆம் நூற்றாண்டில் அன்னியர் ஆட்சியில் சைவமும் தமிழும் நலிவடைந்திருந்த ஒரு காலகட்டத்தில் இவ்விரண்டினதும் மறு மலர்ச்சிக்காய் அருந்தொண்டாற்றியவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், பிரித்தானிய அரசின் ஆதரவு, அனுசரனை பொருளாதாரப் பலம் முதலியவற்றைக் கொண்டிருந்த மிஷனரிச் சங்கங்கள் மேற்கொண்ட தீவிரமான கிறிஸ்தவ சமயப் பரப்பு நடவடிக்கைகளுக்கு ஈடு கொடுத்து சைவ சமயத்தைப் பாதுகாத்து அதனை நிலை நாட்டும் தேவை அன்றைய கால கட்டத்திலிருந்தது.

**"அறிவற்றங் காக்குங் கருவி
செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்"**

என்கிறது திருவள்ளுவம். அதாவது பகையால் அழிவு வராமல் பாதுகாக்கும் அரண் அறிவு ஒன்றுதான். ஆனால் மிஷனரிமார்கள் அக் கல்வியையே ஆயுதமாக்கி அக்கால சமூக நிலையையும் சாதகமாகக் கொண்டு ஆங்கிலமொழி மூலக் கல்வியையும் அதனால் அரச உத்தியோகங்களைப் பெறும்வாய்ப்பையும் ஏற்படுத்திய வேளையில் இந்துக்களை மதம் மாற்றுவதைத் தடுக்கவும் சைவசமயச் சூழலில் ஆங்கிலக் கல்வியைப் போதிக்கவும் நாவலர் அவர்கள் பெருமுயற்சி செய்தார்.

இதன் பொருட்டு 1872 இல் வண்ணார் பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலை என்ற பெயரில் ஒரு பாடசாலையை நிறுவினார். ஆனால் பற்பல காரணங்களினால் அப் பாடசாலை தொடர்ந்து இயங்கமுடியாமற் போயிற்று.

1879 ஆம் ஆண்டு நாவலர் மறைந்த பின் நாவலரின் சேவையைத் தொடர்ந்து நடாத்தும் நோக்குடன் 1888 இல் சைவசமய பரிபாலன சபை உருவாக்கப்பட்டது. சைவ

சமயச் சூழலில் உலகியற் கல்வியையும் ஆங்கிலக் கல்வியையும் போதிக்கும் பாட சாலை ஒன்றைத் தாபிப்பது அச்சபையின் பிரதான நோக்கங்களில் ஒன்றாகவிருந்தது. நாவலரின் சிந்தனையில் விதையிடப்பட்ட இந்தப் பின்னணியில் தான் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தோற்றம்பெறத் தொடங் கியது.

1890 ஆம் ஆண்டு இந்து உயர் பாட சாலை (The Hindu High School) எனத் தோற்றம் பெற்ற இந்துக் கல்லூரி இந்துக் களின் கல்வி, சமய வரலாற்றில் முக்கியத் துவமுடையதொன்றாக விளங்கியது

இந்துக் கல்லூரி தனியொரு நபரினால் தாபிக்கப்பட்டதொன்று எனக் கூறமுடியாத போதும் ஆறுமுகநாவலரின் சைவசமய மறுமலர்ச்சியினால் ஈர்க்கப்பட்டவர்களினால் நாவலரின் சிந்தனைக்கு செயல் வடிவம் கொடுப்பதற்காய் ஒன்றிணைந்து இக் கல்லூரியைத் தாபித்தனர் எனலாம்.

ஆனாலும் ஆரம்ப நாட்களில் கல்லூரி யின் தோற்றத்திற்குத் தன் உடல், பொருள் ஆவியனைத்தையும் அர்ப்பணித்து பிடியரிசிக் குட்டான் வீட்டுக்கொரு தேங்காய் என்று கஷ்டம் நிறைந்த அந்நாட்களில் கல்லூரி யின் முகாமையாளராயிருந்து கல்லூரியை வளர்த்த அப்புக்காத்து சின்னத்தம்பி நாக லிங்கம் அவர்களும், அவரின் முயற்சி களுக்குப் பெருந் துணையாக நின்ற பசுபதிச் செட்டியார் அவர்களுமே இக்கல்லூரியின் தாபகர்கள் என்றால் மிகையாகாது.

இந்து உயர் பாடசாலைக்கான நிரந் தரக் கட்டடம் 1895 இல் முதலியார் பொ. குமாரசுவாமி அவர்களால் திறந்து வைக்கப் பட்டது. இக் கட்டடத்திலிருந்த மண்டபத்தில் சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் நோக் குடன் பல நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

பல பெரியோர்களின் உரைகள், கதாப்பிரசங்கங்கள், வரவேற்பு விழாக்கள், இன்னிசைக் கச்சேரிகள் போன்ற பல நிகழ்வுகள் இங்கு இடம்பெற்று வந்தன. இந்தியாவிலிருந்து அக்காலத்தில் இலங் கைத் திருநாட்டுக்கு வருகைதந்த அறிஞர் பெருமக்களும், சமயப் பெரியார்களும் யாழ்ப்பாணத்துக்கு வருகை தருவதையும் அத்தோடு நின்றுவிடாது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு விஜயம் செய்வதையும் இம் மண்டபத்திலே உரையாற்றுவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

இந்த வகையிலே 1897 ஆம் ஆண்டு இலங்கை வந்த சுவாமி விவேகானந்தர் யாழ்ப் பாணம் வருகைதந்த போது யாழ்ப்பாண இந்துக்கள் அவருக்குப் பெரும் வரவேற்பு அளித்தனர். அதனைத் தொடர்ந்து ஜனவரி 23 ஆம் நாள் மாலையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்திலே வேதாந்தம் எனும் தலைப்பில் நமது மதத்தின் முக்கிய கருத்துக்களை மையமாகக் கொண்டு அருமையான ஓர் விரிவுரையாற்றினார் சுவாமிஜீ. இப் பேச்சு சரித்திரப் பிரசித்தி பெற்ற ஒன்றாக அமைந்தது.

இம் மண்டபத்திலே நடைபெற்ற வர லாற்றுப் புகழ்மிக்க சம்பவங்களுள் 1927 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 27 ஆம் திகதியன்று பாரத தேசத்தின் தந்தை மகாத்மா காந்தி அவர்கள் விஜயம் செய் தமையும் குறிப்பிடத்தக்கது.

இப்பிரார்த்தனை மண்டபமானது கல்லூரி வரலாற்றின் பல முக்கிய நிகழ்வுகள் நடைபெற்ற மண்டபமாகவும், அறிஞர்கள், பல ஆதீன முதல்வர்கள் சமயப் பெரியார்கள் வருகைதந்த புனிதம் மிக்க தலமாகவும் விளங்குகின்றது.

1890 இல் தோற்றம்பெற்ற இந்து உயர் பாடசாலை 1895 இல் இந்துக் கல்லூரி

எனும் பெயரைப் பெற்றுக் கொண்டதுடன் தொடர்ந்து வந்த பற்பல அதிபர்களின் அளப் பெரிய சேவையினாலும், ஆளுமைமிக்க செயற்பாட்டினாலும் மிகவிரைவிலே ஈழத் தமிழர் வரலாற்றில் தனியிடம் பெற்று கல்வித்துறையிலும், விளையாட்டுத்துறை யிலும் சிறப்புமிக்க சாதனைகளை ஈட்டி தேசியப் பாடசாலையாக உயர்வு பெற்றது.

எம் கல்லூரி அன்னையின் வரலாற்றில் அதிபர்களான திரு. நெவின் செல்லத்துரைப் பிள்ளை, திரு. ஏ. குமாரசுவாமி ஆகிய கனவான்களின் சேவைகள் பொன் எழுத்துக் களால் பொறிக்கப்பட வேண்டியவை.

ஈழத்தமிழர் வரலாற்றில் பொறியியலா ளர், வைத்தியர்கள் புகழ் மிக்க மாமனி தர்கள், அறிவியளாளர்கள் என மிகப் பெரிய கல்விச் சமூகத்தை உருவாக்கிய பெரும் பங்கு எம் கல்லூரியையே சாரும். கல்விப் புலம் மட்டுமின்றி விளையாட்டுத்றையிலும் பற்பல சங்கங்கள், கழகங்கள் அமைத்து தலைமைத்துவத்தையும் ஆளுமையையும் விருத்திசெய்து ஈழத்தமிழர் வாழ்விற்கு கலங்கரை விளக்காகத் திகழ்கின்றது யாழ் இந்துக் கல்லூரி.

பழமையும் பெருமையும் மிக்க யாழ் இந்து அன்னை

**"கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக"**

எனும் பொய்யா மொழியை மகுட வாக்கிய மாய் சிரமேற் கொண்டு கற்க வேண்டிய கலைகள் யாவற்றையும் குற்றமறக் கற்பிக் கும் பெருமைபெற்றவள். அதற்கேற்றால் போல் **"நிற்க அதற்குத் தக"** என்ற இலட் சிய வாக்கிற்கமைய எமது தாயின் தவப் புதல்வர்கள் பல்வேறு துறைகளிலும் நிபுணத் துவத்தோடு பெருமைபெற்று நிற்கின்றனர்.

எம் கல்லூரி நூற்றாண்டுகள் கழிந் தும் மங்காப் புகழோடு தரணி போற்றும் ஒளிர்மிகு கழகமாய் திகழ்வதற்குப் பல் கோடி மக்களின நல்லாசியும் எம் கல்லூரி மத்தியிலே வீற்றிருந்து ஆனந்தக் கோலகல அருளாட்சி புரிகின்ற சிவஞான வைரவப் பெருமானின் திருவருளுமே காரணம் என லாம்.

ஈழத்தமிழர் யாவரும் தலைநிமிர்ந் திடும் பெருமையினைத் தந்து வண்ணை யிலே பொலிவோடு நிமிர்ந்து நிற்கும் எம் அன்னை இலங்கையின் புகழ்பூத்த கல்லூரி களுள் ஒன்றாகத் தொடர்ந்தும் சாதனை படைத்த வண்ணமிருக்கின்றாள்.

சைவத்துக்கும் தமிழுக்கும் அளப் பெரிய இலக்கணமாய் இலங்கை மணித் திருநாட்டினில் எங்கும் இந்து மதத்தவர் உள்ளம் இலங்கிடும் ஒரு பெருங்கலைய கமாய் ஈழத்தமிழர் தனிப்பெருங்கலையக மாய் என்றென்றும் திகழ்வாள் என்பதில் ஐயம் ஏதும் இல்லை.

**"தமிழரெம் வாழ்வினிற் தாயெனமிளிரும்**
**தனிப்பெருங் கலையகம் வாழ்க!**
**தன்னிகர் இன்றியே நீடு**
**தரணியில் வாழிய நீடு."**

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து.

-வள்ளுவர் -

# யாழ்ப்பாணத்தில் சமய கலாசார நிலைகள் நேற்றும் இன்றும் நாளையும்

சித்திரவேலாயுதம் டினேஸ்
தரம் - 13A
( 2008 A/L)

அண்டசராசரங்கள் அனைத்தையும் படைத்துக் காத்து வரும் பரம்பொருளாகிய சிவபிரானை முழுமுதற்கடவுளாகக் கொண்டு வழிபட்டுவரும் சைவசமயமானது அநாதி காலம் தொட்டு பயிலப்பட்டு வருவதாகும். சைவசமயம் என்பது காலம் கணக்கிட முடியாத பாரம்பரியம் உடையது.

தொன்மை மிக்கதாகிய சைவசமயத்தை மன்னர்களும், நாயன்மார்களும் தமது உயிரினும் மேலாகக் கருதி வளர்த்து வந்துள்ளனர். காலத்துக்குக் காலம் தோன்றிய மகான்களும், சித்த புருஷர்களும் சமயத்தைப் பாதுகாத்து வந்துள்ளனர். யாழ்ப்பாணத்திலும் வரலாறு தொடங்கிய காலம் தொட்டு நிலவிவந்த சமயம் சைவசமயமாகும். தென்னிந்திய கலாசாரப் பண் பாட்டு நிலைகளைச் சார்ந்ததாகவே யாழ்ப்பாணத்தின் பண்பாட்டு நிலைகள் அமைந்திருந்தது. அதற்கமைவான சமயக் கொள்கைகளே இங்கு வழக்கத்தில் இருந்து வந்தது.

சமயவாழ்வே வாழ்வாக அமைந்திருந்தது. அன்று சமயவாழ்வு என்பது ஆசாரம், ஒழுக்கம், அன்புடமை, உண்மை, நேர்மை எனும் பண்புகளைக் கொண்டதாக அமைந்திருந்தது. சமயவாழ்வு வாழ்பவர்கள் உயர் பண்புடையவர்களாக விளங்கியமை எல்லோரும் அறிந்ததே. **"கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்", "நீறியில்லா நெற்றி பாழ்", "ஆலயம் தொழுவது சாலவும் நன்று"** என்பன போன்ற வழக்குகள் எல்லாம் சாதாரணமாக மக்களிடையே பேசப்பட்டு வந்த கருத்துக்களாகும். அதற்கமையவே ஆலயம் ஒன்றை மையமாக வைத்தே ஊர்கள் நிர்மானிக்கப்பட்டன. ஆலயங்கள் மக்களின் இருதயபீடமாக அமைந்திருந்தன. தெய்வ நம்பிக்கையும் ஆலய வழிபாடும் மக்களின் உணர்வுகளுடன் ஒன்றிக் கலந்திருந்தன. பண்டைய நாட்களில் தெய்வநம்பிக்கையின் உச்சநிலையில் மக்கள் வாழ்ந்து வந்தனர். ஊரின் மத்தியில் அமைந்திருந்த ஆலயங்கள் பக்தியை வளர்த்ததுடன் மட்டுமல்லாது கலைகளை வளர்த்தன. பண்பாட்டை வளர்த்தது. அது மட்டுமின்றி ஆலயங்கள் தான் மக்கள் கூடும் பொது இடமாக இருந்து சகல காரியங்களையும் நிறைவேற்றின. தெய்வநம்பிக்கை மிகுந்தவர்களாக மக்கள் பயபக்தியுடன் வாழ்ந்து வந்தனர். மக்களின் பக்தியை புராணபடனங்களும் சொற்பொழிவுகளும் வளர்த்துவந்தன.

மக்களும் பக்தியுடன் பெரியோர்கள், சான்றோர்களைப் போற்றி அவர்கள் வழிகாட்டலை ஏற்று அதன் வண்ணம் ஒழுகி வந்தனர். இவற்றின் பயனாய் மக்களிடையே அமைதியும், ஒற்றுமையும், பண்பும் நிலவி வந்தது. மக்கள் கூட்டுறவாய் அமைதியாக வாழ்ந்தனர். சமயம் காட்டிய விழுமியப் பண்புகளை ஏற்றுக்கொண்டவர்களாய் உத்தமராய் வாழ்ந்தனர்.

யாழ்ப்பாணத்தில் அந்நியர் வருகையினால் போர்த்துக்கீச, ஒல்லாந்த, ஆங்கில

படையெடுப்புகளினால் சைவசமயத்தில் சற்றுப் பின்னடைவு ஏற்பட்டது. மக்கள் சமய கலாசாரங்களைக் கைக்கொண்டு ஒழுக முடியாத ஒருநிலையில் ஆறுமுகநாவலர் தோன்றினார். மீண்டும் சைவப்பண்பாட்டுப் பாரம் பரியத்தை யாழ்ப்பாணத்தில் தோற்றுவித்தார். ஆங்கிலேயே அரசாட்சியினருடன் வாதிட்டு போராடி தனது விடாமுயற்சியினால் சைவப் பாடசாலைகளை ஸ்தாபித்தும், ஆலயங்களைச் சீர்படுத்தியும் சைவத்துக்குப் புத்துயிர் ஊட்டினார். தமது அரிய சொற்பொழிவுகளாலும், புராண படனங்களை நிகழ்த்தியமையாலும் மக்களை புத்துயிர் ஊட்டி சமய வாழ்வின் நிலை நிற்கச்செய்தார். நாவலர்பெருமான் மக்களின் சமய வாழ்வைச் சீர்செய்து யாழ்ப்பாணத்தில் கந்தபுராண கலாசாரத்தை நிலை நாட்டினார். இவ்வாறு யாழ்ப்பாணம் சமய கலாசாரத்தின் முன்னோடியாக விளங்கிவந்தது.

இதன் பின்னர் தோன்றிய இன்றைய காலகட்டத்தில் சமயவாழ்வு என்பது கேள்விக்குறியாக உள்ளது. உண்மையான பக்தி என்பது கேள்விக்குரியதாகவே உள்ளது. உண்மைப் பக்தி அருகிவருகின்றது. கால சூழ்நிலைக்கு ஏற்ப ஆலயங்களிலும் அவசர அவசரமான விழாக்கள் நடைபெறுகிறது. மக்களும் பல்வேறு வகையான பிரச்சினைகளுக்கு மத்தியில் வழிபாடு செய்வதை புறந் தள்ளி வருகின்றனர். பொழுதுபோக்கு சாதனங்கள் தொலைக்காட்சி போன்றவை மக்களைத் திசைதிருப்பி விடுகின்றன.

நாம் பிறந்ததன் நோக்கம் மறக்கப் பட்டுவிட்டது. எமது வாழ்வு எதற்காக என்ற யதார்த்தநிலை உணரப்படுவதில்லை. எமது வாழ்வின் நோக்கம் என்ன என்பது தெளிவாக எமக்குத் தெரியவில்லை. எடுத்துக் கூறுவதற்குரிய வழிமுறைகளும் இன்று அருகி வருகிறது. ஆலயங்களில் நடைபெறும் சொற்பொழிவுகள், சத்சங்கள் என்பன இப்பொழுது இக்காலகட்டத்தில் நடைபெறுவதில்லை. புராணபடனம் அருகி வந்துள்ளது. இதனால் மக்கள் எல்லோரும் திசை மாறிச் செல்கின்றனர்.

பொழுதுபோக்குச் சாதனங்கள் வெறும் கற்பனை நிலையை இளம் சமூகத்தினரிடம் ஏற்படுத்தி அவற்றால் நிலைமாறிப் போய் விடும் சந்தர்ப்பங்கள் நிறைய ஏற்படுகின்றது. மற்றும் வெளிநாட்டு மோகமும் வெளிநாடுகளின் மாய வாழ்வின் பகட்டும் மக்களை பெரிதும் கவர்ந்து யதார்த்தத்திலிருந்து விலகிச்செல்ல வைக்கிறது. இன்றைய யாழ்ப்பாணத்தின் நிலையில் விரக்தியும் கவலையும் தோன்றிய சமூகத்தினர் மாயையில் சிக்குண்டு தமது வாழ்வின் நோக்கையே மறந்துள்ளனர்.

பண்டைய எமது மூதாதையரின் சமய வாழ்வு இன்று எம்மிடையே அருகி வருவது பெரும் வேதனையைத் தருகிறது. பழக்க வழக்கங்களையே மாற்றி எமது சமயவாழ்வைப் புறந்தள்ளி வைத்து இன்று வாழ்கின்றோம். ஆலய வழிபாடுகள் நேர்த்திக்காகவும், எமது தேவைகளுக்காகவும் தான் நடைபெறுகின்றது. உண்மையான பக்தி நிலை எமது ஆன்ம லாபத்தை தேடும் பக்தி என்ற நிலை அருகிவருகின்றது. இதனால் ஆலயவழிபாடு நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் உண்மையான பயனை நாம் அடைகிறோமா? என்பது கேள்விக்குறியாக உள்ளது. இந்நிலை தொடர்ந்து வழிபாட்டின் நோக்கம் திசை திருப்பப்பட்டு தொடர்ந்து செல்லுமானால் வருங்காலத்தில் எமது சமய கலாசாரம் எவ்வாறு பாதுகாக்கப்படும் என்பது சிந்திக்க வேண்டி உள்ளது.

சமய வாழ்வு ஒன்றே எமது குறிக்கோளாக இருக்கவேண்டும். சமயவாழ்வின் உயர் இலட்சியங்களை எமது வாழ்வில் கைக்கொள்ள வேண்டும். வாழ்வின் யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு சமயவாழ்வை நாம் முழுமையாகக் கைக்கொள்ளவேண்டும்.

இவற்றை நாம் கடைப்பிடிக்காது விடும்பொழுது வருங்காலச் சந்ததியினர்

இவற்றைக் கைக்கொள்வது கடினமாகி அருகிவிடும். சமயபண்பாடு, ஒழுக்கங்களை நாம் கூடிய வகையில் கைக்கொண்டு ஒழுகி வருதலே நாம் எமது சந்ததியினருக்கு வழங்கும் பெரும் கொடையாகும்.

இன்று நாம் நடந்துகொள்ளும் வகையில்தான் நாளை சமயகலாசாரங்கள் பேணப்பட்டுத் தலைமுறை தலைமுறையாகத் தொடர வழி செய்யப்படும். இல்லையெனில் எமது அநாதி சமயமான சைவசமயத்தின் பாரம்பரிய நிலைகளை நாம் இழந்து விடுவோம். எனவே இன்று எமது பணியை நாம் திடமாக செயல்படுத்த முயன்று சைவ கலாசாரத்தை பாதுகாக்க முயல்வோம்.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்."**

## இறையும் இசையும்

இ. ஜயகிருஷ்ணன்
2008

பிரம்மாண்டங்கள் அனைத்தையும் ஆக்கியும், காத்தும், ஒடுக்கியும் வழிநடாத்திக் கொண்டிருக்கும் இறைவனிற்கும் - கீதம், வாத்தியம், நிருத்யம் என்பவற்றால் கேட்போர் மனதைக் குளிரவைக்கும் இசைக்கும் இடையில் தொடர்புள்ளதா என நோக்கின், **"ஆரியந் தமிழோடிசையானவன்"**, **"ஓசை ஒளியெலாம் ஆனாய் நீயே"**, **"யாழின் பாட்டை உகந்த அடிகள்"** **"பாடல் வண்டிமை கேட்கும் பைஞ்சீலியர்"** போன்ற அடிகள் ஏழிசையாய் இசைப்பயனாய் இருக்கும் இசைப்பிரியன் அந்த இறைவன் என்பதை விளக்கும். இவ்வாறு நாதரூபனாக, நாதசரீரனாக இருக்கும் இறைவனை மகிழ்விக்க; அடைய சிறந்த வழி இசையே. அதனாலன்றோ, **"ஆடிப்பாடி அண்ணாமலை கைதொழ ஓடிப்போகும் நம் மேலை வினைகளே** என்கிறது அப்பர் தேவாரம்

**"துத்தம் கைக்கிளை, விளரி, தாரம்,**
**உழை இளி ஓசைபண்கெழுமப் பாடிச்**
**சச்சரி கொக்கரை தக்கையோடு தகுணிச்சம்**
**துந்துபி தாளம் வீணை**
**மத்தளம் கரடிகை வன்கை மென் தோல்**
**தமருகம் குடமுழா மொந்தை**
**வாசித்து அத்தரை விரவினோடு ஆடும் எங்கள்**
**அப்பன்"**

என கீதம், வாத்தியம், நிருத்யம் எனும் மூன்றையும் இறைவனோடு இணைத்து அழகாக சித்தரித்திருக்கிறார் காரைக்கால் அம்மையார். இனி இவை இறைவனோடு இசையும் தன்மைபற்றி விரிவாக ஆராய்வோம்.

### கீதம்:

கீதம் என்னும் சொல் பொதுவாக இசைப்பாடல்களை குறித்து நிற்கும். இவ்விசைப் பாக்களோடு இறைவனை இணைக்கும் இனிய பாடல்களில் 7 ஆம், 8 ஆம் நூற்றாண்டில் எழுந்த தமிழ்மறை எனப் போற்றப்படும் திருமுறைகள் மிக முக்கியம் வாய்ந்தவை. மேலும் ஓர்நாடக சங்கீத உருப்படிகளான கீதம், கிருதி, கீர்த்தனை, பதம், வர்ணம் போன்றவற்றில் பெரும்பாலான பாடல்கள் சிவபெருமான் மீதும், ஸ்ரீராமபிரான் மீதும் பாடப்பட்டுள்ளன. மேலும் ஆசிரியர்களின் வேத வழிபாட்டிலும் இசைக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### திருமுறைகளும் இசையும்:

மறையிலங்கு தமிழ்வேதக் கருத்துக்கள் விளங்கும் பாடல்கள் எனப் போற்றப்படும் திருமுறைகளில் தேவாரமுதலிகள் மூவரும் பாடிய பாடல்கள் பண்ணோடும், தாளத்தோடும் அமைந்தவை. இத்தேவாரங்கள் மூலம் பல அற்புதங்களை நிகழ்த்தி அழிந்து

கொண்டிருந்த சமயத்தை உயிர்ப்பித்தனர். இது இறைவனை இசையால் இசைய வைக்கலாம் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு. **"பண்ணாற் பாடுவார்க்கு இல்லையாம் பாவமே"**, என்றும், **"இன்னிசையால் பாடவல்லார் ஒரு நிலத்தில் ஈசன் எனும் இயல்பினாரே"** என்றும் தேவாரம் கூறுகின்றது. திருக்கோலக்காவில் **"மடையில்வாளை..."** என்ற பதிகம் பாடிய போது ஞானசம்பந்தக் குழந்தைக்கு ஈசன் பொற்றாளம் கொடுத்தமையும், **"மாதர் மடப் பிடியும் மடவன்னமும்..."** என்னும் திருப்பதிகம் பாடியபோது அதை யாழில் மீட்ட முடியாது திருநீலகண்டப் பெரும்பாணர் தம் யாழை உடைக்க முற்பட்டமையும் தேவாரப்பதிகங்கள் பண்ணோடும் தாளத் தோடுமே திருவாய் மலர்ந்தருளப்பட்டது என்பதை தெளிவாக்கும் சம்பவங்களாகும்.

பழத்தினிற் சுவைபோல கண்ணிடை மணிபோல இசை வளர்ச்சிக்கு இன்றியமையாதது பண். இராகங்களின் வளர்ச்சிக்கும் பண்களே ஆதிலட்சியங்களாகும். இப்பண்களின் வளர்ச்சிக்கும் அவை அழிந்து போகாமல் பாதுகாக்கப்படவும் பெரிதும் துணை நின்றவை தேவாரங்களே ஆகும்.

இதனடிப் படையில் நட்டபாடை, தக்க ராகம், பழந்தக்கராகம், தக்கேசி, குறிஞ்சி, வியாழக்குறிஞ்சி, மேகராகக்குறிஞ்சி எனும் ஏழு பண்களுக்குரிய நூற்று முப்பத்தைந்து திருப்பதிகங்களும் பண்ணில் அடங்காத **"யாழ்முறிப் பதிகம்"** ஒன்றும் ஆக நூற்று முப்பத்தாறு திருப்பதிகங்கள் முதலாம் திருமுறை ஆகவும், இந்தளம், சீகாமரம், காந்தாரம், பியந்தைக் காந்தாரம், நட்டராகம், செவ்வழி எனும் ஆறு பண்களுக்குரிய நூற்று இருபத்திரண்டு திருப்பதிகங்கள் இரண்டாம் திருமுறையாகவும், காந்தார பஞ்சமம், கொல்லி, கொல்லிக்கௌ வாணம், கௌசிகம், பஞ்சமம், சாதாரி, பழம்பஞ்சுரம், புறநீர்மை, அந்தாளிக்குறிஞ்சி ஆகிய ஒன்பது பண்களுக்குரிய நூற்று இருபத்தைந்து திருப்பதிகங்கள் மூன்றாம் திருமுறையாகவும் உள்ளது.

மேலும் அருணகிரிநாதர் முருகன் மீது பாடிய திருப்புகழ் சந்தக்கனிவும், ஓசை நயமும் மிக்கவை. ஒவ்வொரு பாடலிற்கு முன்னும் அப்பாடலிற்கு உரிய நடையும் தாள அமைப்பும் குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணலாம். மேலும் 35 தாளம், 175 தாளம், 108 தாளம் ஆகிய தாளங்களின் அமைப்புக்கள் எல்லாவற்றையும் இத்திருப்புகழிலே காணலாம். சங்கீதத்திலுள்ள பலதாளங்கள் அழிந்து போகாமல் பாதுகாத்த பெருமை திருப்புகழையே சாரும்.

## கர்நாடக சங்கீத உருப்படிகள்:

கர்நாடக சங்கீத உருப்படிகள் பல இறைவனையே நாயகனாகக் கொண்டு எழுதப்பட்டன. இவை சங்கீதத்திற்கும் இறைவனிற்கும் இடையே நெருங்கிய தொடர்பு உள்ளதென்பதைக் குறிக்க சிறந்த ஆதாரமாகும். முத்துத்தாண்டவரின், **"பூலோக கைலாசகிரி சிதம்பரம் பவப்பிரியா, சேவிக்க வேண்டும் ஐயா"** (ஆபோகி), **"அருமருந்தொரு தனிமருந்து அம்பலத்தே கண்டேன்"** (மோகனம்), **தெருவில்வாரோனோ (கமாஸ்) என்றபதம்,** பாபநாசம்சிவனின், **"உன்னைத் துதிக்க அருள்தா"** (ருந்தலவராளி) என்ற பாடல் கோபாலகிருஷ்ண பாரதியின் **"நலுங்கிடவாரும் நீர் நடராஜமூர்த்தி "** (மத்தியமாவதி), **"சபாபதிக்குவேறு தெய்வம்"** (ஆபோகி), தியாகராஜரின் **"சம்போ மஹாதேவ"** (பந்துவராளி) என்ற கிருதி, **"ஏலநீதயராது"** (அடானா) **"கனுகொண்டினி"** (பிலஹரி) போன்ற பல பாடல்கள் இறைவன் மீதே பாடப்பட்டன.

## வேதம்:

வேதங்களில் பொதுவாக இருக்கு வேதமும், சாமவேதமும் செய்யுள்நடையில் அமைந்தது. இதில் சாமவேதம் இசைவடிவானது. சாமவேதத்தில் வரும் இனிய ஸ்வரங்களை உடைய பாடல்களுக்கு ஸாம கீதம்/ஸாமகானம் என்று பெயர். இலங்கை அரசன் இராவணன் கயிலை மலையை பெயர்க்க முற்பட்டபோது சிவனின் தண்ட

னைக்கு ஆளான சமயம் காம்போதி ராகத்தில் சாமகானம் பாடினான். இதனால் மனம் குளிர்ந்த இறைவன் அவனை விடுவித்து அருள் செய்தார் என்பது புராணக்கதை. இது இசையால் இறைவனை இளகவைக்கலாம் என்பதை உணர்த்தும். மேலும் இருக்கு வேதச் செய்யுள்களில் உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம், தீர்கஸ்வரிதம் எனும் நான்கு ஸ்வரங்கள் பாடலிற்கு இசையமைப்பை வழங்கின என்பது குறிப்பிடத் தக்கது.

## வாத்தியம், நிருத்யம்:

சிவன்கையில் உடுக்கும், ருத்ரவீணையும்; சரஸ்வதி கையில் வீணையும்; கண்ணனின் புல்லாங்குழலும்; தும்புரு, நாரதரின் தம்புராவும்; நந்தியின் மத்தளமும் என்று ஒவ்வோர் இறைவனும் வாத்தியங்களை கையிலேந்திக் காட்சி தருவதிலிருந்து இறைவனுக்கும் வாத்தியங்களுக்கும் இடையே ஒரு தொடர்பு உள்ளதை ஊகிக்கக் கூடியதாய் உள்ளது. மேலும் சிவன் பிரதோஷ வேளையிலே சத்நியா தாண்டவம் ஆடும்போது பிரம்மன் தாளம் போடுகின்றார், அம்பிகை பாட, சரஸ்வதி வீணைமீட்ட, நாராயணர்கள் மத்தளம் கொட்ட, இந்திரன் புல்லாங்குழல் வாசிக்க, லஷ்மி கஞ்சிராதட்ட கந்தர்வர்கள் ஏழுகோடி இசைக்கருவிகளை முழங்குகின்றார்கள். இதனை சித்தரிக்கும் வகையிலான ஓவியங்களை வடபாரதக் கோவில்களில் காணலாம்.

இதைவிட இறைவன் உறையும் இடமான கோவிலில் பயன்படுத்தப்படும் பல்வேறு வாத்தியங்கள் இறைவனுக்கும் வாத்தியங்களுக்கும் இடையிலுள்ள தொடர்பை நன்கு விளக்கும். முக்கியமாக கர்நாடக சங்கீதத்தின் இராஜ வாத்தியம் எனப்படும் நாதஸ்வரமும் அதற்கு தாளவாத்தியமான தவிலும் ஆலயத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இசைநலிவுற்ற காலங்களில் அதை அழியாது பாதுகாத்த பெருமை ஆலயத்தின் மங்கல வாத்தியமாக விளங்கும் இவற்றையே சாரும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் சிவபெருமான் தட்சணாமூர்த்தியாகவும், கங்காளமூர்த்தியாகவும், பிக்ஷாடனமூர்த்தியாகவும் எழுந்தருளும் போது சில சமயங்களில் ருத்ரவீணை வாசித்து மகிழ்வதாக குறிப்பிடப்படுகிறது. இதுபற்றி **"சிவ ரகஸ்யம்"** எனும் நூலில், கந்தர்வ அரசர்களின் வழிபாட்டில் மகிழ்ந்த சிவபெருமான் உங்களிற்கு என்ன வரம் வேண்டுமென்று கேட்க, அவர்கள் தாங்கள் ஓர் வீணையாகி உங்கள் கரத்தில் திகழ வேண்டும் என்று கேட்டனர். அதன்படி சிவபெருமான் ஆக்கிய வீணையே இந்த ருத்ரவீணை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இறைவனிற்கு பஞ்சவாத்தியங்களான தோற்கருவிகள் (டமருகம், மேளம், உடுக்கு, டமாரம், நகார், சுத்தமத்தளம்) துளைக்கருவிகள் (நாதஸ்வரம், முகவீணை, எக்காளம், திருச்சின்னம்), நரம்புக்கருவிகள் (யாழ், வீணை, துந்தணா) உலோகக் கருவிகள் (மணி, பிரம்மதாளம், சேகண்டி) இயற்கைக்கருவிகள் (சங்கு) போன்றவற்றில் அதிக பிரியமிருப்பதால் இவ் வாத்தியங்கள் ஆலயங்களில் பொதுவாக இசைக்கப்படுகின்றன.

இவ்வாறு இசையின் ஒவ்வோர் அங்கத்திலும் இறைவனிற்கு அளிக்கப்படும் முக்கியத்துவமும், இறைவன் இசையால் வசப்பட்ட சம்பவங்களும், இறைவன் தானும் இசையை இசைப்பதிலிருந்து இறைவனிற்கும் இசைக்கும் உள்ள ஒப்பற்ற தொடர்பு வெளிப்படுகின்றது. இறைவழிபாடு குறைந்து சென்ற காலத்தில் இசையால் இறைவனும், இசைப்பயன்பாடு குறைந்து சென்ற காலத்தில் இறைவனால் இசையும் மக்கள் மனத்திலிருந்து நீங்காமல் பாதுகாக்கப்பட்ட வரலாறுகளும் இதனை உணர்த்தி நிற்கின்றன. இறைவனை அடைய எளிமையான, யாரும் பின்பற்றக்கூடிய ஒரேவழி இசை என்பதில் ஐயமில்லை. இசையும், அதன் பயனும் இறைவனே ஆக இறைவனும் இசையும் அன்றிலிருந்து இன்றுவரை இணைபிரியாத ஒன்று என்பதில் இருவேறு கருத்தில்லை.

☆☆☆

# Club of Photography - 2008



*Sitting (L-R) :* *Mr. P. Srigantharajah (Vice-Principal), Mast. S. Kajarathan (Secretary), Mr. P. Maheswaran (Deputy Principal), Mast. Selvanigethan (President), Mr. V. Ganesarajah (Principal), Mast. K. Harsan (Treasurer), Mr. P. Gnanathesigan (Teacher - in - Charge),*

*Standing (L - R) :* *Mast. T. Sivamynthan, Mast. S. Kubilan ( Editor) Mast. T. Sanchayan (Vice-Secretary), Mast. S. Sivarangan, Mast. G. Thasahan, Mast. K. Kugapiriyan, Mast. T. Nirushan (Vice President),*

# G. C. E (A/L) Student's Union - 2007/2008



*Seated (L-R) :* *Mr. K. Shanmugarajah (Staff advisor), Mas. R. Senthuran (Secretary), Mr. T. Balachandran (Staff advisor), Mr. V. Ganesarajah ( Principal), Mas. T. Ajeepan (President), Mr. P. Maheswaran (Deputy Principal), Mas. K. Krishnathasan (Treasurer), Mr. R. Raveendranathan (Staff advisor), Mr. P. Sriskantharajah (Vice-Principal)*

*Standing (L-R) :* *Mas. H. Sanseevan (Comm. member), Mas. Y. Nijenthira (Asst. Secretary), Mas. E. Raguraj (Com. member), Mas. Y. Thusinthan (Com. member)*

*Absentees :* *Mas. U. Thamonuthan (Vice president), Mas. Keerthanan (Com. member), Mas. A. Siththarthan (Com. member), Mas. Rajkumar (Com. member)*

## சிறுவர் செயற்பாட்டுக் கழகம் (Children's Action Club)



***Sitting ( L- R) :*** *Mr. P. Srikantharajah (Vice - principal), Master T. Harikaran (Treasurer), Mrs. S. Arunthavapalan (Teacher in charge), Master. S. Seran (President), Mr. V. Ganesarajah (Principal), Mr. P. Maheswaran (Deputy Principal), Master Selvanikethan (Editor)*

***Standing (L - R) :*** *V. Thanujan, T. Achuthan, K. Mayuram, S. Sivamynthan, S. Sasintheran, E. Thusanth, B. Kirusaje, T. Vaikunthan, M. Ramji (Vice President), K. Usanthan, S. Sarankan*

## விஞ்ஞான மன்றம்



இருப்பவர்கள் (இடமிருந்து வலம்): செல்வன் சி. ரகுராஜ் (செயலாளர்), திரு. பொ. மகேஸ்வரன் (பிரதி அதிபர்), திரு. S. சோதிலிங்கம் (பொறுப்பாசிரியர்), திரு. வீ. கணேசராஜா (அதிபர்), செல்வன் ச. செந்தில்குமரன் (தலைவர்), திரு. பொ. சிறிஸ்கந்தராஜா (உபஅதிபர்), திரு. ப. மகேஸ்வரன் (பொறுப்பாசிரியர்), செல்வன் ஞா. யதுர்சன் (பொருளாளர்)

நிற்பவர்கள் : செல்வன் பே. சுபாகர், செல்வன் ச. சுஜன், செல்வன் Y. துஷிந்தன், செல்வன் ப. நிரோசன், செல்வன் க. விக்னன், செல்வன் சி. நிரஞ்சனன், செல்வன் A. அல்பேட் நிமலன், செல்வன் ம. ஜெயப்பிரதீப், செல்வன் தி. கோசிகன், செல்வன் க. கமலபாலன், செல்வன் கு. டிலீப் அமுதன்

## நட்பின் வருகைக்காய்...

✍ த. அஜீபன்
தரம் - 13A
கணிதப்பிரிவு - 2008

"அமைதியான இரவு, உறங்கிய உலகம்
தெளிவான ஆகாயம், அழகான முழு நிலவு
செறிந்த விண்மீன்கள், தண்மையான வெளிச்சம்
சற்றே ஆரவாரிக்கும் கடற்கரையோரம்...!"

'அலை மீது விழி வைத்தே காத்திருக்கின்றேன்;
நண்பா உனக்காக......!
உன் நினைவுகள் கண்ணீராய்க் கசிந்து
அலையாகப் பெருக்கின்றன!!'

"கள்ளங்கபடமற்ற, வெள்ளை மனம் கொண்ட
பச்சிளங் குழந்தை வயதினிலே;
ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள் போல
ஒன்றித்தது எம் இனிய நட்புறவு!"

"குற்றமில்லாத குற்றங்களைச் செய்யத்துடித்த
சிறுவயதினிலே, சற்றேனும் அஞ்சாமல்
சட்டென்று துணிந்திடுவோம், நொடியதனில் முடித்திடுவோம்!
தடியடியும் வாங்கிடுவோம் சேர்ந்தே!!"

"பக்குவமான பதின்மூன்று வருடப் பள்ளி வாழ்க்கையினிலே
பல பள்ளிச் செயல்களில் சேர்ந்தே கலக்கிடுவோம், ஜெயித்திடுவோம்
இனிமேலும் இனிக்காது இவ்வாறான தொரு பள்ளித் தருணம்;
சேர்ந்தே எண்ணினோம் - கலங்கினோம் - அழுதோம்!"

'கட்டுக் கடங்காத கட்டிளமைப் பருவத்தில்
குற்றம் நிறைந்த குறும்புகளை அறிந்தே அரங்கேற்றிடுவோம்!
பல வம்புகளில் சேர்ந்தே மாட்டிக் கொண்டோம்,
வாழ்க்கை அனுபவங்களை நிறைவாகவே பெற்றும் கொண்டோம்!!"

"சுற்றம் போற்றும் நல் இராமர், இலட்சுமணராக – தினம்
பற்றும் பரிவுடனும் பிரிவின்றியே மகிழ்ந்திருந்தோம்
சற்றும் பிரிவின்றிய விதியதன் சதியினால் – புது
தோற்றம் புகுந்தது பிரிவென்னும் பெருமுள்ளாக!"

"நாட்டு நாடக அரசியலின் பாதக விளைவு;
ஏடும் கையுடனும் கல்வி வானில் சிறகடித்த உன்னை
என் உயிரைப் பறிப்பது போல் பிரித்து,
எவ்விடம் – எங்ஙனம் மறைத்ததுவோ...! ?"

"வானுயர்ந்த சோலையிலே நீ நடந்த பாதைகள்
வெறிச்சோடிக் கிடக்கின்றது எனக்கு இன்று!
இதழ் சிந்தும் உன் புன் முறுவல், சிறு குறும்புகள் – எனக்குள்
இன்றும் வெளிச்சமாய்க் குற்றுகின்றது!!"

"நம் எண்ணத்தில் வந்த பல வண்ணங்கள் – நீ
இல்லாமல் தினம் கண்ணீர் சிந்துகின்றன தோழா!
காத்திருந்து காத்திருந்து காலங்கள் போகின்றன – உன்
மாயைகளோடு என் வாழ்வு தினம் பயணிக்கின்றது!! "

"ஆருயிர் நண்பனே...! கேட்கின்றனவா உனக்கு
என் ஏக்கத் துடிப்புக்கள், காற்றின் துணையாக!
வந்துவிடு நண்பா... மீண்டும் தந்துவிடு என் உயிரை...!
ஊருறங்க, உலகுறங்க, உறங்காமல் நான்
உன் வருகைக்காய் தினம் தவித்துக் காத்திருக்கின்றேன்..!!? "

## "விதைப்பு"

இ. லவன்
தரம் – 13B

பரந்து விரிந்த அண்டவெளியில் ஓர் ஒதுக்குப்புறமாய் பால்வீதிக்குள் பவனி வந்து கொண்டிருக்கிறது ஓர் நீலக்கோளம். அந்த பூமிக்கோளத்தில் தரையைத் தொட்டு விண்ணை முட்டி ஆயிரமாயிரம் கட்டடங்கள். அதில் பார்க்குமிடமெல்லாம் இரும்பால் வடித்த மனிதர்கள் உலாவியபடி, நிஜ மனிதர்கள் ஆங்காங்கே அதிலும் மனிதம் மரணித்து விடாத ஒரு சிலர் அபூர்வமாய்.

இந்த உலகத்தை ஓர் காலத்தில் மதங்கள், சமய நம்பிக்கைகள் ஆண்டன. பின் வணிகம் ஆட்சி செயதது. இன்று இந்த 21 ஆம் நூற்றாண்டில் தொழில்நுட்பம் உலகை ஆழ்கிறது.

அணு உலைகளும், சூரிய சக்தியை நேரடியாக இரசாயன சக்தியாய் பதிக்கும் இரசாயன உணவாக்கிகளும், தாவரங்களை அகழ்வாராய்ச்சிப் பொருளாக்க புது யுகத்தின் பரிணாமத்தில் பழையன பல சுவடுகளாய் பூமி ஓர் புதிய பரிணாமத்தில்.

இந்த பூமியில் வேர்பதித்த ஓர் கட்டடத்தின் ஆயிரத்து ஐந்நூறாவது மாடியில் ஓர் சிறுமி வண்ணத்துப்பூச்சியென வட்டமிட்டுக் கொண்டு பறந்து கொண்டிருந்தாள். ஆனால் அங்கு சிறகடித்தவை அவளது சிறகுகளல்ல. அவள் பறந்து கொண்டிருந்த விமானத்தின் சிறகுகள். அந்தப் பட்டாம்பூச்சி சிறுமி விளையாட்டில் சலித்தவளாய் தரையிறங்கினாள். உடனே ஒரு றோபோ அவளின் அருகில் வந்தது.

"Can I help you?" இரும்பு மனிதனின் இதமான வினா அது.
"I wont to meet Mr. Aaria"

மறுகணம் அவளுடன் அதிவேக உயரத்தில் சென்றது. ஒரு சில வினாடியில் அவர்கள் பூமிக்கு கீழே உள்ள 186 ஆவது மாடியினை அடைந்தனர். அங்கு பல்லாயிரக்கணக்கான கணனித்திரைகள் முன் கண்ணை மூடியபடி அமர்ந்திருந்தார் ஆரியா. .

மெலிந்த உடல் ; நெற்றியில் சுருக்கம் ; கத்தி முனையை விடக்கூர்மையான கண்கள் அவரது நூற்றெண்பத்தேழாவது வயதை மறைக்கும் நிமிர்ந்த தோற்றம். அறிவியலின் வளர்ச்சிப் பாதையின் பல மைற்கற்களை, மனித இனத்தை தாண்டவைத்த ஒரு ஜீனியஸ். அவரைக்கண்டதும் அச் சிறுமி தாத்தா என்றபடி அவரிடம் ஓடிச் சென்றாள்.

அவரும் வாடா கவுதம் என்று அச் சிறுமியை தூக்கி மடியில் வைத்துக்கொண்டார். (அவளது பெயர் அனேகமாக கௌதமியாக இருக்கவேண்டும்.)

**"என்னடா கவுதம் தாத்தாவை தேடி வந்திருக்கிறாய்?"**

விளையாட்டு எல்லாம் போரடிக்குது தாத்தா" அப்பாவும் நிறைய நாளா இங்க இல்ல. அதுதான் உங்ககிட்ட வந்தனான். அது சரி தாத்தா சுத்திவர இத்தன கொம்பியூட்டருக்குநடுவில் இருக்கிறீங்க உங்களுக்கு போரடிக்கவில்லையா?

எனக்கா இல்லையம்மா. இது என் கடமை. என்னைப் பொறுத்தவரை உன்னை போல் வேலை செய்யாமல் ஜாலியாக இருக்கிறதுதான் சொர்க்கம். அந்த நாளுக்காகத் தான் நான் காத்திட்டிருக்கிறேன்

நீங்க ஓய்வெடுத்தா உங்க வேலையை யார் பார்க்கிறது தாத்தா? அதுதான் இந்த புது சிஸ்டம். இந்த மிஸினறிஸ் என் கூடவே இருந்து எடுக்கும் முடிவுகள், சிந்தனைப் போக்கு எல்லாவற்றையும் பதிவுசெய்யும். இதை Expert System என்று சொல்லலாம். காலப்போக்கில் இது நான் இல்லாத போது கூட ஒரு பிரச்சனைக்கு எவ்வாறு தீர்வு கண்டிருப்பேனோ அந்த முடிவை தானே எடுக்கும். நான் ஆராய்ச்சியை பாதியில் விட்டேன் என்றால் அந்த முடிவை தானே எடுக்கும். நான் ஆராய்ச்சியை பாதியில் விட்டேன் என்றால் என்னைப் போலவே கட்டளைகளைப் பிறப்பித்து இன்னொருவரை வழிநடத்தும். அது இருக்கட்டும், போரடிச்சா ஏதாவது படிக்கலாமே.

எனக்கு படிக்கிறதுக்கு கதை மாதிரி சுவாரசியமா ஏதாவது வேணும்.

Then you are lucky. ஏனென்றால் 1000 வருடங்களுக்கு முன் பூமியில் வாழ்ந்த மனிதர்கள் தங்களுடைய வாழ்க்கை முறை, கலாசாரம், தொழில்நுட்பம் இவற்றையெல்லாம் புள்ளி விபரங்களையும், படங்களையும் ஒரு சிப்பில் பதிவு பண்ணி விண்வெளி ஓடமொன்றில் அனுப்பியிருக்கிறார்கள். அது இப்பூமிக்கு வந்திட்டிருக்கு. அது கிடைச்சதும் பூமியின் வரலாற்றையே நீ கதை மாதிரிப் படிக்கலாம்.

சில நாட்களுக்கு பிறகு கவுதமியின் கணனித்திரையில் பூமியின் பழைய வரலாறு அரங்கேறியது. பச்சை நிறத்தில் ஏதோ அழகான பொருட்கள். கட்டடங்கள் மிகவும் சிறியதாய் ஆனால் மனிதர்களோ ஏராளம். இந்த இயந்திர மனிதர்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் கண்ணைக் கவரும்

கிறிஸ்மஸ் கேளிக்கைகள், உலக அதிச யங்கள் எல்லாவற்றையும் விட அவளை கவர்ந்தது அவள் வயதை ஒத்த சிறு பிள்ளைகள். அவள் வயதை ஒத்த இத்தனை பேரைக் கண்டதில்லை. நிறைய அச்சிறு பிள்ளைகள் ஒரேமாதிரி உடை அணிந்து விளையாடினார்கள். ஏதோ எழுதினார்கள். அவர்கள் வானில் பறக்கவில்லை. தரையில் ஓடி விளையாடினார்கள். ஆனால் அவர்கள் முகத்திலிருந்த மகிழ்ச்சி, கண்களின் பிரகாசம் அவள் அறியாத ஒன்று.

இவர்களெல்லாம் எங்கே? இப்போது ஏன் நிறைய மனிதர்கள் இல்லை? பச்சை யாய் இருந்த பொருட்களெல்லாம் ஏன் காணோம். கேள்விக்கணைகள் ஆரியாவை நாடிச்சென்றன. அவர் புது யுகம் படைத்த மனித வரலாற்றை கம்பீரமாகப் பெருமை யாகச் சொன்னார்.

பூமியின் புதிய போக்கின் ஆரம்பத் தில் இயற்கை சீறிப்பொங்க அதைத் தடுக்க முடியாதவர்கள் மடிய, தடுக்கவும் தப்பவும் திறன்கொண்டவர்கள் மட்டும் தப்பிப்பிழைக்க இயற்கைத் தேர்வில் செயற்கை வெற்றி பெற்ற புதிய உலகத்தின் விதைப்பில் பய னற்ற கலைகள் அழிந்த கதையைச் சொன் னார்.

ஆனா தாத்தா அப்பா ரொம்ப தூரத் தில் இருக்கும் கிரகத்துக்கு போயிருக்கிறார்.

நமக்கு அங்கிருந்து சமிக்ஞை கிடைச் சிருக்கு. அந்த ஏலியன்ஸ் மனிதர்களுடன் தொடர்புகொள்ள விரும்புகிறார்கள். அவர் களை பார்க்கத்தான் உங்கப்பா போயிருக் கிறார்.

அவர்கள் கிட்டத்தட்ட மனிதர்களைப் போலதான். நாம் அவர்களை நண்பர் களாக்கிக் கொள்ளலாம். அப்புறம் உனக்கு போரடிக்காது.

கிட்டத்தட்ட மனிதர்களைப் போல் இருக்கிற இந்த ஏலியன்ஸ்ஸை இவ்வளவு தூரம் தேடிப்போய் நட்பு வைச்சிக்கிறதை விட முழுக்கமுழுக்க இந்த ஆயிரமாயிரம் பேரை அழிக்காமல் இருந்திருந்தா இப்ப நமக்கு நண்பர்கள் நிறைய இருப்பாங்களே! பார்க்கிறதுக்கு இந்த உலகம் அழகாய் இருந்திருக்குமே.

அப்ப அவர்களிடம் இருந்த உண்மை யான சந்தோசம் இப்ப எங்களிடம் இல்லை தாத்தா. போகப்போக நாமும் இயந்திரமய மாய் மாறிக்கொண்டிருக்கிறோம். எவ்வளவு நல்லதை இழந்து சோம்பேறிகளாகிட்டோம். இது தானா? விஞ்ஞானம் நமக்குக் கொடுத்தது தாத்தா.

இந்தக் கேள்விக்கு அவர் கொடுத்த பதில் மௌனம். ஏனெனில் அறிவியலின் சாதனைகளைப் புரிந்துகொள்ளும் வய தில்லை அவளுக்கு. சிறுபிள்ளைத்தனமான ஏக்கங்கள் இன்றைய வாழ்வின் வசதியை, சுவாரசியங்களை அவளை மறக்கடிக்கச் செய்கின்றன.

தனது பாதையை தானே தீர்மானித்து வெகு வேகமாக நடந்து செல்லும் ஒரு வனுக்கு தனது பாதை சரிதானா? என்ன சந்தேகம் திடீரென வந்துவிட்டால் கால்கள் தன்னிச்சையால் வேகத்தைக் குறைக்கும். அப்படி ஓர் உணர்வு ஆரியாவை உள்ளூர நெருடியது.

பிணி, மூப்பு, மரணம் இம் மூன்று துன்பங்களைக் கண்டு கௌதமன் புத்த னாய் ஞானம் பெற்றான்.

இங்கும் மனிதன் மூப்படைந்துவிட சாதனை வெறி எனும் பிணிகொண்ட மனிதர் களாய் இயற்கையின் மரணம் கண்டு இந்த கௌதமி குழம்புகிறாள். இவள் ஞானம் பெற போதிமரமென்ன ஒரு சாதாரண மரம் கூட இங்கில்லை.!!

☆☆☆

# Interact Club



*Sitting (L - R) :* *Int. B. Sarangan (Vice - President), P. Maheswaran (Deputy Principal), V. Ganesarajah (Patron), Int. S. Cheran (President), T. Vijenthiran (Staff advisor), P. Sriskantharajah (Vice - principal), Int. T. Pirajapathy (Secretary)*

*Standing (L - R) (1st row) :* *Int. B. A runn (Editor), Int. N. Harilogenan (Community Service), Int. K. Thasakan (Club Service), Int. S. Sivarangan (Sargent at Arms), Int. M. Ragavan (Finance), Int. R. Dineshan, Int. A. Arunraj (Treasurer), Int. C. Piranavan (Asst. Secretary), Int. Y. Rajosan (Community Service), Int. S. Praganan (International understanding)*

*Standing (L - R) (2nd row) :* *Int. G. Vathsan (Culb service), Int. S. Selvanigethan (International understanding), Int. T. Kananeesan (Finance), Int. S. Senthuran, Int. S. Thusanthan (Editor), Int. T. Arudkumar (Vacational service)*



நூலக வாரத்தை முன்னிட்டு கல்லூரி மட்டத்தில் 2007 ஆம் ஆண்டு வகுப்புகளிடையே நடாத்தப்பட்ட நூல் சேகரித்தல், சிறந்த வாசக ஆக்கம் ஆகிய போட்டிகளில் முதலிடங்களைத் தமதாக்கிக் கொண்ட 7C வகுப்பு மாணவர்கள், வகுப்பாசிரியர், பகுதித்தலைவர், அதிபர் சகிதம் காணப்படுகிறார்கள்.

## பரியோவான் முதலுதவிப்படை



இருப்பவர்கள் (இடமிருந்து வலம்) : திரு. K. உமாகரன் (பொறுப்பாசிரியர்) , திரு. P. சிறீஸ்கந்தராசா (உதவி அதிபர்), திரு. V. கணேசராஜா (அதிபர்), செல்வன் N. சிவஜீவன் (பிரிவுத்தலைவர்), திரு. R. பாலச்சந்திரன் (பிரிவு அத்தியட்சகர்), திரு. P. மகேஸ்வரன் (உபஅதிபர்), செல்வன் S. செல்வநிகேதன்

நிற்பவர்கள் (நடுநிரை) : V. யதுசன், S. செந்தில்ராஜ், K. அனுசாந்த், R. வசீகரன், M. நந்தனன், K. கபிலேசன், B. சுமணன், A. தர்சாந்தன், K. குகரூபன், S. கிருஷிகன்

நிற்பவர்கள் (மேல்நிரை) : J. ஸஜீபன், S. சிவமனோகர், S. சேரன், A. ஜெனார்த்தீபன், V. அரவிந்தன், J. ஜனரூபன், T. சிவஜீவன்

## செஞ்சிலுவைச் சங்க இளைஞர் வட்டம்



இருப்பவர்கள் (இடமிருந்து வலம்) :செல்வன் இ. கபில்நிஷாந் (செயலாளர்), த. ஹரிஹரன் (பொருளர்), திரு. பொ. மகேஸ்வரன் (பிரதி அதிபர்) , திரு. ப. ரகுமார் (பொறுப்பாசிரியர்), ஜெ. வரலக்ஷன் (தலைவர்), திரு. V. கணேசராஜா (அதிபர்), திரு. P. சிறீஸ்கந்தராசா (உபஅதிபர்), ச. கஜேந்திரன் (உபதலைவர்)

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) (நிர்வாகசபை உறுப்பினர்கள்) : ம. வேணுகாந், பா. ஆதித்தியன், ச. கோபிநாத், தா. பிரகதீஸ்வரசர்மா, பி. சுதர்சன், அ. ஷிறான்கேசன், ச. கணேஸ்பரன், த. கோகுலன், க. யசந்தன்

## Band Group - 2008



***Sitting ( L- R) :*** *Mr. S. Nimalan (P. O. G) , Master. Tharsan , Mr. V. Ganesarajah (Principal), Master. K. Harsan (Band leader), Mr. P. Maheswaran (Deputy Principal), Mr. P. Sriskantharajah (Vice-Principal), Mr. Thevaranjan (Band Master)*

***Standing (1st row)(L - R) :*** *Master. I.Mathuchuthanan, Master. K. Vinothan, Master. S. Ghobinath, Master. K. Bhanujan, Master. V. Aaruran, Master. S. Shaktheepan, Master. S. Nitharsanan, Master. T. Kabilesan, Master. S. Kanesparan*

***Standing (2nd row)(L - R) :*** *Master. Sathursan, Master. S. Rishikesan, Master. R. Arushanth, Master. G. Ushanthan,*

***Absent :*** *Master. T. Kananeesan, Master. U. Thanasri, Master. V. Aaruran, Master. V. Aravinthan, Master. K. Vishnugoban, Master. T. Ragul, Master. M. Rajithan, Master. R. Rajeevan*

## Leo Club - 2008



***Sitting (L - R) :*** *Leo. S. Kajarathan (Secretary), Mr. P. Sriskantharajah (Vice - Principal), Leo. L. Lavan (President), Mr. V. Ganesarajah (Principal), Leo. Y. Rajeevan (Treasurer), Lion. Ladchumanan (Teacher - in - Charge)*

***Standing (L - R) (1st Row) :*** *Leo. T. Thirukumaran (B. O. D), Leo. K. Sureshkumar (B.O.D), Leo. P. Nirejithan (Treasurer), Leo. K. Harsan (Editor), Leo. G. Mogansinth (Project - Co-Ordinator), Leo. K. Anojan, Leo. K. Kajanan (Tamer), Leo. K. Pirashanthan, Leo. S. Aathirayan (Projected - Ordinator)*

***Standing (L - R) (2nd Row) :*** *Leo. T. Tatheesan (B. O. D), Leo. S. Sivasenthuran, Leo. Y. Uthayapalan (B. O.D), Leo. Thivakar, Leo. R. Kugapiriyan (Asst. Secretary), Leo. P. Sanjeevan*

***Absent:*** *Leo. S.Gowrinath (Vice - President), Leo. A. Sujindar (B. O. D), Leo. R. Rishikesan (B. O. D), Leo. A. Piriyatharsan(B. O. D)*

## சதுரங்கக் கழக நிர்வாக உறுப்பினர்கள் - 2007/ 2008



இருப்பவர்கள் (இடமிருந்து வலம்) : திரு. பொ. ஸ்ரீகந்தராஜா (உபஅதிபர்), செல்வன் B. அருண் (செயலாளர்), திரு. வீ. கணேசராசா (அதிபர்), செல்வன் S. சேரன் (தலைவர்), திரு. பொ. மகேஸ்வரன் (பிரதி அதிபர்), திரு. சு. தயானந்தன் (பொறுப்பாசிரியர்), திரு. ச. நிமலன் (விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்)

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) : செல்வன் S. அபயன் (உபதலைவர்), செல்வன் K. சுரேஷ்குமார் (பொருளாளர்), செல்வன் K. எழில்வேள் (அணித்தலைவர்), செல்வன் M. ராகவன் (பத்திரிகை ஆசிரியர்), செல்வன் J. நிரோஜன் (உபசெயலாளர்)

## தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட சதுரங்க 19 வயது, 15 வயது அணியினர் (2006)



இருப்பவர்கள் (இடமிருந்து வலம்) : திரு. ச. நிமலன் (விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்), திரு. பொ. ஸ்ரீகந்தராஜா (உபஅதிபர்), செல்வன் J. நிரோஜன் (அணித்தலைவர், 19 வயதுப்பிரிவு) திரு. வீ. கணேசராஜா (அதிபர்), செல்வன் P. நர்த்தனன் (அணித்தலைவர், 15 வயதுப்பிரிவு), திரு. பொ.மகேஸ்வரன் (பிரதிஅதிபர்), திரு. சு. தயானந்தன் (பொறுப்பாசிரியர், சதுரங்கக் கழகம்)

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்): செல்வன் K. எழில்வேள், செல்வன் V. ஆரூரன், செல்வன் N. வர்மன், செல்வன் S. சேரன், செல்வன் S.கோபி காந்தன், செல்வன் K. சுரேஷ்குமார், செல்வன் S. அபயன், செல்வன் B. அருண்

நிற்போர் (இடமிருந்து வலம்) பின்வரிசை : செல்வன் T. விவியன், செல்வன் E. கோசிகன், செல்வன் M. வர்ணபாலன், செல்வன் K. தனுசன்

# மேசைப் பந்தாட்ட அணி



இருப்பவர்கள் (இடமிருந்து வலம்) : P. ஸ்ரீஸ்கந்தராஜா (உபஅதிபர்), பொ. மகேஸ்வரன் (பிரதி அதிபர்), தீ. ரிஷ்யந்தன் (அணித் தலைவர்), வீ. கணேசராசா (அதிபர்), கு. மோகுணசிந் (அணி உபதலைவர்), சோ. கிருஷ்ணதாஸ் (அணிப் பொறுப்பாசிரியர்), சதா. நிமலன் (விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்)

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) : க. ஏகாந்தன், த. வினுஜன், சி. சிவசெந்தூரன், சி. நிதர்சனன், இ. அனோஜன், க. உஷாந்தன், நி. நிரோஷன்

# பூப்பந்தாட்டக் கழகம்



இருப்பவர்கள் (இடமிருந்து வலம்) : P. ஸ்ரீஸ்கந்தராஜா (உபஅதிபர்), பொ. மகேஸ்வரன் (பிரதி அதிபர்), சுரேஸ்குமார் (செயலாளர்), வீ. கணேசராஜா (அதிபர்), கு. மோகுணசிந் (தலைவர்), சோ. கிருஷ்ணதாஸ் (பொறுப்பாசிரியர்), சதா. நிகலன் ( விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்)

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) : ஜெ. பிருந்தாபன், த. கஜிர்தன், தீ. ரிஷ்யந்தன், க. ரூபவிநோத், சி. சிவசெந்தூரன், சி. உமாதரன், சி. சிவரங்கன், க. தசாகன், தி. செழியன், ந. சத்தியன், பா. பிரணவன், இ. அனோஜன், ச. திருபரன்.

## மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகிய பூப்பந்தாட்ட அணி



இருப்பவர்கள் (இடமிருந்து வலம்) : சோ. கிருஷ்ணதாஸ் (அணிப்பொறுப்பாசிரியர்) , பொ. மகேஸ்வரன் (பிரதி அதிபர்), க. ரூபவினோத் (அணித்தலைவர்) , வீ. கணேசராஜா (அதிபர்) , P. ஸ்ரீஸ்கந்தராஜா (உப அதிபர்), சதா. நிமலன் (விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்)

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) : பா. கிருஷாந், செ. ஜனகன், தி. செழியன், பா. பிரணவன், ச. திரிபுரன்

## பூப்பந்தாட்ட அணி



இருப்பவர்கள் (இடமிருந்து வலம்) : P. ஸ்ரீஸ்கந்தராஜா (உபஅதிபர்) , பொ. மகேஸ்வரன் (பிரதி அதிபர்) , சி. உமாதரன் (அணி உபதலைவர்), வீ. கணேசராசா (அதிபர்), கு. மோகுணசிந் (அணித்தலைவர்), சோ. கிருஷ்ணதாஸ் (அணிப்பொறுப்பாசிரியர்) , சதா. நிமலன் (விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்)

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்): பா. பிரணவன், க. ரூபவினோத், சி. சிவரங்கன், தி. செழியன், ந. சத்தியன், ச. திருபுரன்

# மைந்தனே...

சி. சேரன்
கணிதப்பிரிவு - 2009

அன்பின் மைந்தனிற்கு!
பச்சிளம் பாலகனாய்
என் மீது நீ தவழ்ந்த
அந்தநாள் ஞாபகங்கள்
இரை மீட்கும் போது
உன் நினைவால்
யான் பெற்ற சக்தி கொண்டு
வரையும் மடல் இது!

அறியாத வயதினலே
அறிந்தும் அறியாமல்
நீ செய்த குறும்புகள்
தனிமையிலே இருக்ககையிலே
என் நினைவல் வரும்போது
எனை மறந்து சிரித்திடுவேன்!

நாவலர் பெருமானின்
சிந்தையிலே சிந்திய
சிற்பம்தான் நான்!
சைவப் பெரியார்கள்
பலர் ஒன்றாய் சேர்ந்து

வைத்த கருங்கல்லில் தான்
நான் இங்கு உதித்தேன்!
ஆனால் இன்றோ
நீ வைத்த கல்லால் தான்
பெரும் தருலாய் மிளிர்கின்றேன்!

நூற்றாண்டு கடந்தும் - நான்
இங்கு வாழ்கின்றேன் - இன்னும்
ஆண்டாண்டு காலங்கள்
நான் இங்கு வாழ்ந்திடுவேன்
நீ மட்டும் தானா??

உன் தந்தை! உன் மகன்!
உன் பாட்டன்! உன் பேரன்!
இன்னும் ஏராளம் மைந்தர்கள்!

எத்தனையோ சாதனைகள் - இத்
தரணியிலே படைத்து விட்டேன்!
மன்னிக்க வேண்டும்,
படைத்தது நானல்ல நீங்கள்!
பெற்றதால் இன்பம் பெற்றுற்றேன்
இவ்வுலகில் கொடுத்து வைத்ததாய்
நான்!

கடல்கள், கண்டங்கள் பலதாண்டி
மூலை முடுக்கெங்கும்
நாசாவில், விண்வெளியில்
உரப்பாக ஒலித்தது
உன்னால் என் பெயர்!
பெற்றதால் இன்பம் பெற்றுற்றேன்!
இவ்வுலகில் கொடுத்து வைத்ததாய்
நான்!

கிழவனாக ஆனாலும்
தாய்க்கு நீ குழந்தைதானே?
நீண்ட நாள்காணாத
தவிப்பில் காத்திக்கும்
உன் அன்பு தாய்மீது
பென்னான பாதத்தை
எப்போது நீ படைப்பாய்??
உன் இனிய வருகைக்காய்
வழிமீது விழிவைத்து
காத்திருக்கும்
உன் அன்பு தாய்
- இந்து அன்னை -

# அவள் ஏன் அழுகிறாள்?

செ. செல்வநிகேதன்
உயிரியற்பிரிவு - 2009

சில நாட்களுக்கு முன்புதான் இந்தப் புத்தகங்கள் எல்லாம் மேசையில் சிதறிக் கிடந்தன. இன்று எவ்வளவு அழகாக அடுக் கப்பட்டுக் காணப்படுகின்றன. கழுத்துப் பட்டியை இளக்கியவாறே சிந்தித்தபடி உள்ளேவந்த நான் கதிரையில் உட் கார்ந்தேன்.

**"மணி..."**

அழைப்பதற்குள் தேநீர்க் கோப்பை யுடன் வந்து நின்றாள் என் இல்லத்தரசி மனோன்மணி. மெலிதான ஒரு புன்னகையை மட்டும் வீசி, தேநீரை என்னிடம் தந்து விட்டு உள்ளே போய்விட்டாள். இவள் எப்போதுமே இப்படித்தான். நான் இலக்கிய சஞ்சாரங் களில் இருக்கும் நேரங்களில் கூட அரு கிருந்து ரசிக்காமல் கதவடைத்துத் தூங்கு பவள். சில நிமிடங்களில் தேநீர்க் கோப்பை யும், மனமும் வெறுமையாகிவிட உள்ளே நுழைந்தேன்.

**"குகா அண்ணா... நான் கேட்டது?"** குரல் கேட்டு நிமிர்ந்தேன். கண்களில் கேள்வி யுடன் ஓவியா நின்றாள்.

**"அடடா... மறந்து போச்சே".**
**"போங்கோ... நீங்கள் எப்பவுமே இப் பிடித்தான்."**

அவளின் ஏமாற்றத்தை ரசித்த நான் கையிலிருந்த சஞ்சிகையை நீட்ட மகிழ்ச்சி யுடன் பறித்துக் கொண்டாள். உள்ளே சென்ற நான் உடைமாற்றி வந்த போதும் வாசிப் பிலேயே மூழ்கியிருந்தாள் ஓவியா.

ஓவியா - எங்கள் வீட்டின் அண்மைக் கால வசந்தம். அவளுக்குப் பத்தொன்பது வயதிருக்கலாம். அவளைப் பற்றிக் கேட்டால் என்னால் சொல்லக் கூடியதெல்லாம் இவ் வளவுதான். சில மாதங்கட்கு முன்பு தான் வீதியில் யாருமற்ற அநாதையாக நின்ற ஓவியாவை அழைத்து வந்திருந்தாள் என் காதல் மனைவி. நான் வேலைக்குச் செல்லும் நேரங்களில் தனக்குத் துணையாகவும், வீட்டு வேலைகளில் ஒத்தாசையாகவும் இருப்பாள் என்பதே மணி எனக்குத் தந்த விளக்கம். மறுக்க முடியுமா என்னால், மனைவி சொல்லே மந்திரம் அல்லவா?

அவள் வந்த சில நாட்களில் அலங் கோலமாக இருந்த வீடு அழகாக மாறியது. சிதறிக் கிடந்த பொருட்கள் எல்லாம் சீர்படுத் தப்பட்டன. அது மட்டுமன்றி எமது தனிமை யைப் போக்கவும், சின்னச் சின்ன சந்தோ சங்களை ஏற்படுத்தவும் தெரிந்து வைத் திருந்தாள் ஓவியா.

**"அண்ணா பாவம்... எப்பிடித்தான் அண்ணி சமைக்கிறதையெல்லாம் சாப்பிடுறாரோ தெரியேல்லை"** என்று அவள் கூற,

**"இவ்வளவு நாள் இந்த உண்மையைச் சொல்ல எனக்கு வராத துணிச்சல் உனக் காவது வந்துதே."** என்று நான் ஆமோதிக்க,

எங்களிருவரையும் செல்லமாகக் கோபித்துக் கொள்வாள் என் மனைவி. சில

வேளைகளில் மணியுடன் சேர்ந்து கொண்டு ஓவியா என்னையும் அசடு வழிய வைப் பதுண்டு. இவ்வாறு எங்கள் வீட்டின் கலகலப் புக்குச் சொந்தக்காரியாகி விட்டிருந்த ஓவியா பற்றி எந்த விபரங்களும் எங்களுக்குத் தெரிந் திருக்கவில்லை. அவளாகச் சொல்லும்வரை கேட்பதில்லை என்று நானும், மணியும் முடி வெடுத்திருந்தோம். இந்த நிலையில்தான் எங்களை சிந்திக்க வைத்த புதிர் ஆரம்ப மாகியிருந்தது.

சில தினங்களுக்கு முன்பு இரவு பத்து மணியளவில் அறைக்கு வந்த மணி, பரபரப் பாகியிருந்த என்னிடம் சொன்னாள்.

**"அவதாங்க... விக்கி விக்கி அழுறா."**

சில நிமிடங்களில் ஓவியாவின் அறை வாயிலை அடைந்த நான், அமைதியாகக் கவனித்தேன். பூட்டப்பட்டிருந்த அறைக்குள் ளிருந்து மெதுவாக விம்மல் எழுந்தது. சந் தேகமேயில்லை; ஓவியாவேதான். விகசித்து அழுது கொண்டிருந்தாள். குழம்பிய மனத் துடன் வந்த எனது கண்களைத் தூக்கம் தழுவிய போது நள்ளிரவு தாண்டிப் போயிற்று. தொடர்ந்து வந்த நாட்களிலும் பின்னிரவு வேளைகளில் ஓவியா அழுது கொண்டிருந்தாள் இன்று வரை.

இன்று காலை மனோன்மணி சொன்ன யோசனை ஒன்றினால் தான் தொடர்ந்து இந்த மர்மம். இந்த இரவுடன் முடிவுக்கு வரக்கூடும் என்ற நம்பிக்கை கைவரப் பெற்றேன். கண வனுக்கு நம்பிக்கையூட்டுவது தானே நல்ல மனைவியின் இயல்பு. அது சரி தேவதைகள் ஏன் அழவேண்டும்?

ஓவியா ஒன்றும் அத்தனை அழகல்ல. ஆனால் நடை, உடை, பாவனையிலும், குழந் தைத்தனமான பேச்சிலும் ஒரு வசீகரம் அவ ளிடத்தே இருந்தது. ஓவியா அழகாகப் பாடு வாள், கவிதை எழுதுவாள், பெயருக்கேற் றாற்போல் ஓவியமும் வரைவாள். சில துன்ப மான இரவுகளில் அவள் பாடும் கானங்கள் என்னை நெஞ்சுருக வைக்கும், அந்த இரவு களில் அவளின் இசையில் நான் மெய்மறந்து போவதுண்டு. மற்றைய சமயங்களில் அவள் துள்ளலும், களியாட்டமுமாகத்தான் காணப் படுவாள். ஓவியாவுக்கு குழந்தைகள் என் றால் கொள்ளைப் பிரியம். அயல் வீட்டு வாண்டுகள் வந்தால் முழுநேரமும் அவர் களுடனே விளையாடி, தானும் குழந்தையாகி விடுவாள். ஆனால், அவள் கண்களில் மட்டும் ஒரு சோகம் இருப்பதை நான் காண முடிந் தது. அந்த நீலநிற நேத்திரங்களில் நிரம்பி யிருந்த சோகம் ஆழங்காண முடியாததாகத் தோன்றியது. "ஓவியா உனக்கு என்ன ஆச்சு?

இந்த இரவு பெரிய மர்மச்சுமையைத் தாங்கி வந்திருப்பது போல் தோன்றியது. நேரம் ஆக, ஆக நெஞ்சு அடித்துக் கொண் டது. நள்ளிரவு தாண்டிய வேளையில் மனோன்மணியின் யோசனைப்படியே ஓவியா வின் அறையைச் சென்றடைந்தேன். இப் போது எங்கும் நிசப்தமாக இருந்தது. காற் றில் மரங்கள் ஆடும் ஓசையையும், மெழுகு வர்த்திச் சுவாலை எரிகின்ற ஒலியையும் தவிர வேறெதுவும் கேட்கவில்லை. சொந்த வீட்டிலேயே திருடன் போல ஓவியாவின் அறைக்கதவை மெல்லத் திறந்தேன்.

உள்ளே ஓவியா அமைதியாக உறங் கிக் கொண்டிருந்தாள். அவளின் கண்ணீருக் கான காரணத்தை அறியும் ஆவலில் அமைதி யாக அவள் உடைமைகளைப் புரட்டத் தொடங்கினேன். அவள் வரும்போதுகொண்டு வந்த ஒரே சொத்தான புடவைகளும், ஆடை களும் முழுமையாகத் தேடும் முயற்சியில் அவற்றைப் புரட்ட அட்டையொன்றும், காகித மொன்றும் கீழே விழுந்தன.

அது ஒரு திருமண அழைப்பிதழ்.

| | |
|---|---|
| **மணமகன்** | **மணமகள்** |
| **வசந்தகுமார்** | **ஓவியா** |

ஆகிய இருவருக்கும் 26.12.2004 **அன்று** கடற்கரை முருகன் கோவிலில் **திருமணம்**

நடாத்த பெரியோர்களால் நிச்சயிக்கப் பட்டுள்ளது.

சற்றே குழப்பமான விழிகளுடன் அந்தக் காகிதத்தைப் பார்த்தேன். ஓவியா தான் எழுதியிருந்தாள்.

**"பூஜைக்குப் போகாத**
**மலர் நான்."**

எனக்கு எதுவுமே புரியவில்லை.

சிந்தனையுடன் அழைப்பிதழை மீளவும் படித்தேன்.

**"26.12.2004 அன்று கடற்கரை முருகன் கோவிலில்..."**

என் மண்டைக்குள் ஏதோ பொறி தட்டியது. அந்தத்தேதி மீது மறுபடியும் கண்கள் ஓடின.

**"26.12.2004"**

கண்களில் ஒரு மின்னல்! இப்போது எனக்கு எல்லாம் புரிந்துவிட்டது. **"ஐயகோ! என் இனிய ஓவியாவே! உன் சோகம் இது தானா? இத்தனை சோகத்தைத் தாங்கி எப்படி உன்னால் சிரிக்க முடிந்தது? என் வீட்டுத் தேவதையே! வாழ்வின் கோரக கரங்கள் உன்னையும் விட்டு வைக்கவில்லையா?** மனதுக்குள் விசும்பி அழுதேன். ஓவியாவோ எந்த சலனமும் இன்றி உறங்கிக் கொண்டிருந்தாள். தன்னை உருக்கி, எரிந்து கொண்டிருந்த மெழுகுவர்த்தியும் என்னுடன் அழுது கொண்டிருந்தது.

ஓவியா இப்போது எங்களுடன் இல்லை. தூரத்து உறவினர் வீடு தேடிச் சென்று விட்டாள். ஆனால் அந்த அறையைக் கடக்கும் போதெல்லாம் அவளின் அழுகை ஒலி மட்டும் இன்றும் கேட்டுக் கொண்டிருக்கின்றது. அவள் ஏன் அழுதாளென்று உங்களுக்குத் தெரியுமா?

# இன்றைய சிறுவரும் அவர்தம் உளநலனும்

பா. அருண்
கணிதப்பிரிவு - 2009
சிறுவர் கழகம்

இன்றைய எமது சமூக சிறார்கள் அனைவருமே பொதுவாக குறித்த சில நெருக்கடிகளின் மத்தியிலேயே கற்க வேண்டிய சூழ்நிலையில் வாழ்கின்றனர். இத்தகைய நிலையிலும் எப்பாடுபட்டாவது எமது மாணவர்களின் உளவிருத்தியை சீராகப் பேணுவதன் மூலமே எமது எதிர்கால சமூகத்தைப் பாதுகாக்கமுடியும். எனவே, மாணவர்களின் உள நல விருத்தியில் முக்கிய பங்குவகிக்கும் குடும்பச் சூழல், பாடசாலைச் சூழலின் பொறுப்புகள் பற்றியும், சிறார்கள் மத்தியில் தற்கால நெருக்கீடுகள் செலுத்தும் தாக்கம் பற்றியும் ஆராய்வோம்.

குடும்பச் சூழல் என்பது சிறுவன் ஒருவனின் சிறப்பான வளர்ச்சிக்கு அத்திவாரமிடுவதாகும். இத்தகைய குடும்பச் சூழல் சிறப்பாக அமைவதே சிறுவனின் சமூக மயமாக்கலை சிறப்பாக ஆக்கமுடியும். எனினும், துரதிஷ்டவசமாக தற்காலத்தில் வறுமை, மதுப்பாவனை, போர் அனர்த்தம், நவீன மயப்படுத்தல் என்பவற்றால் குடும்பச் சூழல் காரணிகள் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளன.

சிறப்பான குடும்பச்சூழல் ஒரு சம நிலையைக் கொண்டிருக்க வேண்டும், சரியான வழிநடத்தலைக் கொண்டிருக்க வேண்டும், பரஸ்பர புரிந்துணர்வுடைய குடும்ப உறுப்பினர்கள் காணப்படவேண்டும், குறித்த இலக்கை நோக்கி நகர்வதாகவும், கட்டுப்பாடுடையதாகவும் இருத்தல் வேண்டும். சிறுவர்களைக் கட்டுப்படுத்தும் போது கட்டுப்பாடுகளைத் திணிக்காமல் அதன் நன்மைகளை விளக்கி, அதனை அவர்கள் சுயமாக ஏற்றுக்கொள்ளச் செய்யவேண்டும். சில சிறுவர்களிடம் ஏற்படும் பயங்கள், தன்னம்பிக்கைக் குறைவு என்பவற்றை இனங்கண்டு

அவர்களை அதிலிருந்து விடுவிக்க வேண்டும். சிறுவன் ஒருவனைப் படிக்கச் செய்ய வேண்டுமெனில், கல்வியை அடக்குமுறையால் திணிக்காது, படிக்கும் ஆர்வத்தை இயல்பாகத் தூண்டக்கூடிய வகையில் நடந்து கொள்ளவேண்டும். பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு சிறந்த வழிகாட்டிகளாக இருத்தல் அவசியம். பிள்ளைகளின் நடவடிக்கைகள் தொடர்பாக பெற்றோர் அறிந்திருப்பதுடன் பிள்ளைகளுடன் எப்போதும் ஆரோக்கிய மான கலந்துரையாடல்களை நடாத்தி, அவர்களை வழிப்படுத்துவதும் இன்றைய சூழலில் இன்றியமையாத நடவடிக்கைகள் ஆகும்.

பிள்ளைகளின் வளர்ச்சியில் குடும்பச் சூழல் போலவே செல்வாக்குச் செலுத்தும் மற்றொரு சூழல் பாடசாலைச் சூழலாகும். பிள்ளைகளின் சமூகமயமாக்கலில் முக்கிய படியாக விளங்கும் பாடசாலைச் சூழல் அவர்களின் இயல்புகளைத் தீர்மானிக்கும் ஒரு இடமாகவும் பரிணமிக்கிறது. பாடசாலைகள் சிறாரின் கல்வி வளர்ச்சி, நற்பண்பு விருத்தி, உளநலமேம்பாடு மற்றும் அவர்களின் ஆற்றலை வெளிக்கொணர்தல் என்பவற்றில் முக்கிய பங்காற்றுதல் வேண்டும்.

பாடசாலைச் சூழலின் சிறப்பிற்கு முக்கிய பங்காளராக அமைவோர் ஆசிரியர்களாவர். பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்துவதற்கான எல்லா உத்திகளையும் கையாண்டு மாணவர்களின் கல்வி, உளநல விருத்தியை மேம்படுத்துவதில் ஆசிரியர்கள் பெரும்பங்காற்றவேண்டும். தன்னுடைய அறிவை மாணவர்களுக்கு திணிப்பதை விட உரிய உபகரணங்களையும், உத்திகளையும், செயற்பாடுகளையும் மற்றும் போதிய ஏனைய வளங்களையும் பாவித்து கல்வியை மாணவருக்கு இலகுவில் விளங்கக்கூடிய வகையில் கற்பிப்போரே சிறந்த ஆசிரியராகக் கருதப்படுவர்.

ஆசிரியர்கள் கட்டுப்பாடாக இருப்பது மிகவும் அவசியமானது. எனினும், பிள்ளைகளை கடுமையாக அடித்து, மிரட்டி, சரீர ரீதியான கடுமையான தண்டனைகளை வழங்குவது சிறுவர் உளநல விருத்திக்கு உகந்தது அல்ல. இதன் மூலம் அச்சமான மனநிலைக்கு மாணவர்கள் தள்ளப்படலாம். இத்தகைய மிகையான அழுத்தத்திற்கு உட்பட்ட சிறுவர்களே சிறிது காலத்தில் கட்டுக் கடங்காதவர்களாக மாறுவர். சிறுவர்களின் தன்னம்பிக்கையை வளர்த்தெடுப்பதில் ஆசிரியர்கள் முக்கியபங்கு வகிக்கின்றனர். தேவையான போது பாராட்டுவதுடன் தேவையான போது அன்பாகக் கண்டித்து பொருத்தமான தண்டனை வழங்கி மாணவர்களை வழி நடத்தல் ஆசிரியரின் பணியாகும். எமது பாடசாலை ஆசிரியர்கள் படிப்பை மட்டுமன்றி மாணவர்களின் உளநலனைப் பேணும் வகையில் பல கதைகளைச் சொல்லுகின்றார்கள். அக்கதைகள் எமது வாழ்வுக்கு புடம்போடுகின்றது.

பாடசாலை, சமூக பங்காளர்களின் சிறப்பான செயற்பாட்டின் மூலமே சிறந்த மாணவர் சமூகம் உருவாக முடியும். பாடசாலைச் சூழல் பொருத்தமாக அமையாவிடின் அது எதிர்மாறான குணம்கொண்ட மாணவர் உருவாக வழிசமைப்பதுடன், எதிர்கால சமூகம் ஆரோக்கியமற்றதாகவும் மாறக்கூடும்.

இன்றைய சமூகச் சூழ்நிலைகளும் மாணவர் வாழ்வில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. போர், இடப்பெயர்வு, வறுமை, வன்முறைகள், கடும்கட்டுப்பாடுகள் என்பன மாணவர் மத்தியில் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. சிறுவர் வன்மமடைதல் இன்றைய போர்ச்சூழலின் ஒரு வெளிப்பாடாகவே கருதப்படுகின்றது. இன்றைய சிறுவர்களின் விளையாட்டுப் பொருட்களாகக் கூட யுத்த உபகரணங்களே பயன்படுகின்றன.

இத்தகைய இடர்களின் மத்தியிலும் சிறுவரின் உளநலத்தை விருத்தி செய்ய பெற்றோரும், ஆசிரியரும் சிறப்பான பங்களிப்பை ஆற்றவேண்டும். சமூக அக்கறையுடன் ஆசிரியர்கள் இப்பணியில் ஈடுபட வேண்டும். வடுக்களால் பாதிக்கப்பட்ட சிறாருக்கு உளஆற்றுப்படுத்தல்கள் மூலம் இயல்புநிலை ஏற்படுத்தமுடியும். இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆசிரியர்களும் முன்வரவேண்டும். இவ்வாறு அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலமே ஆரோக்கியமான எதிர்கால சமூகத்தை உருவாக்க முடியும்.

☆☆☆

## கரப்பந்தாட்டக் கழகம்



இருப்பவர்கள் (இடமிருந்து வலம்) : திரு. க. சுவாமிநாதன் (பொறுப்பாசிரியர்), திரு. பொ. மகேஸ்வரன் (பிரதி அதிபர்), திரு. ல. நிஷாந்தன், திரு. வீ. கணேசராசா (அதிபர்), செல்வன் மு. துளசிகரன் (தலைவர்), திரு. பொ. ஸ்ரீகந்தராஜா (உபஅதிபர்), திரு. ச. நிமலன் (விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்), திரு. வீ. கணேசலிங்கம்

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) : வெ. பிருந்தன், கோ. சாரங்கன் (செயலாளர்), அ. அனுராஜ், சி. ரகுராம் (பொருளாளர்), க. கஜீபராஜ், கி. கிருசோபன், ச. விதுரன், சி. யதுர்சன், சி. தேவகுமாரன், இ. சுவிஸ்ரன்

## தேசியப் போட்டியில் பங்குபற்றிய 19 வயதுப்பிரிவு கூடைப்பந்தாட்ட அணி



இருப்பவர்கள் (இடமிருந்து வலம்) : திரு. ந. பிரசாந்தன் (பொறுப்பாசிரியர்) , த. சிவதாஸ் (பயிற்றுனர்), தி. கௌசிகன் (உபதலைவர்), திரு. பொ. மகேஸ்வரன் (பிரதி அதிபர்), ச. வாகீசன் (அணித்தலைவர்), திரு. வீ. கணேசராஜா (அதிபர்), திரு. பொ. ஸ்ரீகந்தராஜா (உபஅதிபர்), திரு. சதா நிமலன் (விளையாட்டுத் துறைப் பொறுப்பாசிரியர்)

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) : தீ. ரிஷியந்தன், பா. சேகரன், க. சுரேஸ்குமார், சி. உமாதரன், இ. ரஜிவர்ணன், தி. கோசிகன், தி. செழியன், சி. ஆதிரையன், நி. நிரோசன்

## Scrabble Club Office Bearers - 2007/ 2008



***Seated (L - R) :*** *Mr. P. Ragumar (Teacher in Charge), Mas. W. May«ran (Vice President), Mr.P. Sriskan tharajah (Vice Principal), Mas. S. Niranjanan (Secretary), Mr. V. Ganasarajah (Patron / Principal), Mas. A. Albert Nimalan (President), Mr. P. Maheswaran (Deputy Principal), Mas. P. Niroshan (Treasurer), Miss K. Narasingavel (Teacher in Charge)*

***Standing (L - R) :*** *Mas. T. Sivamainthanan (Com. Member), Mas. R. Vinoth (Com. Member), Mas. S. Sujan (Com. Member), Mas. K. Saikesan (Com. Member), Mas. K. Vicgnan (Editor), Mas. Y. Ajith (Co - Editor), Mas. Vaikarthanan (Com. Member), Mas. R. Rajivarnan (Com. Member), Mas. R. Sugirtharn (Com. Member), Mas . S. Swthiraj (Com. Member), Mas. Sathiyan (Com. Member)*

## Island Level Scrabble Tournament Team - 2007



***Seated (L - R) :*** *Mas. K. Vignan, Mr. P. Ragumar (Teacher in charge), Mr.. P. Maheswaran (Deputy Principal), Mr. V. Ganesaraja (Patron / Principal), Miss. K. Narasingavel (Teacher in charge), Mas. W. Mayouran*

***Standing (L - R) :*** *Mas. R. Vinoth, Mas. G. Vaikunthan, Mas. Vaikarthanan, Mas. V. Prathaban, Mas. S. Sujan*

## ஆசிரியரது பணிகள் பல்பரிமாணங் கொண்டவை.
## 4 முக்கிய பரிமாணங்களாவன:-

1. கல்வி சார்ந்த புலமைத்திறனை வளர்த்தெடுப்பர்.
   INQUIRY TRAINER

2. மாணவர்களின் ஆற்றல்களைத் தேடிக் கண்டறிபவர்.
   PERSON SEEKER

3. தலைமைத்துவத் திறன்களை வளர்த்தெடுப்பவர்.
   GROUP LEADER.

4. போதனா முகாமையாளர்.
   INSTRUCTIONAL MANAGER

# என் மாணவர்கள் என்னை அழைத்தபோது...

பொ. மகேஸ்வரன்
பிரதி அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

2007 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் ஒரு நாள் எனது கல்லூரி அலுவலகத்தில் கடமையில் ஈடுபட்டிருந்தபோது எனக்கு தொலைபேசி அழைப்புக் கிடைத்தது. யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க லண்டன் கிளையின் தலைவர் திருக்கேதீஸ்வரன் தங்கள் நிர்வாகக்குழு வருடாந்தம் யூன் 30 ஆம் திகதி நடைபெறும் கலையரசி வெளியீட்டு விழாவிற்கு இம்முறை என்னை பிரதம விருந்தினராக அழைக்கத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்து என்னுடைய சம்மதத்தைக் கேட்டார். என்னுடைய சம்மதத்தை தெரிவித்தேன்.

தலைவரிடம் இருந்து முறையான கடிதம் கிடைத்தது. யாழ் இந்துக் கல்லூரியில் உங்களிடம் கல்வி கற்று தற்போது உலகெங்கும் பல்வேறு முன்னணித் தொழில்த் துறைகளில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் மாணவர்கள் நீங்கள் எங்கள் கல்லூரிக்கு ஆற்றிய சேவையை கௌரவிக்கும் முகமாக உங்களை கலையரசி வெளியீட்டு விழாவுக்கு பிரதம விருந்தினராக அழைக்கும்படி எங்களைக் கேட்டுள்ளார்கள். பிரயாணம் மற்றும் தங்குமிடம் முதலான எல்லாச் செலவுகளையும் நாங்கள் பொறுப்பேற்கிறோம் என்று அக் கடிதத்தில் இருந்தது.

விசா பெறுவதற்கான ஆவணங்கள் கொழும்பு பழையமாணவர் சங்க உப தலைவர் அசோகன் அவர்களிடம் அனுப்பியுள்ளதாக லண்டனில் இருந்து தகவல் வந்தது. அசோகன் என்னிடம் கற்ற ஆரம்பகால மாணவர்களில் ஒருவர். அசோகனுடன் தொடர்பு கொண்டேன். ஆவணங்களையும் விசா பெறுவதற்கான கட்டணத்தையும் கையளித்தார். யூன் 11 ஆம் திகதி விசாவுக்கு விண்ணப்பித்தேன். ஆவணங்களை முறையாக சமர்ப்பித்தமையால் யூன் 14 ஆம் திகதியே விசா கிடைத்தது.

யூன் 18 ஆம் திகதி மு.ப. 6 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தைச் சென்றடைந்தேன். உரிய பரிசோதனைகள் முடிந்தவுடன் பயணப் பைகளை கட்டார் விமான சேவை நிறுவனத்தினர் பொறுப்பேற்றனர். கட்டார் விமான சேவை விமானத்தைப் பயணிக்க ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. டோகா (கட்டார்) விமான நிலையத்தில் நான் மாற்ற வேண்டுமா? என்று கேட்டேன். ஹீத்ரோ விமான நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று பதில் வந்தது. பின்னர் குறிப்பிட்ட இலக்கமுடைய Gate இல் விமானம் வரும் வரை தங்கவும் என்று அறிவிக்கப்பட்டது. எல்லாமே எனக்கு புதிய அனுபவம். உரிய நேரத்திற்கு விமானம் வந்தது. ஒவ்வொருவராக பரிசோதித்து விமானத்தில் ஏற்றினார்கள். மேல் மாடியில் இருந்தபடி நேரே விமானத்தில் ஏறக்கூடிய வசதி இருந்தது. வெளியே இருந்து பார்த்தபோது அவ்வளவு பெரிதாகத் தெரியாத விமானம் உள்ளே சென்றதும் மிக விசாலமாகத் தெரிந்தது. ஒரு நிரையில் 8 இருக்கைகள் இடையே இரண்டு நடை

பாதைகள். ஏறக்குறைய 400 இருக்கைகள். எனக்கென்று ஒதுக்கப்பட்ட இருக்கையில் அமர்ந்துகொண்டேன். ஒவ்வொரு இருக்கையிலும் சிறிய தலையணையும் கம்பளிப் போர்வையொன்றும் இருந்தன. ஒவ்வொரு பயணிக்கு முன்பும், முன் இருக்கையின் பின்புறம் ஒரு LCD Screen இருந்தது. குறிப்பிட்ட சில மொழிகளில் தயாரிக்கப்பட்ட குறிப்பிட்ட சில திரைப்படங்களை விரும்பியவாறு தெரிவு செய்து பார்வையிடலாம். ஒவ்வொரு இருக்கையின் ஒரு கைப்பிடிக்குள் இருக்கும் Remote Control ஐ வெளியே இழுத்து செயற்படுத்த முடியும்.

உரிய அறிவுறுத்தல்கள் எச்சரிக்கைகளுடன் சரியான நேரத்துக்கு விமானம் புறப்பட்டது. சிறிது நேரத்துக்குப் பின் விமான உபசரிப்பாளர்கள் சுறுசுறுப்பானார்கள். ஒவ்வொரு பயணிகளிடமும் உணவுப் பட்டியலைக் கொடுத்து எவ்வகை உணவு வேண்டும், எவ்வகைப்பானம் வேண்டும் என விசாரித்தறிந்து அதன் பிரகாரம் பரிமாறினார்கள். எனக்கென்று ஒதுக்கப்பட்ட உபசரிப்பாளரிடம் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்று வினாவினேன். தாய்வான் என்று பதில் வந்தது. நான் தமிழ்ப்படம் ஒன்று பார்க்க விரும்புவதாக ஆங்கிலத்தில் கேட்டேன். ( I would like to see a Tamil film) அவர் ஆங்கிலத்தில் No Tamil Film என்று பதில ளித்தார். பின்னர் Guru என்னும் ஹிந்தித் திரைப்படத்தைப் பார்த்தேன்.

இவ்வாறான புதிய அனுபவங்களுடன் பயணித்துக்கொண்டிருந்த போது விமானம் உரிய நேரத்தில் டோகா விமான நிலையத்தை சென்றடைந்தது. அங்கே விமானத்தில் இருந்து நேரே விமான நிலையக் கட்டடத்திற்குள் செல்லும் வசதி இருக்கவில்லை. விமானத்தில் இருந்து ஏணி வழியாக இறங்கி பஸ் மூலம் விமான நிலையக்கட்டத்தை சென்றடைந்தோம். உரிய பரிசோதனைகள் நடைபெற்ற பின் தங்குமிட அறையில் விமானத்திற்காக காத்திருந்தேன்.

லண்டன் நேரப்படி அதே நாள் மாலை 6.00 மணியளவில் லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தை அடைந்தோம். ஹீத்ரோ விமான நிலையத்தை அடைந்ததும் வழமையான பரிசோதனைகள், விசாரணைகள் முடிந்தவுடன் எனது பொதியை எடுக்கும் இடத்திற்குச் சென்றேன். அங்கே சுமார் 10 எண்ணிக்கையான நீளமான Belt களில் பொதிகள் சுற்றிக்கொண்டிருப்பதை அவதானித்தேன். முதல் அனுபவமாகையால் எந்த Belt இல் தேடுவது என்று தடுமாறினேன். ஒரு விதமாக நிலைப் பணியாளரை விசாரித்தபோது Belt களுக்கு அருகே உயரத்தில் நீங்கள் பயணம் செய்த விமானத்தின் இலக்கம் ஓடிக்கொண்டிருக்கும் என்று சொன்னார்கள். அதன்படி உரிய Belt அருகே நின்று எனது பொதி வந்தபோது அதை எடுத்துக் கொண்டு தள்ளுவண்டியில் வைத்து தள்ளிக்கொண்டு வெளியே வந்தேன்.

என்னை வரவேற்பதற்காக பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு. திருக்கேதீஸ்வரன், லண்டனில் குடியேறியுள்ள எனது மருமகள் (சகோதரியின் மகள்) குடும்பத்தினர் காத்திருந்தனர். அவர்களிடம் நலம் விசாரித்து அளவளாவிவிட்டு கார்களில் ஏறி எனது மருமகளின் இல்லம் நோக்கிச் சென்றோம்.

லண்டனில் வீதியருகே உள்ள வீடுகளில் புகைபோக்கிகள் இருப்பதை அவதானித்து இந்த நவீன விஞ்ஞான யுகத்தில் ஏன் புகைபோக்கிகள் உள்ளன என விசாரித்தேன். இவ்வீடுகள் 150 வருடங்கள் பழமையானவை எனவும் அக்கால வீடுகளில் குளிர்காலங்களில் நிலக்கரியை எரித்து சூடேற்றிக்கொள்வார்கள் எனவும் புகை வெளியேறவே புகைபோக்கிகளைக் கட்டியிருந்தார்கள் எனவும் இப்போது சூடேற்றுவதற்கு நவீன மின் உபகரணங்கள் உபயோகிக்கின்ற போதிலும் பழமை பேணுவதற்காக அதை அப்படியே விட்டு வைத்திருக்கின்றார்கள் எனவும் அறிந்து கொண்டேன்.

☆☆☆

லண்டனில் ஒரே வீதியில் உள்ள வீடுகள் எல்லாம் இலங்கையில் உள்ள குடியேற்றத் திட்ட வீடுகள் போல் ஒரே மாதிரியானவை யாக இருக்கும். வீட்டின் இலக்கம் தெரியா விட்டால் வீட்டைக் கண்டு பிடிக்க முடியாது. பக்கத்து வீட்டில் யார் வசிக்கின்றார்கள் என்றும் தெரியாது. நான் அங்கு தங்கியிருந்த ஒரு மாதத்தில் பக்கத்து வீட்டில் வசிப்பவரைப் பார்த்ததும் இல்லை.

லண்டனில் உள்ள வீடுகளில் சமையல் அறையிலும் குளியல் அறையிலும் நீர் வரும் tabs இருக்கும். ஒரு sink இல் இரண்டு tabs இருக்கும். ஒன்றில் தண்ணீர் வரும் மற்றைய தில் வெந்நீர் வரும். தண்ணீர் மிகவும் குளிர்ச்சியாக இருக்கும். வெந்நீர் மிகவும் சூடாகவிருக்கும். குளிப்பதற்கு தனியே தண்ணீரையோ அல்லது வெந்நீரையோ பாவிக்க முடியாது. இரண்டையும் தேவையான சூட்டில் கலந்துதான் பாவிக்க வேண்டும்.

ஒவ்வொரு வீட்டிலும் முன்புறமோ அல்லது பின்புறமோ ஒரு சிறிய பூந்தோட்டம் இருக்கும். சமையல் செய்வது gas இல் தான். இங்கே உள்ளது போல் Gas Cylinder வாங்கத் தேவையில்லை. குழாய்களில் Gas வந்து கொண்டிருக்கும். மாதம் முடிய மின் கட்டணம், நீர் கட்டணம் போல் Gas கட்டணமும் செலுத்தவேண்டும். கீழ்ப் பகுதியில் ஒரு வீடும் மேற்பகுதியில் ஒரு வீடும் இருக்கும். அதற்கு மேல்மாடிகள் இல்லை. சில இடங்களில் கீழ்ப்பகுதியும் மேற்பகுதியும் ஒருவருடையதாக இருக்கும். கீழ்ப்பகுதியில் சமையலறையும், வரவேற்பறையும், உணவு பரிமாறும் அறையும் மேல்மாடியில் படுக்கை அறையும் இருக்கும். நண்பர்கள் வீடுகளை தரிசித்தபோது பெரும்பாலும் வெறும் தேநீரை பரிமாறினார்கள். பால்மா பாவிப்பது குறைவு. சீனி பாவிப்பதும் குறைவு. அளவுகளில் பெரிய தடித்த குவளைகளில் பரிமாறினார்கள். சில வீடுகளில் பசும்பால் கலந்து பரிமாறினார்கள்.

ஒருநாளில் குறிப்பிட்ட எல்லைவரை சென்று வருவதற்கு Day Travel card வாங்கிப் பயன்படுத்தலாம். ஒருவருக்கு கட்டணம் £ 6.70. அதனை பஸ் பிரயாணத்திற்கும், ரயில் பிரயாணத்திற்கும் பயன்படுத்தமுடியும். பஸ்கள் சுத்தமாக இருக்கும். பஸ்களில் சாரதி மட்டும் இருப்பார். நடத்துனர் இல்லை. பெண் சாரதிகளையும் கண்டுள்ளேன். பஸ்சில் முன்பக்கத்தால் ஏறவேண்டும். Card ஐ சாரதியிடம் காட்டவேண்டும். சரியாக இருந்தால் தலை அசைப்பார் அல்லது OK சொல்வார். இங்கே உள்ள Season ticket போல் Oyster card உம் உண்டு. அதனை சாரதிக்குப் பக்கத்தில் உள்ள ஒரு இடத்தில் தொடும்போது கீ கீ என்று சத்தம் வந்தால் அனுமதிக்கப்படுகின்றது என்பது அர்த்தமாகும். சாரதி இவற்றை அவதானித்துக் கொண்டிருப்பார். பஸ்களின் முன் அரைவாசி இருக்கைகள் முதியோர்களுக்கென ஒதுக்கப்பட்டிருக்கின்றது. பின் அரைவாசி சற்று உயரமாக இருக்கும். அது மற்றையோருக்கு ஒதுக்கப்பட்டிருக்கும். இரண்டிற்கும் இடையே சிறிய இடம் தள்ளுவண்டிகளில் வரும் குழந்தைகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும். பஸ்ஸினுள் குழந்தைகள் தள்ளுவண்டிகளில் அமர்ந்திருப்பர். இறங்குவதற்கு நடுப்பகுதியில் கதவு இருக்கும். முன்பக்கக் கதவும் பின்பக்க கதவும் பஸ் நிற்கும் போது தானாக மூடிக்கொள்ளும். பஸ் தரிப்பிடங்களில் இன்ன இலக்கமுடைய அடுத்த பஸ் என்ன நேரத்திற்கு வரும் என்பதைக் காட்டும் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

ரயில் நிலைய வாயிலில் உள்ளே செல்வதற்கு பல கதவுகள் இருக்கும். கதவுக்கு அருகில் சென்று உரிய துவாரங்களில் Day Travel card ஐ செலுத்தும் போது கதவு திறந்து மூடும். அதற்கிடையில் உள்ளே சென்றுவிட வேண்டும். உள்ளே சென்று துவாரத்தினூடாக வெளியேறிய card ஐ குறிப்பிட்ட பிரயாணத்திற்குரிய கட்டணத்தைச்

செலுத்தியும் Ticket பெற்றுக்கொள்ளலாம். நிலைய மேடையில் அறிவிப்புக்கள் ஓடிக் கொண்டிருக்கும். இன்ன இடத்திற்குரிய ரயில் என்ன நேரத்திற்கு மேடைக்கு வரும் என்று அடிக்கடி காட்டிக்கொள்வார்கள். எவரையும் விசாரிக்கத் தேவையில்லை. Victoria செல் லும் Tain மேடைக்கு வந்து நின்றது. கதவு பக்கவாட்டுக்குத் தானாகத் திறந்து கொண் டது. உள்ளே ஏறி இருக்கைகளில் அமர்ந் தோம். இருக்கைகள் மிக அழகாக இருந்தன. Compartments உம் சுத்தமாக இருந்தன. இருக்கைகள் நிறைந்ததால் சிலர் நின்றும் பிரயாணம் செய்தனர். ஒவ்வொரு பெட்டி யிலும் map இருந்தது. நாம் செல்லும் வழியில் உள்ள நிலையங்களின் பெயர் இதில் பொறிக்கப்பட்டிருக்கின்றன. ரயில் நிலைய மேடையிலும் இங்கே உள்ளது போல் நிலையத்தின் பெயர் எழுதப்பட்டிருக் கின்றது. லண்டனில் Train ஐ Tube என்று சொல்கிறார்கள். சில இடங்களில் தரை மீதும் சில இடங்களில் சுரங்கத்தின் ஊடாகவும் Train பயணம் செய்கின்றது. Train ஓடிக் கொண்டிருக்கும்போது அது எவ்வகையான Train என்றும் எந்த நிலையம் வரை செல்லும் என்றும் அடுத்த நிலையம் எது என்றும் ஒவ்வொரு பெட்டியிலும் அறிவிப்பு காணப் படுகின்றது. சில நிலையங்களில் Train க்கும் Platform ற்கும் இடையில் அதிகமாகக் காணப்படுகின்றது. அவ்வாறான நிலையம் வரும் முன்பே mind the gap between the train and the platform என்று அறிவித் தார்கள்.

Victoria Station இல் இறங்கி பக்கிங் காம் அரண்மனையை நோக்கி நடந்தோம். அரண்மனை வாயிற் கதவுகள் மிக அழகாக இருந்தன. சுற்றுலாப் பயணிகள் அனேகர் அங்கு திரண்டிருந்தனர். அரண்மனை விசால மான இடத்தில் அமைந்திருந்தது. உள்ளே செல்ல முடியாது. அரண்மனைக் கட்ட டங்கள் பழமையானவையாக இருந்தன. அரண்மனைக்கு முன் மிகப்பெரிய Victoria சிலை உள்ளது. சிலையைச் சுற்றி நீர்த் தொட்டி அமைத்திருக்கின்றார்கள். அரண் மனையின் முன்னே பெரிய பூந்தோட்டம் இருக்கின்றது. அரச பூங்கா (Royal Park) என்று அதன் பெயர் Crotons ஆல் வடிவமைக் கப்பட்டிருக்கின்றது. தர்மபாலன் Video Camera, Photo Camera என்பவற்றால் என்னை உட்படுத்தி படமாக்கிக் கொண்டார். பூங்காவின் ஒரு புறத்தே நீரோடை இருந்தது. அதில் பறவைகள் சில நீந்திக் கொண்டி ருந்தன. பல வகையான பூங்கன்றுகள் Crotons வர்ண இலைகளைக் கொண்ட பெரிய மரங்கள் போன்றவற்றைக் கண்டு களித்தேன்.

அடுத்ததாக நாம் பார்த்தது Horse Guard Building இரு வீரர்கள் கட்டடத்தின் முன் உயிருள்ள இரு குதிரைகள் மீது அமர்ந் திருந்தார்கள். அதனால் தான் அந்தக் கட்ட டத்துக்கு அந்தப் பெயர் வந்தது போலும். குதிரைகள் உங்களை உதைக்கலாம் எச் சரிக்கையாக இருங்கள் என்ற அறிவிப்பும் அருகே இருந்தது.

அடுத்ததாக நாம் London Eye ஐ பார்த்தோம். London Eye தேம்ஸ் நதிக்கரை யோரம் அமைத்திருந்தார்கள். London Eye என்பது மிகப் பெரிய நிலைக்குத்து வட்டமாக இரும்புக் கம்பிகளால் அமைக்கப்பட்ட பொறி யாகும். வட்டத்தில் ஆங்காங்கே மூடிய பல சிறிய அறைகள் தொங்கிக்கொண்டிருக்கும். ஒவ்வொரு அறைக்கும் கதவு இருக்கும். இருக்கைகளைத் தவிர மற்றவை எல்லாம் கண்ணாடிச் சுவர்களால் ஆனவை. ஒவ் வொரு அறையிலும் 10 பேர் வரை அமரலாம். Ticket எடுத்துக்கொண்டு வரிசையில் நின்று நாமும் ஒரு அறைக்குள் ஏறி அமர்ந்தோம். வட்டம் மிக மெதுவாகச் சுழலத் தொடங்கி யது. எங்கள் அறை மேலே செல்லும் போது London city முழுவதையும் பார்க்கக்கூடிய தாக இருந்தது. கட்டடங்கள், வீதியில் செல்

லும் வாகனங்கள், நீலம், வெள்ளை, சிவப்பு போன்ற தனித்தனி நிறங்களிலான ரயில்கள், தேம்ஸ் நதியில் செல்லும் படகுகள், பக்கிங் காம் அரண்மனை, Horse Guard Building போன்ற எல்லாவற்றையும் நாற்புறமும் பார்க்க முடிந்தது.

London Eye பார்த்து முடிந்ததும் நான் கண்ட காட்சி எதிர்பாராத ஒன்றாகும். லண்டன் மாநகரான அவ்விடத்தில் ஒரு பிச்சைக் காரன் குப்பைக்கூடை ஒன்றைக் கிளறி உணவு தேடிக்கொண்டிருந்தான். ஆனாலும் அவன் Coat, சப்பாத்து எல்லாம் அணிந் திருந்தான்.

நான் லண்டன் சென்றிருந்தபோது அப் போது Summer காலம் இரவு 9 மணிவரை சூரிய வெளிச்சம் தெரியும். அதிகாலை 4.00 மணிக்கு சூரியன் உதித்து விடிந்துவிடும். பகலில் வீட்டை விட்டு வெளியே செல்லும் போது குளிரும். அதற்கான உடையணிந்து தான் செல்வார்கள். எல்லோரும் சப்பாத்து அணிந்துதான் செல்வார்கள். வீதிகளில் எவரும் செருப்புடன் நடப்பதில்லை. Summer காலத்திலும் அடிக்கடி மழை பெய்யும். குளி ராக இருக்கும். Winter காலத்திலும் கடுங் குளிர் என்றும் அக்காலத்தில் அணியும் உடைகள் வேறு என்றும் அறிந்தேன்.

நான் லண்டனில் தங்கியிருந்த இரண்டு நாட்கள் மட்டும் யாழ்ப்பாணத்தைப் போல் வெயில் எறித்தது. இரு வெள்ளையர்கள் Shirt அணியாமல் வீதியில் சென்றதையும் அவதானித்தேன். லண்டனில் வசிப்பவர்கள் எல்லோரும் வெள்ளையர்கள் அல்லர். கணிச மான எண்ணிக்கையான கறுப்பு இனத்தவர் களும் (நீக்றோ) வீதியில் செல்வதை அவ தானித்தேன். கலப்புத் திருமண ஜோடிகளை யும் கண்டேன். Lindon Eye கண்டுகளித்த பின் அருகிலுள்ள உலகப்புகழ் பெற்ற Big Ben கடிகாரம் மற்றும், பாராளுமன்றம் என்ப வற்றையும் தரிசித்தோம். லண்டன் பாராளு மன்றம் தேம்ஸ் நதககரையோரம அமைந் துள்ளது. லண்டன் மாநகரைச் சுற்றி தேம்ஸ் நதி ஓடிக்கொண்டிருக்கின்றது. சில இடங் களில் நதிக்கு மேல் பாலம் போட்டும் சில இடங்களில் நதிக்குக் கீழ் சுரங்கம் அமைத் தும் பிரதான வீதிகளை அமைத்திருக்கின் றார்கள்.

இன்னொரு நாள் மாலை Tower Bridge ஐ பார்க்கச் சென்றோம். Tower Bridge ஓர் இடத்தில் தேம்ஸ் நதியின் குறுக்கே அமைந் திருந்தது. சுமார் 100 m நீளம் இருக்கும். பாலத்தின் தொடக்கத்திலும் முடிவிலும் மிக உயர்மான கோபுரம் அமைந்துள்ளது. கோபு ரங்கள் Church ஒன்றின் முகப்புத் தோற்றம் போல் காட்சியளித்தன. கனரக வாகனங்கள் செல்லும் பாலம் அது. பாலத்தின் கீழ் படகுகள், கப்பல்கள், செல்வதை அவதா னித்தேன். பாலத்தின் நடுவே வீதியில் ஒரு சிறிய பிளவு (இடைவெளி) தெரிந்தது. அது பற்றி விசாரித்தபோது பெரிய கப்பல்கள் பாலத்தின் கீழ் செல்லும்போது பாலம் இரண் டாகப் பிளந்து கப்பல் செல்ல வசதியாக மேலெழும்பும், பின் தானாகவே மூடிக் கொள்ளும் என்று சொன்னார்கள். நதியின் ஒரு கரை காலிமுகக் கடற்கரை போல் இருந் தது. மக்கள் பொழுதுபோக்குவதற்காக அங்கு வருவார்கள். பாலம் மிக அபூர்வ மாகத்தான் திறக்கும் சந்தர்ப்பம் வரும் என்று சொன்னார்கள். நாமும் நதிக்கரையில் அமர்ந்து பொழுது போக்கிக் கொண்டிருந்த போது அருகில் இருந்த வெள்ளைக்கார பெண்மணி "See, the Bridge is going up" என்று சொன்னார். உயரமான கப்பல் சென்ற போது பாலம் திறந்து மூடியதை நாமும் கண்டு களித்தோம்.

Eastham இல் இலங்கைத் தமிழர்கள் பலர் வசிக்கின்றனர். வீதியில் செல்லும் போது தமிழர்கள் தமிழில் கதைத்துக் கொண்டு செல்வதைக் காண முடிந்தது. கொழும்பின் வெள்ளவத்தை போல் இருந்

தது. பிரதான வீதியில் தமிழ்க் கடைகளைப் பார்த்தேன். கடை முகப்புக்களில் எனது வருகையை ஒட்டிய கலையரசி வெளியீட்டு விழா அறிவிப்புக்கள் அழகான வர்ணத் துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டிருப்பதைப் பார்த்தேன்.

கவிதா Eastham இல் உள்ள இரு இந்துக் கோயில்களுக்கு என்னை அழைத்துச் சென்றார். ஒன்று லண்டன் முருகன் கோயில். தேரோடும் வீதியைக் கொண்டது. அருகே கல்யாண மண்டபம் இருந்தது. மண்டபத்தில் மணவறை ஒன்றும் நிரந்தரமாக வைக்கப்பட்டிருந்தது. பக்தர்கள் குளிரைத் தாங்கக்கூடிய ஆடைகளுடன் கோயிலுக்குள் நின்றபோதும் பூசகர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள பூசகர்கள் போன்று உடையணிந்து பூசைகளில் ஈடுபட்டதைக் கண்டேன். Eastham இல் உள்ள இன்னொரு ஆலயம் ஸ்ரீ மஹா லட்சுமி கோயில். அதையும் தரிசித்தோம்.

நான் லண்டனில் தங்கியிருந்தபோது இன்னும் இரண்டு கோயில்களைத் தரிசித்தேன். ஈலிங்கில் உள்ள கனக துர்க்கை அம்மன் கோயிலுக்கு பழைய மாணவன் பாஸ்கரன் அழைத்துச் சென்றார். அதுவும் வருடாந்த மகோற்சவம் நடைபெறும் ஆலயமாகும். தேரோடும் வீதியில்லை. Eastham இல் உள்ள முருகன் கோயிலிலும் சிறியது. ஆனால் பிரசித்தி பெற்றது. தேர் நகர வீதி வழியே உலாவருவதாக சொன்னார்கள். தர்மகர்த்தா சபையில் இலங்கைத் தமிழர்கள் உள்ளனர். தர்மகர்த்தா சபைத் தெரிவுப்போட்டி மிகுந்த ஒன்றென அறிந்தேன். வாக்கச் சீட்டுக்கள் அச்சடித்து ஓர் அரசியல் தேர்தல் போல் நடப்பதாகச் சொன்னார்கள். பாஸ்கரன் செயலாளராக உள்ளார். வாக்குச் சீட்டு ஒன்றையும் காட்டினார். எனக்காக விஷேட பூசை ஒன்றும் நடைபெற்றது. நான் தரிசித்த இந்த மூன்று கோயில்களிலும் பக்தர்கள் எல்லோருக்கும் நிறைய பிரசாதம் வழங்கப்பட்டது. பிளாஸ்டிக் தட்டில் வைத்து பிரசாதம் பரிமாறினார்கள். பாவித்த பின் பிளாஸ்டிக் தட்டை குப்பைத் தொட்டியில போட்டோம். இங்கே வாழையிலையை வீசும் நினைவு ஏற்பட்டது.

நான் தரிசித்த நான்காவது கோயில் ஸ்ரீ சுவாமி நாராயணன் ஹிந்து மந்திர். பிரமாண்டமான கோயில். கட்டடங்கள் வெண்மை நிறமானவை. தாஜ்மஹாலைப் போல் இருக்கும் என்று நினைக்கின்றேன். இது ஹிந்திக்காரர்களால் நிர்வகிக்கப்படுகின்றது.

இங்கே ஐந்தாம் தர புலமைப்பரிசிற் பரீட்சையைப் போல் லண்டனிலும் Eleven plus பரீட்சை உள்ளது. அப்பரீட்சையில் உயர்புள்ளி பெறும் மாணவர்கள்தான் பிரபல பாடசாலைகளில் அனுமதி பெறமுடியும். Eleven Plus பரீட்சைக்கு தயார் செய்வதற்கு பிள்ளைகள் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்வார்கள். என்னுடைய உறவினர் ஒருவர் தன்னுடைய பிள்ளையை தனியார் நிறுவனம் ஒன்றுக்கு அனுமதிக்கச் செல்லும் போது நானும் அவருடன் சென்றேன்.

பழைய மாணவர் சங்கத் தலைவர் திருக்கேதீஸ்வரனுடன் லண்டனில் உயர்கல்வியைப் பற்றி கலந்துரையாடினேன். இலங்கையில் பெருபாலும் கல்விப் பெறுபேறுகளை மட்டும் அவதானித்து பல்கலைக்கழக அனுமதி வழங்கப்படுகின்றது. லண்டனில் உயர்தரத்தில் சித்தியடைந்தவர்கள் தாமாகவே பல்வேறு பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். 3A கல்விப் பெறுபேற்றுடன் அனுமதி பெறலாம். 2AB பெறுபவர் கல்லூரியின் இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் தராதரப் பத்திரம் வைத்திருந்தால் அல்லது கல்லூரிக்கு வெளியே ஏதாவது ஒரு துறைசார்ந்த பத்திரம் வைத்திருந்தால் அவர்களுக்கும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்கும். எங்கள் கலைகளான கர்நாடக சங்கீதம், பரதநாட்டியம் போன்றவற்றில்

தராதரப்பத்திரம் வைத்திருப்பவர்களுக்கு புள்ளிகள் வழங்கப்படும். மற்றும் உயர்தரத் தில் சித்தியடைந்தவர்கள் எல்லாருக்கும் அவர்களுடைய பெறுபேறுகளுக்கு ஏற்ப ஒரு பல்கலைக்கழகத்திற்கு அனுமதி கிடைக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட பல்கலைக்கழகத்தில் அனுமதி கிடைத்தால் விரும்பிய பல்கலைக் கழகத்தைத் தெரிவுசெய்யலாம். இன்னொரு விடயம் என்னவெனில் மருத்துவத்துறை யிலும் பார்க்க பல் மருத்துவத்துறைக்கு மகத் துவம் அதிகம் என்றும் திருக்கேதீஸ்வரன் கூறினார். உயர்தரத்தில் பௌதிகவியல் பாடம் கற்க மாணவர்கள் கஸ்டப்படு கிறார்கள் என்றும் கூறினார்.

ஒரு நாள் தர்மபாலனுடன் Madam Tussade பார்க்கச் சென்றேன். அதனை Wax Museum என்றும் சொல்வார்கள். உலகில் பல்வேறு துறைகளிலும் பிரபலமானவர் களின் உருவங்களை மெழுகில் வடித்திருந் தார்கள். அவர்களுடைய அதே உயரத்தில் செய்திருந்தார்கள். உண்மையான ஆடை களை அணிவித்திருந்தார்கள். உயிர் உள்ள வர்கள் நிற்பதுபோன்று அவை தோன்றுகின் றன. மிகவும் தத்ரூபமாக இருந்தது. ஒரு வரைத் தொட்டுப்பார்த்து தர்மபாலன் ஏமாற் றத்துக்கு உள்ளானார். பிரிட்டிஷ் மகாராணி, பிலிப் கோமகன் ஒன்றாகவும் இளவரசர்கள் சாள்ஸ், வில்லியம், ஹறி ஒன்றாகவும் டயானா வைத் தனியாகவும் அமைத்துள்ளனர். மற்றும் நாம் பார்த்ததில் இந்திராகாந்தி, பெனாசிர் பூட்டோ, மகாத்மாகாந்தி, ஹாருக்கான், ஐஸ்வர்யாராய், சதாம்ஹுசெய்ன், யாசிர் அரபாத், பாப்பரசர் போன்றோர் குறிப்பிடக் கூடியவர்கள். சிலருக்கு பக்கத்தில் நின்று புகைப்படம் எடுத்துக்கொண்டோம்.

அதைத் தவிர பயங்கரமான காட்சி களைக் கொண்ட வெளிச்சம் குறைவான அறைகளுக்கூடாகவும் விரும்பியவர்கள் செல்லலாம். கர்ப்பிணிகள், குழந்தைகள், இருதய வியாதி உள்ளவர்கள் செல்ல வேண் டாம் என்றும் அறிவித்தல் போடப்பட்டி ருந்தது. உள்ளே செல்பவர்களுக்கு ஆயுதங் களை கையில் வைத்துக்கொண்டு பயங்கர மான சத்தத்துடன் கறுப்பு நிற ஆடைகளுடன் உங்களைத் தாக்க வருவதுபோல் சிலர் நெருங்குவார்கள். அவர்கள் உங்களை ஒன் றும் செய்யமாட்டார்கள். நீங்களும் அவர் களுக்கு ஒன்றும் செய்யவேண்டாம் என்று அறிவிப்புத் தந்தார்கள். நாங்கள் உள்ளே சென்று அந்த அனுபவத்தைப் பெற்றுக் கொண்டோம்.

Madam Tussade இல் இறுதிப் பகுதி யில் Mini taxiகள் தொடர்ந்து சென்று கொண் டிருக்கும். அவற்றில் இருவர் இருவராக அமர்ந்து பிரிட்டிஷாரின் பழைய வரலாற்றுக் காட்சிகளை வர்ணக் குமிழ்களின் வெளிச் சத்தில் இனிய ஓசைகளுடன் பார்த்தோம். ஆனந்த வெள்ளத்தில் மிதந்து செல்வது போன்று ஒரு அனுபவம் அது.

மண்டப வாசலிலே நிறைகுடம், குத்து விளக்கு வைக்கப்பட்டிருந்தது. தலைவர் திருக்கேதீஸ்வரன், செயலாளர் செந்தில் நாதன் உள்ளிட்டோர் வாயிலில் எம்மை வர வேற்று உள்ளே அழைத்துச் சென்றனர். மாலை 7.00 மணிக்கு விழா ஆரம்பமானது. மண்டபம் பழைய மாணவர்கள் மற்றும் குடும் பத்தினரால் நிறைந்திருந்தது. சுமார் 500 பேர் வருகை தந்திருந்தனர்.

என் மாணவர்கள் என்னை அழைத்துக் கௌரவித்த இனிய நினைவுகளை என் மன தில் சுமந்துகொண்டு யூலை மாதம் 10 ஆம் திகதி நாடு திரும்பினேன்.

# எனது சேவைக் காலத்தில் நான் கண்ட அதிபர்கள்

✍ செல்வி த. செல்லத்துரை
இசை ஆசிரியர்,
சங்கீதபூஷணம்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாணத்தின் கல்விப் பாரம்பரியத்தில் கலங்கரை விளக்கமென விளங்கும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஒரு நூற்றாண்டைக் கடந்து அறிவொளி வீசிப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. தலைமுறை தலைமுறையாகப் பல்வேறு ஆசிரியர்கள், அதிபர்களின் வழிநடத்துதலில் பெறுமதி வாய்ந்த அறிவு முத்துக்களைப் பல்வேறு துறைகளிற்கும் வழங்கிவரும் பெருமையைக் கொண்டது இக்கல்லூரி. 1974 இல் இந்து அன்னையோடு ஒரு சங்கீத ஆசிரியராக அதுவும் பெண் ஆசிரியராக இணைந்துகொண்ட நான் பல அதிபர்களின் ஆளுகையின் கீழ் என் போதனையை மேற்கொண்டிருந்தேன். இன்றும் இந்துக் கல்லூரி ஆசிரியையாக சேவையாற்றிக் கொண்டிருக்கும் பேறுபெற்ற நான் எனது சேவைக்காலத்தில் என்னை முகாமைசெய்து வழிப்படுத்திய அதிபர்களை இக்கட்டுரையினூடாக நினைவு கூருகின்றேன்.

நான் 1974 இல் இக்கல்லூரிக்கு ஆசிரியராக நியமிக்கப்பட்டபோது அதிபராக இருந்தவர் அமரர் பொ. சபாலிங்கம் அவர்கள். அப்பொழுது நானும் அமரர் செல்வி சின்னத்தம்பி அவர்களுமே பெண் ஆசிரியர்கள். மாணவர்களுடன் கண்டிப்பாக இருக்க வேண்டும் என்ற சிந்தனையை எமக்கு ஊட்டியவர் அதிபர் சபாலிங்கம் அவர்களே. இன்றும் அவர் காட்டிய வழியிலேயே மாணவர்களை கட்டுப்பாட்டுடன் வழிநடத்தி வருகின்றேன். அதிபர் சபாலிங்கம் அவர்களது நடை, உடை, பழகும் முறை எல்லாமே அவரிடம் மரியாதையையும் பயபக்தியையும் யாருக்கும் ஏற்படுத்தும். எந்தத் தரத்திலுள்ள கல்வி அதிகாரிகளையும் தற்துணிவுடன் எதிர் நோக்கும் ஆளுமைமிக்கவர். பலதுறைகளிலும் சிறந்து விளங்கியவர். இவரது மகனான Dr. ஜோதிலிங்கம் இலண்டன் மாநகரில் பழைய மாணவ சங்கத் தலைவராக கல்லூரிக்குப் பல வழிகளில் சேவையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. சபாலிங்கம் அதிபரின் காலத்தில் விடுதி மாணவர்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் அதிகாலையில் நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு சென்று தரிசித்துவரும் காட்சி இன்றும் என் கண்களிலே நிழலாடுகின்றது.

சபாலிங்கத்திற்குப்பின் அதிபர் கதிரையினை அலங்கரித்தவர் அமரர் P.S குமாரசாமி அவர்கள். இவர் சிறந்த ஒரு வழிகாட்டியாகத் திகழ்ந்தவர். வேண்டிய பொழுதுகளில் தண்டனை வழங்கத் தவறமாட்டார். கையில் பிரம்புடன் இவர் நடந்துவரும் அழகு தனித்துவமானது. இவரது காலத்திலே கல்லூரி மாணவர்களின் திருக்கேதீஸ்வரத் திருவிழாவிற்கு வருடந்தோறும் அழைத்துச் செல்லப்படுவார்கள். ஒருமுறை திருவிழாவின் போது பாலமுரளி என்னும் மாணவனுக்கு பாம்பு கடித்துவிட்டது. அந்த மாணவனை மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு சென்று ஒரு

வாரகாலமாக வைத்திருந்து ஒரு தந்தையைப் போல கவனித்து குணப்படுத்தி யாழ்ப்பாணம் அழைத்து வந்தார். ஏனையவர்களை அனுப்பிவிட்டு தான் மட்டும் அங்கே தங்கி அந்த மாணவனை குணப்படுத்திய சம்பவம் அவரது மனிதாபிமானத்தினை எடுத்துக் காட்டுகிறது. சிறந்த விளையாட்டு வீரரான P.S குமாரசாமி அவர்கள் விளையாட்டுத் துறை வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்ததை நான் அறிவேன்.

அமரர் P.S குமாரசாமி அதிபராக இருந்த காலத்திலேயே கீழைத்தேய பாண்ட் வாத்தியம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 1982 இல் இல்ல விளையாட்டுப் போட்டியிலே இவ்வாத்தியக்குழுவிலே வயலின் வாசித்த எனது மாணவன் ரவீந்திரன் தற்போது **"வாழ் வகத்"**திலே அதிபராக இருப்பதுடன் யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளராகவும் சேவையாற்றுகிறார். அதிபர் P.S குமாரசாமி தனக்குப் பக்கபலமாக பிரதி உபஅதிபர்களை, ஆசிரியர்களை என்றும் இணைத்து வைத்திருக்கும் திறமை கொண்டவர். இவரது காலப்பகுதியில் இந்துக் கல்லூரி பல சாதனைகளைப் புரிந்துள்ளது. இவரது பிரியாவிடை வாழை, தோரணம், மங்கலகும்பங்கள் என்பனவற்றுடன் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. P. S குமாரசாமி அவர்கள் அமரரான போது இந்துக் கல்லூரிச் சமூகமே கண்ணீர் விட்டுக் கலங்கியது. இறுதிக்கிரியைகளை கல்லூரிச் சமூகம் சிறப்பாக நடாத்தியது. அவரது இறுதி ஊர்வலத்தில் கலந்து சுடுகாடு வரை சென்று வழியனுப்பிய சம்பவம் இன்றும் எம்மனத்திரையில் மறையாத காட்சியாக நிறைந்துள்ளது.

P.S குமாரசாமியின் மறைவுக்குப் பின்னர் திரு. எஸ். பொன்னம்பலம் அவர்கள் அதிபராக பதவி ஏற்றார். புன்முறுவல், சாந்தம் என்பன தவழுகின்ற அவருடைய முகம் இன்றும் மனக்கண்முன் நிற்கின்றது. இவரது காலத்திலேயே மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

உணவுத்திட்டத்தினைப் பயனுள்ள வழியில் நடைமுறைப்படுத்த இவரது துணைவியாரான வைத்திய கலாநிதி பெரிதும் துணை நின்றதும் பாராட்டத்தக்கது. இவரது காலத்தில் புதிய கட்டடங்கள் பல எழுந்தன. வகுப்பறைகள் விரிவடைந்தன. பொன்னம்பலம் அதிபர் அவர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்ல வேண்டியநிலை ஏற்பட்டது. தற்போது இவர் தனது குடும்பத்துடன் அவுஸ்திரேயாவில் வாழ்ந்து வருகிறார்.

அடுத்ததாக இந்து அன்னையின் சிறப்பை மென்மேலும் ஓங்கச்செய்த அமரர் M.S. குகதாசன் அவர்களின் அதிபர் பதவிக் காலம். சிறந்த உயிரியல் ஆசிரியரான குகதாசன் அவர்கள் சிறிதுகாலம் அதிபராகக் கடமையாற்றினாலும் சேவையை நிறைவாகச் செய்தவர். குமாரசாமி மண்டபத்தை அலங்கரிக்கும் முன்னாள் அதிபர்களின் படங்கள் இவர் காலத்திலேயே நிரந்தரமாக சுவரிலே பொருத்தப்பட்டன. சிறந்த ஒரு காரியத்தை நிறைவேற்றிய பெருமை இவரையே சார்ந்தது.

1991 இல் அதிபராகப் பொறுப்பேற்றவர் திரு. அ. பஞ்சலிங்கம் அவர்கள். இவரது காலப்பகுதி இந்துக் கல்லூரிக்கு பல புதிய மாற்றங்களை ஏற்படுத்தியது. நூலகப் புனரமைப்பு, நிர்வாகப் பரவலாக்கல் போன்ற செயற்பாடுகள் இவரை உயர்த்திக்காட்டியது. மாணவர்களை தர வேறுபாடு இன்றி கற்கின்ற நிலையை ஏற்படுத்தினார் ஆசிரியர் இல்லாமல் ஒரு வகுப்பறையும் இருக்கக் கூடாது என்பது இவரது நியதி. எனவே தானும் சிலவேளைகளில் வகுப்பறைகளில் நிற்பார். மாணவர்களுக்குத் தரமான கல்வி கிடைக்கவேண்டும் என்பதில் மிகவும் அக்கறை கொண்டிருந்தார். மாணவ நலனுக்காக எதையும் துணிந்து செய்வார். மாணவர்களின் குறைநிறைகளை அறிந்து பொருத்தமான வகையில் அவர்களுக்கு எல்லா வசதிகளை

யும் ஏற்படுத்தினார். பாடங்களுக்கான ஆசிரிய வளத்தினை தன்னுடைய முயற்சியினால் பெருக்கியவர். இன்றும் இவர் கல்விப் புலத்திலே சிறந்த கல்வியியலாளராகவும், சமூக சேவையாளராகவும் செயற்பட்டு வருவது பெருமைக்குரிய விடயமாகும்.

இந்துக் கல்லூரி இடப்பெயர்வுக் காலத்திலே சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலே இயங்கியது. அந்த இக்கட்டான வேளையிலே அதிபராகச் சேவை செய்தவர் சுடர் மகேந்திரன் அவர்கள். பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் நிர்வாக விடயங்களைச் சிறந்த முறையில் கையாண்டவர். நல்ல ஆளுமைகொண்டவர். இன்று கனடாவிலே இவர் இருக்கின்றார்.

யாழ்ப்பாணத்தில் மீண்டும் இந்துக் கல்லூரி கல்விச் செயற்பாடுகளை ஆரம்பித்த பின்பு 1997 இல் நெருக்கடியான காலப் பகுதியில் திரு. அ. சிறிக்குமரன் பதவி ஏற்றார். பல்வேறு தேவைகள், குறைபாடுகள் அந் நேரத்தில் கல்லூரிக்கு இருந்தன. எந்த விடயத்தையும் சட்டதிட்டங்களுக்கு அமைவாகவே இவர் செயற்படுத்துவார். இதனால் இவர் ஒரு இறுக்கமான நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் கல்லூரியை நடாத்தி வந்தார். கல்வி அமைச்சின் புலமைப்பரிசில் திட்டத்தினால் வெளிநாடுகளில் பல்வேறு பயிற்சிகளைப் பெற்றார். க.பொ.த.உயர்தரப் பிரிவில் கணிதத்தில் இலங்கையில் 1 ஆம் இடம் இந்துக் கல்லூரி மாணவன் பெற்றுக்கொண்டமை இவரது காலப்பகுதியிலேயே என்பது மிகவும் பெருமைக்குரிய விடயம். பல்வேறு சிறப்புக்களையும், பாராட்டுக்களையும் எமது கல்லூரி இவ்வேளையில் பெற்றுக் கொண்டது. கொழும்பு பழைய மாணவர் சங்கத்துடன் நெருக்கமான தொடர்பை ஏற்படுத்தி கல்லூரிக்கான வளங்களைப் பெரிதும் பெற்றுக்கொடுத்தவர்.

தற்போதைய அதிபர் திரு. வீ. கணேசராசா அவர்கள் வவுனியாவில் கோட்டக் கல்விப்பணிப்பாளராக இருந்து எமது கல்லூரிக்காக இடமாற்றம் பெற்றுவந்தவர். அவரது குடும்பம் வவுனியாவில் இருப்பதனால் முழுநேரமும் தன்னை கல்லூரியுடன் இணைத்துக்கொண்டு சேவை புரிந்து வருகிறார். ஆசிரியர்களுக்கு எவ்விதமான குறைகள் ஏற்படினும் அந்த இடத்திலேயே அவற்றை சுமுகமாக தீர்க்கின்ற திறமை இவரிடம் உண்டு. எல்லாரோடும் கலகலப்பாகப் பேசும் சுபாவத்தினால் எந்தப்பிரச்சனைகளுக்கும் சுலபமாகத் தீர்வு கண்டுவிடுவார். மாணவர்களை வேண்டியபோது கண்டித்தும். சமாளித்தும், புத்திமதி கூறியும் வழிநடத்துவார். மாணவர்களுக்கு மதியஉணவு வழங்கும் திட்டத்தை மிகவும் சிறப்பாக நடாத்தி வருகிறார். எல்லா மாணவர்களும் தரமான உணவை உண்டு பசியாற வேண்டும் என்று சொல்லுவார். நீண்டகாலமாக பூர்த்தி செய்யப்படாமல் இருந்த மூன்று மாடிகள் கொண்ட கட்டடத் தொகுதியினைத் தன்னுடைய வினைத்திறனிலால் முழுமையாக்கி திறந்து வைத்த பெருமையைப் பெற்றவர். பல்வேறு வேலைத்திட்டங்களைத் தற்போதும் முன்னெடுத்துச் செல்கின்றார். இவரது காலப் பகுதியில் இந்துக் கல்லூரி மேலும் பல சிறப்புகளைப்பெற்று உயரும் என்பது எல்லோரினதும் நம்பிக்கையாகும்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி எத்தனையோ திறன் வாய்ந்த, ஆளுமைமிக்க, அர்ப்பணிப்போடு சேவையாற்றிய அதிபர்களின் செயற்பாடுகளினால் இன்னும் தனிப் பெருங்கலையகமாக தரணி போற்ற நிமிர்ந்து நிற்கின்றது. எனது சேவைக்காலத்தில் நான் கண்டு உணர்ந்த சில அதிபர்களின் செயற்பாடுகளை இக்கட்டுரை மூலம் எடுத்துக் காட்டி உள்ளேன்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இன்றும் தலைசிறந்த அதிபர்களின் முகாமையின் கீழ் பல்வேறு சிறப்புகளைப் பெற்று பாரினில் பெரும் புகழுடன் விளங்குவதற்கு ஞான வைரவப் பெருமான் நல்லருளினை என்றும் வழங்கி வருவார் என்ற நம்பிக்கையோடு இக்கட்டுரையினை நிறைவு செய்கின்றேன்.

## கருமத்தின் வழியே மறுபிறப்பாகும்

✍ பொ. ஞானதேசிகன்
(பகுதித் தலைவர்)

இயற்கை காட்டும் கடமையைப் பாரீர்
இயல்பாய் எமக்கு உதவுதல் பாரீர்
செயல் பல புரிந்திட வழிவகை செய்வீர்
கடமையைச் செய்து மகிழ்வாய் இருப்பீர்
கடமையைச் செய்து மகிழ்வாய் வாழ்வீர்

பெற்றோரைப் பேணலும் மற்றோரை மதித்தலும்
உற்றார்க்கு உதவுதலும் உடமையைப் பேணலும்
நற்றாள் தொழுதலும் நல்வழி நடத்தலும்
சொற்படி நடத்தலும் மாணவர் தம் கடமை

சான்றோர் ஆக்குதல் பெற்றோர் கடனே
ஈன்றாள் கடமை இனியவராக்குதல்
நன்றாய் வாழ வழி செய்வார் அவரே
மன்று புகழ் பெறச் செய்பவர் பெற்றோர்

அரிதாம் மானிடப் பிறவி தன்னை
பெரிதாய் எண்ணி மாணவர் செயற்பட
விரிந்த நல்லறிவை தினம் தினம் கொடுத்து
பெரியோன் ஆக்குதல் ஆசான் கடமை

மாரியைத் தொடர்ந்தொரு வசந்தம் வருமே
கடமையைத் தொடர்ந்து உரிமையும் வருமே
காந்தி காட்டிய கடமையைப் பாரீர்
மொழியினைத் தேசத்தைக் காத்திடல் கடனே

ஒன்றாய்ச் சேர்ந்து நாம் நற்பணி புரிந்தால்
நன்றாய் வாழலாம் எம் மானிலத்தில்
முன்னோர் செய்த கடமையால் நாமும்
இன்னோர் அன்ன பயன்களைப் பெற்றோம்

ஆதலால் நாமும் கடமையைச் செய்வோம்
பாதகம் வரினும் கடமையைக் கைவிடோம்
மாதவன் ஓதிய கடமையும் அதுவே

கருமத்தின் வழியே மறுபிறப்பாகும்
கருமத்தின் வழியே மறுபிறப்பாகும்
கருமத்தின் வழியே மறுபிறப்பாகும்

# திருக்கோயில் உற்சவமும் தத்துவார்த்தப் பின்னணியும்

இ. செல்வராசா
ஆசிரியர்

ஒரு மனிதனுடைய உடல் அமைப்பைக் கொண்டதாக திருக்கோயில்கள் அமைந்துள்ளன. குண்டலனி சக்தி உறங்கிக் கிடக்கும் மூலாதாரம் கொடிமரமாகும். கொடி மரத்தில் உள்ள முப்பத்திரண்டு வளையங்களும் முள்ளந் தண்டிலுள்ள முப்பத்திரண்டு எலும்புகளையும் கொடிமரக்கயிறுகள் இடை கலை, பிங்கலை என்னும் நாடிகளையும் குறிக்கின்றன.

சைவ சித்தாந்தம் முடிந்த முடிவாகக் கூறும் முப்பொருள் விளக்கத்தை கொடிமரம், கொடிமரச்சீலை, கொடிமரக்கயிறு உணர்த்தி நிற்கின்றது. கொடிமரம் பதியையும், கொடிச் சீலை ஆன்மாவையும், கொடிமரக்கயிறு பாசத்தினையும் குறித்து நிற்கின்றன.

திருக்கோயில்களில் நடைபெறும் கொடியேற்றத்தினை நன்கு அவதானித்தால் கொடிச்சீலை கொடிமரத்தையும் கொடிக் கயிற்றையும் தொடும்படியாக காணப்படுகின்றது: அதாவது ஆன்மா முத்திநிலையில் பதியை சேரக் கூடியதாகவும் முத்தியடையாத நிலையில் பாசத்தையும் சேரக் கூடியதாகவும் காணப்படுகின்றது என்பதை தத்ரூபமாக விளக்குகின்றது. ஆனால் கொடிமரமாகிய இறைவன் ஒன்றையும் சாராமல் தனித்தே நிற்பார். ஆன்மா முத்திநிலையில் இறைவனை அடையமுடியும் என்பதை விளக்குவதற்காக ஆன்மாவாகிய கொடிச் சீலை இறைவனாகிய கொடிமரத்தை சுற்றிய படியே காணப்படுகின்றது. அடுத்து பாசமாகிய கொடிக்கயிறு கொடிச்சீலையை மட்டும் சுற்றி வருகின்றது. ஆன்மா முத்தியடையாத நிலையில் பாசத்தை சேர்ந்திருக்கும் என்பதை உணர்த்துவதற்காகவும், ஆன்மாவாகிய கொடிச்சீலை பாசமாகிய கயிற்றைச் சுற்றியபடி காணப்படுகின்றது. கொடிமரத்தைத் தொடும்படியாக கயிறு அமையமாட்டாது. அதன் விளக்கம் பதி பாசத்தை சேரமாட்டாது என்பதாகும்.

திருவருட்பயனில் உமாபதிசிவாச்சாரியார் இதனையே பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**"சத்தசத்தைச் சாரா (து) அசத்தறியா (து) அக்கணிவை**
**உய்த்த சதசத்தாம் முயிர்."**

இதன் விளக்கம் சத்தாகிய இறைவன் அசத்தாகிய பாசத்தைச் சாரமாட்டார். அசத்தாகிய பாசம் ஒன்றையும் அறியமாட்டாது. சத்தாகிய இறைவனையும் அசத்தாகிய பாசத்தையும் சாரக்கூடிய தன்மை ஆன்மாவுக்கு இருப்பதால் சத்து+ அசத்து = சதசத்து என ஆன்மா அழைக்கப்படுகின்றது.

கொடியேற்றம் ஐந்தொழில்களில் படைத்தலை குறித்து நிற்கின்றது.

இரதோற்சவம்! மகோற்சவ காலங்களில் ஆலயங்களில் இடம்பெறும் முக்கிய உற்சவமானது இரதோற்சவமாகும். இவ்வுற்சவமானது இடம்பெறுவதற்கு காரணம் என்ன

வெனில் இறைவன் தனது ஐந்தொழில்களில் ஒன்றான அழித்தல்த் தொழிலை மேற்கொள் கின்ற தன்மையினை எடுத்துக்காட்டுவதற் காகவேயாகும். அதாவது இந்த உலகில் ஆன்மாக்கள் படைக்கப்பட்டு வாழ்கின்ற காலங்களில் இறுதி இலட்சியமாகிய முத்தி என்ற தன்மையினை இவ்வான்மாக்கள் அடைய வேண்டுமாயின் மலபந்தங்களில் இருந்து விடுபட வேண்டும்.

அவ்வாறு ஆன்மாக்களை பீடித்துள்ள மலங்களை செயல் இழக்கச் செய்கின்ற தத் துவத்தை எடுத்துக்காட்டுவதற்காகவே (இர தோற்சவம்) தேர்த்திருவிழா ஆனது ஆலயங் களில் இடம்பெறுகின்றன. இத்தேர்த்திரு விழாவின் போது இறைவன் ஆவேசத்துடன் இரதத்தில் எழுந்தமுளி பவனிவரும் போது அக்காட்சியினை அடியார்கள் கண்டு களிக் கின்றபோது அவர்களது உள்ளமானது தூய்மைத் தன்மை அடைகின்றது.

### தீர்த்த உற்சவம்:

ஆலயங்களில் மகோற்சவ காலங்களில் இறுதிநாளில் இடம்பெறுவது தீர்த்த உற்சவ மாகும். இந்த உற்சவமானது இறைவனது ஐந்தொழில்களில் இறுதியாகிய அருள்லைக் குறிப்பதாக அமைகின்றது. அருளல் என்பது பரிபக்குவம் வாய்ந்த ஆன்மாக்களுக்கு இறைவன் பரமுத்தி கொடுத்தல் ஆகும்.

ஆன்மாகள் முத்தி பெறுவதற்கு குரு லிங்க சங்கம சேவை முக்கியமானதாகும். இறைவனுக்குச் செய்யும் தீர்த்தத் திருவிழா இலிங்க சேவையைக் குறிக்கும்.

## பாடசாலைகளில் நூலகங்களின் பங்கு

✍ செ. தேவறஞ்சன்
நூலகப் பொறுப்பாளர்

நூலகத்தினிலே வாசகர் (Readers), ஆவணம் (Collections), நூலக உத்தியோ கஸ்தர்கள் (Staff) என்ற ஆகிய மூன்று காரணிகளும் மிகவும் முக்கியமானவை. நூலகத்தின் பிதாவாகிய கலாநிதி S.R ரங்கநாதன் அவர்கள் நூலக விதியாக ஐந்து அம்சங்களை முன் வைத்துள்ளார். அவை யாவன:-

1. நூல்கள் பாவனைக்கே.
   (Books are for use)
2. ஒவ்வொரு வாசகரும் ஒவ்வொரு நூல் உடையவன்.
   (Every reader has his / her book)
3. ஒவ்வொரு நூலும் ஒரு வாசகனுடையது.
   (Every book its readers)
4. வாசகர் நேரத்தைப் பேணுக.
   (Save the time of readers)
5. நூலகம் ஒரு வளரும் ஸ்தாபனம்.
   (Library is a growing organization)

இவ் நூலக விதிகளை கருத்தில் கொண்டு ஒவ்வொரு நூலக உத்தியோகஸ் தரும் வாசகரின் அறிவுப் பசியினைப் போக்க முயற்சிக்கப்பட வேண்டும். மாண வன் ஒருவன் தன் கல்வியினையும், பொது அறிவினையும் வளர்த்துக் கொள்வதற்கு தேடல் மிகவும் முக்கியமான விடயமாகும். தேடல் மூலம் தனது அறிவுப் பசியினை நிவர்த்தி செய்து கொண்டிருக்கும் மாணவன் எல்லா நூல்களையும் விலைகொடுத்து வாங் கிப்படிப்பது என்றால் எட்டாப் பழத்திற்கு கொட்டாவி விட்டகதையாகிவிடும். அதனால் ஒருவன் நூலகங்கள் மூலம் சிறிது பொருட் செலவு இன்றி அறிவுப் பசியை நீக்கலாம். இக்காலக் கல்வியை உலகின் மூலை முடுக் கெங்கும் பரவச் செய்வதில் நூலகங்களே முக்கிய பங்காற்றுகின்றன.

நூலகங்களானது மாணவர்களின் வகுப்பறை எல்லையைக் கடந்து பரந்து விரிந்து அறிவினை வளர்ப்பதற்கு இட்டுச்

செல்கின்றன. நூலகங்கள் மூலம் வழங்கும் அறிவுச் சுடரினை மாணவர்கள் பெறுவதால் சுயமாக அறிவு தேடும் ஆற்றலினைப் பெறு கின்றனர். மாணவர்களுக்கு அறிவினை வழங் கும் சாதனங்களில் நூலகத்தினை மட்டும் குறிப்பிட முடியாது.

நூலகத்தில் கடமைபுரியும் நூலக உத்தியோகஸ்தர்களினது பங்கும் இன்றி யமையாதது. பாடசாலை நூலகத்தினை எடுத்து நோக்கும் போது ஆசிரிய நூலகர், நூலகர், நூலக உதவியாளர், நூலகப் பணி யாளர் எனப் பல தரப்பட்ட உத்தியோகஸ் தர்கள் கடமை புரிகின்றனர். அவர்கள் மூலம் நூலகங்களை மத்திய நூலகமாக மட்டும் வைத்திராது, வகுப்பு மட்டத்திலும் நூலகங் களைக் கொண்டு செல்வார்களாயின் சகல மாணவர்களையும் தேடலில் ஈடுபடுத்த முடியும் என்றால் அது மிகையாகாது.

நூலகமானது பல்வேறு நோக்கங்களை யும், குறிக்கோள்களையும் மையமாக வைத்து இயங்குகின்றன. அந்த வகையின் கீழ் பாடசாலை நூலகத்தின் நோக்கங்கள் சில:-

1. பாடசாலை மாணவர்களின் வாசிப்புப் பழக் கத்தை உருவாக்குதல்.
2. மாணவனின் சுயமுயற்சிக்கு ஊக்கமளித்தல்.
3. மாணவனின் ஆக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் ஆதரவு வழங்கல்.
4. இளம் வயதில் மாணவர்களின் கற்பனை வளர்த்தையும், திறமைகளையும் ஊக்குவித்தல்.
5. கலை, கலாச்சாரம் தொடர்பான விடயங்களை யும் விளக்கங்களையும் பெற்றுக்கொள்வதில் வசதியளித்தல் போன்ற விடயங்களில் நூலகம் கூடிய கவனம் செலுத்தல் வேண்டும்.

இன்றைய விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியில் இணையம், மின்னஞ்சல் போன்ற வசதிகள் இருந்தும் நூல்களின் அறி வூட்டல் ஆற்றல் வளர்ந்து கொண்டேயுள்ளது. நூல்களுக்கு இணையான சாதனம் வேறு ஒன்றும் இல்லை. மாணவர்களிடையே வாசிக் கும் பழக்கம் இயல்பாகவே இருப்பதில்லை அவர்களுக்கு பூரண வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்தல் வேண்டும். ஒரு மாணவனின் வாசிப்புப் பழக்கத்திற்கு பெற்றோர், ஆசிரி யர்கள், நூலக உத்தியோகஸ்தர்கள் எல்லோ ருடைய ஒத்துழைப்பும் அவசியமாகின்றது.

நூலகங்களானது இன்றைய காலத்தில் மழைக்காலப் புற்றீசல்கள் போல பல்கிப் பெருகி மலைபோல குவிந்து கிடக்கின்றன. இன்றைய நூற்றாண்டில் சகல நூல்களை யும் வாங்கிக்கொடுத்து மாணவனின் வாசிப் புத் திறனை வளர்ப்பது இயலாத காரியமா கும். விலை மிகுந்த நூல்களை வாங்கி மாணவர்களுக்குக் கொடுப்பது முடியாத காரியம். இதனால் மாணவர்கள் பாடசாலை நூலகங்களைப் பாவிப்பது முக்கியமாகின் றது. நாம் எப்போது வேண்டுமானாலும் கற்க லாம். ஆனால் இளமைப் பருவத்தில் கற்பதே சிறந்தது. **"இளமையில் கல்வி சிலையில் எழுத்து"** என்ற பழமொழி இக்கருத்தினையே பறைசாற்றுகின்றது. நாம் ஒரு ஜென்மத்தில் கற்கும் கல்வியானது இம்மைக்கும் மட்டு மல்லாது மறுமைக்கும் உதவும் இதனையே பொய்யாமொழிப்புலவன் திருவள்ளுவரின்

**"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப் புடைத்து'**

என்னும் குறள் நினைவூட்டுகின்றது. இதனா லேயே மாணவர்களாகிய நாம் சிறு வயதி னிலே பல்வேறுபட்ட பரந்து விரிந்த அறிவி னைப் பெறவேண்டும்.

**மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்**
**மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்**
**மன்னனுக்கு தன்தேச மல்லாற் சிறப்பில்லை**
**கற்றோனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு**



# சொல்லும் செயலும் என நடமாடிய தலைவர், ஓய்வுபெற்ற அதிபர்

✍ சி. ரகுபதி

இந்துக் கல்லூரியின் வரலாற்றிலே கல்லூரிக்குப் பெருமை சேர்ந்துத் தந்த அதிபர்கள் வரிசையில் ஒருவராக விளங்குபவர் திரு. அ. சிறிக்குமாரன் என்றால் மிகையாகாது.

யாழ்ப்பாணம் இந்து கல்லூரியின் மாணவனாக, விடுதிப் பொறுப்பாசிரியராக, அதிபராக பல்வேறு பரிமாணங்களில் கல்லூரியோடு இணைந்தவராக இவர் விளங்கினார். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவர் இலட்சணங்களாக மிளிர்ந்தன. எளிமையான தோற்றத்துடன் காணப்பட்ட இவர் சமூகத்தின் மத்தியிலே சொல்லிலும் செயலிலும் உறுதியாக நின்ற பண்பு போற்றுதற்குரியது ஆகும்.

மாணவரோ பெற்றோரோ ஆசிரியரோ யாராக இருப்பினும் அவர்களது குறைகளை செவிமடுத்து அதனைத் தீர்ப்பதில் முன்னின்று உழைத்தவர். இவர் அதிபராக இருந்த காலப்பகுதியில் 23 மாணவர்கள் உயர்தரப் பரீட்சையில் அனைத்து பாடங்களிலும் விசேட சித்தி பெற்றனர். இது இன்று வரை கல்லூரியின் வரலாற்றுச் சாதனையாக விளங்குகின்றது.

இவர் தனக்கென வாழா பிறர்க்கென வாழும் உத்தமர். இவர் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஆத்ம நண்பனாக, ஆசானாக, தந்தையாக இருந்து நிர்வாகத்தை சிறப்புற நடத்தியவர். நல்ல உள்ளம் நிச்சயம் வாழ்த்தப்பட வேண்டும். ஆகவே அவர் ஓய்வுகாலத்தில் இறை ஆசியோடு வாழ வேண்டும்.

நாம் இறைவனிடத்து அன்பு செய்யின், அவன் படைப்புகளிடத்து அன்பு காட்டினால் அவன் எம்மிடத்தில் அருள்காட்டுவான் என்ற அசையாத நம்பிக்கை பண்டைத் தமிழரிடையே உரம் பெற்றிருந்திருக்கிறது. இந்த உரமே தமிழர் வாழ்வை வளம் பெறச் செய்து கொண்டிருக்கிறது.

- இலக்கிய கலாநிதி க. சிவராமலிங்கம்பிள்ளை
"இந்துப் பண்பாட்டியல்"



# புண்ணியலிங்கம் என்ற ஒரு தவப்புதல்வன்

இ. பாலச்சந்திரன்
பகுதித்தலைவர்,
விஞ்ஞான பாட இணைப்பாளர்

சுப்பையா - புண்ணியலிங்கம் என்ற தவப்புதல்வன் 1940 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முப்பத்தோராம் திகதி திரு. சுப்பையா தம்பதிகளுக்கு புதல்வனாக வந்து அவதரித்தார். இவர் பிறந்த சில நாட்களில் அவருடைய தந்தை தாயாரின் நேர்த்திக் கடன்படி மருதடி விநாயகர் ஆலயத்தில் விற்று வாங்கப்பட்டார். இதனால்தான் அவர் தவப்புதல்வனென்று நான் கூறுகின்றேன். இது அவர் பின்னர் ஆற்றிய சேவைகளினால் மேலும் உறுதிப்படுத்தப்பட்டதனை நீங்கள் அறிவீர்கள்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இருபத்தெட்டு வருடங்களுக்கு மேலாக அறிவியல் துறைப்பணியோடு சைவப்பணியையும் மேற்கொண்டு வந்த இந்தப் பெருந்தகையைப் பற்றி என்னவென்று கூறுவது. நான் இந்தப் பாடசாலையில் ஏறத்தாழ பத்தொன்பது வருடங்களைக் கடந்து சேவையாற்றுகிறேன். ஒவ்வொருநாள் காலைப் பிரார்த்தனை வேளையின் போதும் தவறாது தலைமை தாங்கி மாணவர்களை பிரார்த்தனையில் ஈடுபடச் செய்வதோடு தானும் தவறாது பூ, மாலை என்பன கொண்டுவந்து பிரார்த்தனையில் ஈடுபடுவார். **"நீ உன்னைத் திருத்திக்கொள் உலகம் தானே திருந்தும்"** என்ற வாக்குக்கிணங்க தான் சைவ சின்னம் அணிவதோடு மாணவர்கள் எல்லாரையும் நயப்போடு கூறி விபூதி, பொட்டு அணியச் செய்வார். எந்தப் பிழை செய்த மாணவனும் பொட்டோடு புண்ணியலிங்கத்தை அடையும் போது அவனுக்கு அவர் கருணை காட்டி நல்வழிப்படுத்திடுவார்.

ஆரம்பக்கல்வியை கோண்டாவிலில் கற்ற இவர் உயர்தரக் கல்வியை கொக்குவில் இந்துக் கல்லூரியில் கற்றார். கல்வி கற்கும் காலத்தில் சகல விளையாட்டுக்களிலும் பங்குபற்றி பாடசாலை வளர்ச்சியில் முன்னின்று உழைத்தார். இதனால் இவருக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் தனியிடம் இன்றும் உண்டு.

உயர்கல்வி கற்ற பின்னர் முதல்முதலில் களுத்துறை வெயங்கல்லை முஸ்லீம் வித்தியாலயத்தில் ஆசிரிய நியமனம் பெற்றுச் சென்றார். அங்கு கல்வி கற்பிக்கும் காலத்தில் அவர் தனது சமயப் பணியை விட்டுவைக்கவில்லை. அக்காலத்தில் கதிர்காமம் பயணம் செல்வோர் மாத்தறை வரை புகையிரத்தில் பிரயாணம் சென்று அங்கிருந்து பின் பஸ்சில் தமது பயணத்தைத் தொடர்வர். அக்காலத்தில் மாத்தறையில் ஒரு சைவப்பெரியார் மடம் ஒன்றை நிறுவி யாத்திரிகர்கள் தங்கிச் செல்ல வசதி செய்திருந்தார். தவப்புதல்வன் கல்வி கற்பிக்கும் காலத்தில் அங்கு சென்று அடியார்களுக்கு அன்னம் முதலியன பரிமாறுவதோடு பஜனை பாடுவதிலும் ஈடுபட்டு வந்தார் என்பதை அறியக்

கூடியதாக இருந்தது. திருமண வயதை அடைந்ததும் தர்மலட்சுமி என்ற பெண்ணை மணமுடித்தார். இவர்களது பிள்ளைகளான சிவதர்சினி, ரிஷிகேசன், மகிழினி, ரூபினி என்போர் சிறப்பாக வாழ்கின்றனர்.

இல்லறத்தை நல்லறமாக நடத்தி வந்ததோடு தனது கடமையைச் சரிவரச் செய்தார்.

கல்லூரியில் பல பொறுப்புக்களைச் சுமந்து கல்லூரி முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டார் எனின் மிகையாகாது. ஆரம்ப காலத்தில் யோகாசனப் பயிற்சியில் மாணவர்களை ஈடுபடச் செய்து வந்தார். இதைத் தவிர கரப்பந்தாட்டம், உதைப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களுக்கு பொறுப்பாசிரியராக இருந்தார். எந்தப் பாடசாலையுடனும் யாழ் இந்துக் கல்லூரி போட்டி போடுகின்றது என்றாலும் அவ்விடத்தில் பாடசாலையின் சார்பில் கலந்துகொள்வார். இதனைத் தவிர கணித - விஞ்ஞான கழகப் பொறுப்பாசிரியராக இருந்து மாணவர்களை போட்டிகளில் கலந்து கொள்ளச் செய்வதோடு அவர்களுக்கு உலகவியல் சம்மந்தமான அறிவுகளை உடனுக்குடன் வழங்குவதிலும் முன்னணியில் நின்றார் என்றால் மிகையாகாது.

கடந்த காலங்களில் பகுதித்தலைவராகவும், விஞ்ஞான பாடஇணைப்பாளராகவும், தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையிலான பரீட்சைப் பொறுப்பாளராகவும் இருந்தார். இக்கால கட்டங்களில் கூடுதலாக ஆசிரியர்களின் நலனுக்காகவும் அவர்களின் சுகதுக்கங்களை அறிவதில் ஆர்வமுடனும் இருந்தார். அது மாத்திரமன்றி பரீட்சையை ஒழுங்காங்குவதில் அவருக்கு நிகர் அவராகவே இருந்தார் (அவர் காலத்தில் பரீட்சைகள் ஒருவித குழப்பமும் இன்றி அமைதியாகவும் ஒழுங்காகவும் நடைபெற்றன என்று கூறுவது சாலச் சிறந்ததாகும்)

பாடசாலைக் காலத்தில் ஏறத்தாழ பதினைந்துக்கும் மேற்பட்ட பொறுப்புக்களைத் தாங்கி நடந்துவந்த இவரது சேவைக்கு மகுடம் வைத்தாற் போன்று இருந்தது. இவர் இந்து இளைஞர் கழகப் பெருந்தலைவராக விளங்கியமை இந்துக் கல்லூரியின் மாணவன் கட்டாயமாகப் விபூதியும் பொட்டும் அணிய வேண்டுமென்பதிலும், மாலைகட்டுதல், பூ சார்த்துதல் போன்ற பணிகளிலும் மாணவரை ஈடுபடச் செய்தார். இவர் காலத்திலேயே பழைய மாணவர் சங்கத்தால் புனரமைக்கப்பட்ட சிவஞான வைரவர் கோயில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இது இவருக்கொரு மனத்திருப்தியான விடயமாக இருந்தது.

எப்போதும் மாணவர் பக்கமாக சிந்திக்கும் இவர் குறையான பாடப்புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு பரிகாரக் கற்பித்தல் வகுப்புக்களை நடாத்துவதிலும் பின்னிற்பது இல்லை.

எல்லோரையும் தனது பிள்ளைகளாகவும் சகோதரராகவும் மதிக்கும் பேராசான் ஒரு சபைக்கு தலைமை தாங்குகின்றார் என்றால் அது மிகவும் சிறப்பானதாக இருப்பதற்கு காரணம் அவரது ஆஜானுபாகுவான உடலமைப்பும் அனைவரையும் வசீகரிக்கும் புன் சிரிப்பும் அழகுவதனமுமே காரணமாகும்.

திரு. புண்ணியலிங்கம் ஆசிரியர் இளைப்பாறிய போது அவருக்கு கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் ஒரு கோலாகலமான விழாவை எடுத்து அவரை கௌரவித்தார்கள். இது அவரது சேவைக்குக் கிடைத்த பெரு விழாவாக அமைந்தது. ஆரோக்கியமான இவரது குடும்பம் இன்று கனேடிய நாட்டில் மகிழ்வாக வாழ்கின்றது. இவரதும் இவரது குடும்பத்தினரும் எதிர்காலம் சிறப்புற எல்லாம் வல்ல ஸ்ரீ ஞான வைரவப் பெருமான் அருள்புரிவராக ஸ்ரீ சத்திய சாய்பாபாவின் பக்தனான இப் பெருந்தகை நீடூழி வாழ வாழ்த்துவோமாக.



## சர்மா சேர்

✍ பா. ஜெயரெட்ணராஜா
ஆசிரிய நண்பன்

யாழ் இந்துக் கல்லூரி பல்தரப்பட்ட, திறன்படைத்த ஆசிரியர்கள் பலரைக் கண்டுள்ளது. அதிலும் தமது சேவைக் காலத்தில் பெரும் பகுதியை இக் கல்லூரியிலே சேவை செய்தவர்கள் ஒரு சிலரே. அவர்களுள் ஒருவராக **"சர்மா சேர்"** என அனைவராலும் அன்போடு அழைக்கப்படும் திரு. சே. சிவசுப்பிரமணிய சர்மா அவர்களைக் காண்கிறேன்.

1972 ஆம் ஆண்டு இக் கல்லூரியில் முதன்முறையாக வர்த்தகத்துறை ஆரம்பிக்கப்பட்ட போது இத்துறை சார்ந்த ஆசிரியராக தன்னை இணைத்துக்கொண்டார். ஆசிரியர் ஒருவரின் 30 வருடங்கள் சேவைக்காலம் என்பதும் அதுவும் ஒரே கல்லூரியில் குறிப்பாக யாழ் இந்துக் கல்லூரியில் என்பது சாமானிய விடயமல்ல. கல்லூரியின் வளர்ச்சியில் அன்று தொடக்கம் 2003 ஆம் ஆண்டு உபஅதிபராக இளைப்பாறும் வரை அவர் ஆற்றிய சேவைகள் சொல்லும் தரமன்று. இக் கல்லூரியின் வர்த்தகத்துறையின் கால் நூற்றாண்டுக்கு மேற்பட்ட வரலாற்றை தன்னகத்தே அடக்கியவர் **"சர்மா சேர்"** என்றால் அது மிகையாகாது. வர்த்தகம் கற்பிக்கும் ஆசிரியராக தன்னை இணைத்துக்கொண்டதுடன் இத்துறையின் ஆரம்ப கர்த்தாவாகி இக்கால பரிணாம வளர்ச்சிவரை வித்திட்டது மட்டுமன்றி **"வர்த்தக மாணவர் ஒன்றியம்"** என்ற வெள்ளிவிழாக் கண்ட பெருமன்றம் ஒன்றை உருவாக்கி அம் மன்றத்தினால் வருடந்தோறும் வெளியிடப்படும் **"வரவு"** சஞ்சிகையை வெளியிட்டு வந்ததில் முக்கிய பங்காற்றியவர் **"சர்மா சேர்"** அவர்கள்.

அமைதியான, பண்பான, கவர்ச்சிகரமான தோற்றமுடைய **"சர்மா சேர்"** அவர்கள் நேர் சிந்தனையாளன், சிறந்த ஆளுமையாளன், சிறந்த ஞாபகத் திறனாளன், பிறர்க்கு உதவும் மனப்பாங்காளன், தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட கருமத்தை கச்சிதமாகச் செய்வதில் வல்லவன் என இவரின் குண இயல்புகளை விபரித்துச் செல்லலாம். இவரிடம் கற்ற மாணவர்கள் விரிவுரையாளர்களாக, கணக்காளர்களாக, அதிபர், ஆசிரியர்களாக, வங்கியாளர்களாக, உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் கடமையாற்றுவதுடன் இன்றும் இவரைக் காணும்போது **"சர்மா சேர்"** என அன்புடனும் மரியாதையுடனும், நன்றிப்பெருக்குடனும் இவருடன் அளவளாவுதலைக் கண்டுள்ளேன். அந்தளவிற்கு இவர் தான்சார்ந்த துறையுடன் ஐக்கியமானவர் எனலாம்.

**"சர்மா சேர்"** தன் சேவையை வர்த்தகத்துறையுடன் மட்டும் மட்டுப்படுத்திக் கொள்ளாமல் கல்லூரியின் சகல செயற்பாடுகளிலும் முக்கிய பங்காளியாகத் திகழ்ந்தவர். குறிப்பாக வர்த்தகமாணவ ஒன்றியம் பொறுப்பாசிரியராக, இல்ல மெய்வல்லுநர்

போட்டியின் பதிவாளராக, **"இந்து இளைஞன் சஞ்சிகை"** ஆலோசகராக, பாடசாலை நேர சூசித் தயாரிப்பாளராக, பொதுப்பரீட்சை விண்ணப்பப் படிவங்கள் தயார்செய்து அனுப் புபவராக, காசிப்பிள்ளை இல்லப் பொறுப்பா சிரியராக, ஆசிரியர் சம்பளப் பட்டியல் தயா ரிப்பாளராக, ஆசிரியர் கழக செயலாளர், பொருளாளராக, பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொருளாளராக, பாட இணைப்பாள ராக, பகுதித்தலைவராக, ஓய்வு பெறுங்கால் யாழ். இந்துக் கல்லூரி உப அதிபராக என பல்வேறுபட்ட பரிணாமங்களில் தனது சேவை யைக் கல்லூரிக்கு வழங்கியவர். 1974 இல் கல்லூரியில் மாணவர் கூட்டுறவுச் சங்கத்தை ஆரம்பித்தார். இன்றும் இதன் வங்கிக்கணக்கு ரூ 20000/= சேமிப்பில் உள்ளன. இதே ஆண்டில் தேசிய சேமிப்பு வங்கி யாழ் இந்துக் கல்லூரியில் **"பாடசாலை வங்கிக் கிளை"** என ஒன்றை முதன்முறையாக யாழ்ப் பாணத்தில் ஆரம்பித்து வைத்த பெருமைக் குரியவர்.

1974 இல் தொழில்நுட்பக் கல்லூரி விரி வுரையாளராக நியமனம் கிடைத்தபோதும் கல்லூரி மீது கொண்ட பற்றுக் காரணமாக நியமனத்தை ஏற்காது தொடர்ந்து ஆசியரா கச் சேவையாற்றியவர். இவரது இத்தகைய சிறப்பாற்றல்கள் காரணமாகவே கல்லூரியின் சகல அதிபர்களாலும், ஆசிரியர்களாலும் பெரிதும் மதிக்கப்படுபவராக இருந்ததுடன் வேண்டப்பட்டவராகவும் திகழ்ந்தார். இத னால்தான் போலும் **"இதனை இதனால் இவன் முடிக்கு மென்றாய்ந்து அதனை அவன் கண்விடல்"** என்ற வள்ளுவன் வாக்குக் கமைய காலத்திற்குக் காலம் பதவி ஏற்ற அதிபர்களால் நிர்வாகக் கருமங்கங்கள் ஒப் படைக்கப்பட்டது. அந்தளவிற்கு தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட வேலையை கச்சிதமாகச் செய்து முடிப்பதில் வல்லவர். மேலும் கல்லூரியின் விழாக்கள் மற்றும் முக்கிய நிகழ்வுகளுக்கு **"சுபநேரம்"** குறிப்பதற்கு கல்லூரி நிர்வாகம் இவரையே நாடும். அந் தளவிற்கு சோதிடக் கலையிலும் வல்லவர்.

கல்லூரி தவிர்ந்த புறவேலைச் செயற் பாடுகள் என பார்க்கும் போது வட மாகாண ஆசிரியர் சங்கக் கல்விச் சபையின் (NPTA) முதலாவது செயலாளராகத் தெரிவுசெய்யப் பட்டு பாடசாலைகளுக்கிடையிலான பேச்சு, இசை, கட்டுரைப் போட்டிகளை மிகவும் சிறந்த முறையில் நடாத்தியவர். இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உபசெயலாளராக ஐந்து வருடத்திற்கு மேல் கௌரவ பணி யாற்றியவர். இது அவர் கல்லூரிக்கு மட்டு மன்றி சமூகத்திற்கும் வேண்டப்பட்டவர் என் பதற்கான சான்று பகிர்வாகும்.

**"மனிதனை பூரண மனிதனாக்குவது வாசிப்புத்திறன்".** இவர் சிறந்த வாசிப்புத் திறன் உடையவர். ஆசிரியராக சேயையாற்றும் போதும் சரி ஓய்வுபெற்ற பின்பும் சரி பூபால சிங்கம் புத்தகசாலையில் தினமும் இவரைக் காணலாம். இன்றும் கல்லூரியின் நூலகத் திற்குரிய சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்பவற்றை புத்தகசாலையில் இருந்து பெற்று கல்லூரி நூலகரிடம் ஒப்படைக்கும் சேவையைத் தொடர்கின்றார். இவரை வழி யில் சந்திக்கும் நண்பர்களிடம் இன்று இன் னார்க்கு பிறந்தநாள், இன்னார் இன்ன திகதி யில் ஓய்வுபெறுகிறார் என்று செய்தி தெரி விக்கும் **"மனிதகம்பியூட்டர்"** சர்மா சேர் அவர்கள். தன் ஆசிரிய நண்பர்களின் சம்பளக் காசோலையை பணமாக்கி வீடு தேடி கொடுக்கும் பண்பும், பிறந்தநாள் வாழ்த்தைத் தெரிவிப்பதற்காக அதிகாலை வீடுதேடிச் செல்லும் பண்பும் இவரை **"மறக்கக் கூடிய மனிதரல்ல"** என்ற வகைக் குட்படுத்தும் இத்தகைய பெருந்தகையாள னான அவருக்கு எல்லாம்வல்ல இறைவன் நீண்ட ஆயுளையும், உடல் வலுவையும் வழங்குவாராக.



# இசைவாக்கவாளர் கிருஸ்ணகுமார்

✍ பொ. ஸ்ரீ ஸ்கந்தராசா

**அதிபர் சேவை 2:1**

மூப்பத்திமூன்று வருடகால ஆசிரிய சேவையில் விவசாயப் பாட ஆசிரியராக யாழ் மத்திய கல்லூரியிலும், யாழ் இந்துக் கல்லூரியிலும் பணியாற்றத் தொடங்கிய அன்பர் 1977களில் நிரந்தரமாக யாழ் இந்துக் கல்லூரியில் பணியாற்றத் தொடங்கினார். விவசாயப் பாடப் பெறுபேறுகள் 1995 வரை சிறப்பாகப் பெறவைத்ததுடன் விவசாய உற்பத்திகள் பலவற்றை மாணவர்கள் முயற்சியால் வெளியீடாக்கினார். 1996னைத் தொடர்ந்து வந்த இடப்பெயர்வு கற்றல் கற்பித்தலில் மட்டும் ஈடுபடுகின்ற கல்லூரிக் கட்டமைப்பைக் கொண்டதாக அமைய சுண்டிச்சுண்டி தேர்ந்தெடுத்த ஆசிரியர்களது இடப்பெயர்வுக்குப் பதிலாக வெற்றிடத்தை நிரப்புகின்ற வகையில் ஆசிரியர்கள் உள்வாங்கப்பட்டனர். மூன்று பெண் ஆசிரியர்கள் மட்டும் இருந்த இடத்தில் பலரானார்கள். அன்பர் சிரேஷ்ட ஆசிரியராக மாறியதுடன் புதிய கல்விக் கொள்கைக்கேற்ப கற்பித்தல் அனுபவப் பரிமாற்ற பயிற்சிக்காக அரசு ஆசிரியர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பிய வேளை சிங்கப்பூருக்கு அனுப்பப்பட்ட குழுவில் எமது கல்லூரியில் இருந்து திருவாளர்கள் கிருஷ்ணகுமார், சுப்பிரமணியம் மகேஸ்வரன் ஆகிய இருவரும் சென்று கணனி களுடன் திரும்பினார். இவர் அக்கால அதிபருக்கு கல்லூரியில் பழுத்த அனுபவ சாலியானார். இனிய தோற்றம், கனிவான பேச்சு, நல்லியல்புகள் கொண்டவர். அதிபர் அனைவரினதும் கைப்பிள்ளையாக வாழ்ந்தவர் ஏன்?

இருண்ட யாழ்ப்பாணத்தில் மின்னொளி ஏற்றி மாணவர்கள் கல்வி கற்க வைத்த ஏற்பாட்டுக்குழு முக்கியஸ்தர்களில் ஒருவர். 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொலைத் தொடர்புச்சாதன விருத்தி ஏற்பட்டிருந்த வேளை கணனிச் சாதனப் பயன்பாட்டினை முன்னெடுத்தவர். (He was a pioneer in developing the computer knowledge at our college) பாடசாலைக்கு அக்காலப் பகுதியில் உடனடி முதலீடுகள் தேவைப்படும் போது முதலீட்டாளராக விளங்கியவர் - Architect கட்டிடக்கலை நுட்ப விற்பனர் திரு. குணசிங்கம் போன்ற பழைய மாணவரது தொடர்பாளனாக விளங்கும் நண்பராவார். அரசுகள் நிறுவனங்களைப் பொறுத்தவரை முரண்பாடுகளும் தடைகளும் வரும் போது அதனை எதிர்கொண்டு செயற்படுபவர்கள் தான் வளமான நிறுவனத் தொடர் செயற்பாட்டினை நடைமுறைப்படுத்தும் நடி பங்கினைக் கொண்டவர்களாவர்.

16.05.2006 அன்று ஓர் கரிநாள். யாழ் இந்து உபஅதிபர் ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றார். அவரது உடல்நிலை பற்றி கல்லூரிச் சமூகம், யாழ் நகரப்பகுதி, ஆஸ்பத்திரி வட்டாரங்கள் மூன்று தினங்கள் இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தனர். இவரைப் பற்றிய இச் செய்தியும் www இல் வெளி வந்தது குறிப்பிடத்தக்கது.

எந்தவகையிலும் இந்து அன்னையின் புடம்போட்ட தங்கங்களில் ஒருவரானார். அதிபர் திரு. வீ.கணேசராசா அவர்களும் 2007 விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராக குடும்பத்தினை அழைத்து கௌரவித்தமை விஷேட ஏற்பாட்டில் இந்து அன்னை அவருக்கு கொடுத்த கட்டளை யாகக் கொள்கின்றோம்.



## திரு. த. ஞானப்பிரகாசம்

✍ பொ. மகேஸ்வரன்
பிரதி அதிபர்

ஞானப்பிரகாசம் அவர்கள் இந்துவின் பழைய மாணவன். பேராதனைப் பல்கலைக்கழக கணித சிறப்புப்பட்டதாரி ஆசிரியராகப் பல கல்லூரிகளில் சேவையாற்றியபின் தான்கற்ற பாடசாலையான இந்துக் கல்லூரிக்கு 1988 இல் மாற்றலாகி வந்தார். உயர்தர வகுப்புகளுக்கு தூய கணிதம், பிரயோக கணிதம் ஆகிய பாடங்களைக் கற்பித்தார். அமைதியான சுபாவம் உடையவர். பொறுப்புணர்ந்து சேவையாற்றியவர். தான் கற்பிக்கும் வகுப்புகளில் வறிய மாணவர்களை இனம்கண்டு அவர்களுக்கு பலவழிகளிலும் உதவுவதற்கு முன் நின்றவர். எல்லோருடனும் சகஜமாகப் பழகுவார். பிரச்சினைகளை லாவகமாகக் கையாளும் திறன் கொண்டவர். அவருக்கு கோபம் வந்ததை யாரும் கண்டதில்லை.

கணிதபாட இணைப்பாளராக கடமை யாற்றிய இவர் லியோகழகப் பொறுப்பாசிரியராகவும் சிறப்பாகப் பணிபுரிந்து இந்துக் கல்லூரியில் 14 ஆண்டுகள் கடமை யாற்றி 2002 இல் ஓய்வுபெற்றார்.

சத்தான எந்தக் கல்வி முறையிலும் கைவேலையும் தொழிற்பயிற்சியும் கலந்திருக்க வேண்டும். கல்லூரி மாணவ மாணவியர் ஒவ்வொருவரும் நாளுக்கு ஓரிரு மணிகளாவது பகுதி நேர வேலையை செய்யும் நாகரீகம் விரையில் நம்மிடையே உருவாகிப் பரவ வேண்டும். உலகத்தில் குபேர நாடுகளில் கூட எந்தக் கோடீசுவரர் மகனும் மகளும் 18 வயதிற்குப் பிறகு மாணவர் என்கின்ற காரணத்தைக் காட்டி வேலைப்பொறுப்பினைத் தொடாமலே வளருவதில்லை. கல்லூரி விடுதிகளிலும், நூலகங்களிலும், சுற்றுலா அலுவலகங்களிலும், தொழிற்கூடங்களிலும் ஓரளவு பகுதி நேரத் தொழில்புரிவதன் மூலம் பிற்கால யதார்த்த சூழ்நிலைக்குத் மெல்ல மெல்ல பக்குவப்படுத்திக் கொள்கிறார்கள்.

- நெ. து. சுந்தரவடிவேலு -



# முத்து எங்கள் இந்துவின் சொத்து

✍ செ. தவராசா
பகுதித்தலைவர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

நான் இப் பாடசாலைக்குப் புதிதாக கடமையேற்ற பொழுது கணிதத்துறையில் என்னுடன் நெருங்கிப் பழகியவர்களில் திரு. மு. பா. முத்துக்குமாரும் ஒருவராவர்.

இவர் எமது பாடசாலையில் ஒழுக்காற்றுச்சபை உறுப்பினர் S.D.S உறுப்பினர், பசுபதி இல்லப் பொறுப்பாசிரியர், இந்து இளைஞர் கழக பெருஞ் செயலர், கணித விஞ்ஞான மன்றப் பொறுப்பாசிரியர்களில் ஒருவர். கணிதபாட இணைப்பாளர், குருளைச் சாரணத்தலைவர், சாரணத்தலைவர், சாரணர் சங்க உறுப்பினர், குழுச் சாரணத் தலைவர் போன்ற பல பதவிகளைப் பொறுப் பேற்றுத் திறம்பட நடாத்தி வந்தவர்.

எமது கல்லூரியில் எந்த நிகழ்வாக இருந்தாலும் இவரின் பங்களிப்பு அதில் நிச்சயமாக இருக்கும். கணிதத்தில் மட்டுமல்லாது வில்லுப்பாட்டு, நடனம், நாடகம் ஆகியவற்றிலும் பிரகாசமாகவே விளங்கினார். கேத்திரகணிதம், பங்குடமை வியாபாரம் போன்ற பகுதிகளை மிக நுணுக்கமாகக் கற்பித்தலில் கைதேர்ந்தவர். இவ்வாறான நிகழ்ச்சிகளில் மாணவர்களை நெறிப்படுத்திப் பயிற்றுவித்து பல பரிசில்களைப் பெற உதவிபுரிந்தவர். 2003.05.19, 20 ஆகிய திகதிகளில் இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்ற நாடகம் (இசை மூலம்) நடைபெறுவதற்கு நெறிப்படுத்தலை மேற்கொண்டு அனைவரினதும் பாராட்டைப் பெற்றவர்.

1998 இல் 5ஆம் ஜம்போரி கண்டியில் நடைபெற்ற போது குழுத்தலைவராகத் தொழிற்பட்டார். மகுடவாக்கியம் Growing Together 2001 இல் திருகோணமலையில் 2 ஆம் ஜம்போரி திருகோணமலையில் Create a new society என்ற மகுட வாக்கியத்தில் தொழிற்பட்டார். 2002, 2004 ஆம் ஆண்டுகளில் முறையே காலி, நுவரேலியாவில் நடைபெற்ற ஜம்போரிகளில் மாணவர்களை நெறிப்படுத்தி தொழிற்படுத்தியுள்ளார்.

வலயக் கல்வித் திணைக்களம் யாழ்ப்பாணம் 2001 இல் புத்துயிர்க்கான பாதை ஆக்கத்திறனில் உபகரணச் செலவுயாதுமின்றி நீர்க்கடிகாரம் (Water Clock) செய்து அனைவரினதும் மதிப்பைப் பெற்றதுடன் தகைமைப் பரிசையும் பெற்றார்.

1993 இல் யாழ் மாவட்ட கணித விஞ்ஞான மூலவள நிலையத்தினரால் யாழ் மாவட்ட ஆசிரியர்களிடையே கணித கற்றல் உபகரணம் தயாரித்தல் போட்டி நடாத்தப் பட்டது. இப்போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றபோது தற்போதைய யாழ் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி வேதநாயகம் அவர்களால் One of the Maths Teacher என்று பாராட்டப்பட்டு ரூபா 1000 பரிசையும் பெற்றார்.

இவரது பாடசாலைச் சேவைக் காலத்தில் கல்லூரி நிகழ்வுகள் எதுவாக இருப்பினும் முன்னின்று உழைத்தவர். அவர் இல்லாத நிகழ்வுகள் இல்லையென்றே கூறலாம். பசுபதி இல்லப் பொறுப்பாசிரியர் ஆக இருந்த வேளைகளில் ஆசிரியர்களாகிய எங்களையும் மாணவர்களையும் உற்சாகப் படுத்துவார். இளைஞர் போலவே சுறுசுறுப்பாகத் தொழிற்பட்டார். முன்னாள் அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் அவர்களால் தலைமைத்துவப் பயிற்சி மாணவர்களிற்கு அளிக்கப்பட்டபோது அதில் முக்கிய பங்கேற்று உதவினார்.

இவ்வாறான பல சேவைகள் ஆற்றியமையினால் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிச் சமூகத்துடன் நெருங்கிய பிணைப்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளார்.



## இந்துவின் மைந்தர்களுள் ஒருவரான சண்முகவடிவேலு பொன்னம்பலம்

✍ ந. சிவஞானசுந்தரம்பிள்ளை
ஆசிரியர் தரம் – 1

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவனான சண்முகவடிவேலு பொன்னம்பலம் அவர்கள் 1948 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் பத்தாம் திகதி அம்மன் வீதி கந்தர் மடத்தில் பிறந்தார்.

இவர் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியையும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியையும் கற்றார். இவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்விகற்ற காலத்தில் தனது ஆசிரியர்களில் மிகவும் பற்றுமிக்கவராகவும் மதிப்புமிக்கவராகவும் காணப்பட்டார். அத்துடன் தனது ஆசிரியர்களைப் பற்றி சிலாகித்துச் சொல்வதும் உண்டு.

மேலும் திரு. தி. சீனிவாசன், திரு. செல்லத்துரை, திரு M.P செல்வரத்தினம், திரு. கார்த்திகேசு ஆகிய ஆசிரியர்களைப்பற்றி மிகவும் புகழ்ந்து பேசுவார். இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் B.A பட்டம் பெற்றார். தனது சிறப்புப் பாடமாக சமூகவியலைக் கற்றார். இவைதவிர தேசியகல்வி நிறுவனத்தில் பட்டப்பின் படிப்புப் பட்டம் பெற்றார்.

இவரது துணைவியார் திருமதி கமலேஸ்வரி பொன்னம்பலம் ஆவார். இவர் வேம்படி மகளிர் கல்லூரியின் புகழ்பூத்த அதிபர் ஆவார். இவர்களுக்கு இரண்டு பெண்பிள்ளைகளும் ஒரு ஆண் மகவும் உண்டு. முன்னைய அதிபர், தற்போதைய அதிபர் இருவரதும் அன்புக்குப் பாத்திரமானவர்.

இவர் நமது கல்லூரியில் மாணவர்களுக்கு ஆலோசனைக்கும் வழிகாட்டலுக்கும் பொறுப்பாக இருந்த பொழுதும். கொக்குவில் இந்துக் கல்லூரியில் சேவை புரிகையில் வரலாறு சமூகவியல் ஆகியவற்றைக் கற்பிக்கும் ஆசிரியராகவும் இருந்து

உள்ளார். இவர் எப்போதும் எளிமையான வராகவும் மாணவர்களோடு இரக்க சிந்தை யுடனும் பழகுவார். இறைபக்தி நிரப்பப் பெற்றவர்.

இவர் இப்பொழுது நமது கல்லூரியில் இருந்து ஓய்வுபெற்றது சென்றுள்ளார். இவரது ஓய்வுக்காலம் பயன் உள்ளதாகவும் நோய்நொடி இல்லாத சிறப்பான வாழ்வாகவும் அமைய ஞானவைரவப் பெருமானை பிரார்த்தித்து கொள்கிறேன்.

இவர் யாழ்ப்பாண இந்துக் கல்லூரி மீது பற்றுமிக்க ஆசிரியராக இருந்து தனது பணியை செம்மையாக செய்து முடித்து சென்றுள்ளார் என்பதை யாரும் மறுக்கவும் முடியாது மறக்கவும் முடியாது.



## இதயம் சிறந்த இந்துவின் நல்லாசான்

வா. சிவராசா
ஆசிரியர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

ஆசிரியராகப் பலர் நியமனம் பெறுவதுண்டு. அவற்றுள் சிலரே ஆசிரியராவதற்கென்றே ஆண்டவனால் படைக்கப்படுவதுண்டு. இவற்றுள் இரண்டாம் வகையினுள் அடங்குபவரே திரு.ஐயாத்துரை கமலநாதன். உருவத்தில் சிறியவர் ; உள்ளத்தால் உயர்ந்தவர்; அமைதியே வடிவானவர்; அறிவே உருவானவர் ; நல்லவர் வல்லவர் ; நாத்திறன் படைத்தவர்; நாடுபோற்றும் வித்தகர்.

01.07.1992 இல் யாழ் இந்துக் கல்லூரிக்கு வந்தார். 23.04.2008 இல் இளைப்பாறி வீடு சென்றார். நம்பவே முடியவில்லை. தென்மராட்சியில் மட்டுவில் ஆசானின் பிறப்பிடம். யா/மட்டுவில் சந்திரபுரம் ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம், இடைநிலை சிரேஷ்ட கல்வியின் உறைவிடம். புவியியல் பாடத்தில் B.A (Hons), B. pill. பட்டத்தைக் கொடுத்தது. கொழும்புப் பல்கலைக்கழக உயர்பீடப் பட்டம் பெற்றது ஒரு துறை. ஆனால் பதவிப் பணியில் நிலை நாட்டியது பலதுறை. ஆசானின் பல்துறை அறிவு எம்மவர்க்கு அளப்பரிய சொத்து. அது அறிவுப் பயிரை வளர்க்க விரும்பும் மாணவருக்கு நல்ல வித்து. அவரிடமிருந்து மாணவர் பெற்றுக் கொண்டது அரியமுத்து. ஆசிரியர் கற்பித்த பாடங்களோ பல. திராவிடரின் தனித்துவத்தை தேடி வந்தோருக்கு தமிழ், இந்துக்களின் உயர்பண்பாட்டை நாடி கற்க வந்தோருக்கு இந்துநாகரிகம், இந்துசமயம், பூகோளநிலைமைகளை பூரணமாக அறிய ஆசைகொண்டோருக்கு புவியியல், அகிலத்தின் ஆட்சி விடயங்களை ஆணித்தரமாக அறியவிரும்பவருக்கு அரசியல், பொருளில்லாற்கு இவ்வுலகில்லை என்ற பொருள் நாடிய கற்றார்க்கு பொருளியல். எமது கல்லூரியில் தமிழ், இந்துசமயம், இந்து நாகரிகம் ஆகியவற்றை சிறப்புறக் கற்பித்தார்.

யாழ். இந்துக் கல்லூரியில் 1991 இல் கணிதப் பிரிவு மூடப்பட்டிருந்தது. 1992 இல் அதனை மீண்டும் ஆரம்பித்த பெருமை ஆசனையே சாரும். மூன்று மாணவருடன் கலைப்பிரிவை ஆரம்பித்தார். மூவரையும் பல்கலைக்கழகம் செல்ல வழிகாட்டினார். தொடர்ச்சியான கற்பித்தலில் பல பட்ட தாரிகள் உருவாக வழிசமைத்தார். அவர் இளைப்பாறும் காலத்தில் அவரது வகுப்பில் கலைப்பிரிவு மாணவர்கள் எண்ணிக்கை முப்பத்தைந்து. பாடப்புறச் செயற்பாட்டிலும் ஆசானின் பணி அளப்பரியது. பேச்சுக் கலை யினூடகப் பேச்சாளர்களையும், கவிதைக் கலையினூடாக கவிஞர்களையும் உருவாக் கினார். மாணவர்களது பல்துறை அறிவினை துலங்க வைக்க கலைமன்றத்தினூடாக **"தேனமுதம்"** சஞ்சிகையினை ஆண்டு தோறும் வெளிவர வழிகாட்டினார்.

எம்மினிய ஆசான் கல்லூரி நிர்வாக நடவடிக்கைகளுக்கு ஊன்றுகோலாக விளங் கினார். உயர்தர மாணவமன்றத்தின் இணைப் பொறுப்பாசிரியர், கலைமன்றப் பொறுப் பாசிரியர் தரக்கணிப்பீடுநர் போன்ற பதவி களை வகித்து அவற்றின் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு உதவினார் அவர்.

**"செய்யும் தொழிலே தெய்வம்**
**அதன் திறமைதான் நமது செல்வம்"**

என்பதனை தாரக மந்திரமாகக் கொண்டு வாழ்ந்தவர். இதயஞ்சிறந்தவர் ; இங்கிதமான வர் ; இடர்கண்டு உதவுபவர்.

அவரது ஓய்வு எமக்கு பேரிழப்பு. சேவையின் நிர்ப்பந்தம் அது ; தவிர்க்கமுடி யாதது. அவரது ஓய்வுக்காலம் சிறப்புற எல் லாம்வல்ல ஞான வைரவப் பெருமானை வேண்டுகின்றேன்.

"நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்"

நன்றி



# பௌதிகவியல் ஆய்வுகூட உதவியாளர் திரு. பொன்னம்பலம் மகாஞானசம்பந்தர்

✍ இ. ரவீந்திரநாதன்
பௌதிகவியல் ஆசிரியர்

திரு. பொ. மகாஞானசம்பந்தர் 09.10.1972 இல் யா / நடேஸ்வராக் கல்லூரி யில் முதல் நியமனம் பெற்று, யா / யாழ் இந்துக் கல்லூரிக்கு 01.09.1979 இல் இட மாற்றம் பெற்று, 08.12.2001 இல் உத்தி யோகபூர்வமாக ஓய்வுபெறும் வரை சுமார் 22 வருடங்கள் இக் கல்லூரியில் தொடர்ச்சி யாகச் சேவையாற்றியவர். ஓய்வுபெற்ற பின்னரும் முகாமையாளர்களின் விருப்பத்திற் கிணங்க, இற்றை நாள்வரை சுமார் 7 வருடங்கள் தொடர்ந்தும் விருப்பத்தோடு சேவையாற்றி வருபவர்.

ஏறக்குறைய 29 வருடங்கள் யாழ் இந்துக் கல்லூரியிலே பௌதிகவியல் ஆய்வு கூட உபகரணங்களைப் பேணிக் காப்பாற்று வதும் முடியுமானால் பழுது பார்ப்பதும். ஒவ்வாரு வருடமும் குறைந்தது 150 மாணவர் களின் ஆய்வுகூட நடவடிக்கைகளின் தேவை ஒழுங்குகளை செப்பமாக ஒப்பேற்ற உழைப் பதுவும், பொறுப்பான ஆசிரியர்களுடைய

மனோ நிலைமைகளைப் புரிந்துகொண்டு பொறுப்பாகவும் நல்ல முகபாவத்துடனும் அவர்களோடு ஒத்துழைப்பதும் என்பன வெல்லாம் சாதாரண விடயங்கள் அல்ல. திரு. பொ. மகாஞானசம்பந்தர் பௌதிக வியல் ஆய்வுகூடத்திற்கு நல்ல அனுபவமிக்க உதவியாளராக இன்றும் அதே வேகத்துடன் செயலாற்றி வருகின்றமை மகிழ்ச்சிக்குரியது. 4500 மாணவர்களுக்கு மேற்பட்ட க.பொ.த (உ/த) மாணவர்கள் இவரது சேவையைப் பெற்று வெளியேறியிருக்கின்றார்கள். இவர்களுள் மிகப்பெரும்பான்மையான மாணவர்கள் நல்ல நிலைமையிலும் இருக்கின்றார்கள்.

**"உங்களுக்குத்தானே ஒரு** Experience **உள்ள Laboratory Asst. சம்பந்தர் இருக்கிறார். உங்களுக்கு work easy"** என்றவாறு அதிபர் அ. பஞ்சலிங்கம் அவர்கள், வயதில் குறைந்த பௌதிகவியல் ஆசிரியர்களுக்குக் கூறுவதுண்டு.

திரு. P. S குமாரசுவாமி, திரு. S. பொன்னம்பலம், திரு. K. S. குகதாசன், திரு. A. பஞ்சலிங்கம் போன்ற புகழ்பெற்ற இந்துக் கல்லூரி அதிபர்கள் காலத்திலும் திரு. M. ஆறுமுகசாமி, திரு. A. கருணாகரன் போன்ற புகழ்பெற்ற இந்துக் கல்லூரி ஆசிரியர்கள் காலத்திலும் சேவையாற்றிய பெருமையையும் திரு. பொ. மகாஞானசம்பந்தர் கொண்டிருக்கின்றார். அவரது பிள்ளைகளும் எமது கல்லூரிக்குச் சேருமதியானவர்கள் தான்.

அவரது சேவையும், உழைப்பும், சகிப்புத்தன்மையும் ஈண்டு குறிப்பிட வேண்டியவை. இந்துக் கல்லூரிச் சமூகம் போற்றும் அங்கத்தவராக திரு. பொ. மகாஞானசம்பந்தர் இடம்பெறுகின்றார். வாழ்க.



## திரு. நா. கா. மகாலிங்கம்

✍ திருமதி ச. சுரேந்திரன்
பகுதித்தலைவர்,
க. பொ.த. (உயர்தரம்)

மகாலிங்கம் அவர்கள் 01.03.1968 இல் ஆய்வுகூட உதவியாளராக முதல் நியமனம் பெற்றார். தனது 39 வருட சேவையில் பல்வேறு பாடசாலைகளில் சேவையாற்றியுள்ளார்.

07.06.1984 இலிருந்து 05.06.2006 இல் ஓய்வுபெறும் வரை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தனது சேவையை மேற்கொண்ட இவர் ஓய்வுக் காலத்திலும் தொடர்ந்தும் எமது கல்லூரியில் சேவையாற்றுகின்றார்.

உயிரியல் ஆய்வுகூடத்தில் தன் பொறுப்புக்களை மேற்கொள்வதுடன் நின்று விடாது மாணவர்களுக்கான பேருந்து பருவ காலச் சீட்டினைப் பெற்றுக்கொடுத்தல் போன்ற கடமைகளையும் தாமாக முன்வந்து செய்வது குறிப்பிடத்தக்கது.

நேர்மை, தன்னடக்கம், செயற்றிறன் மிக்க இவர் கல்லூரியில் ஏனையவர்களுடன் மிகவும் அன்போடு பழகித் தேவையான சந்தர்ப்பங்களில் உதவி புரிவதில் முன்னிற்பவர். இவர் தன் சேவைக்காலத்தில் உயிரியல், பௌதீகவியல், இரசாயனவியல் ஆகிய மூன்று துறைகளுக்குரிய ஆய்வுகூடங்களில் கடமையாற்றியமை அவரது திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

உ

*"To thine own self be True"*

# THE YOUNG HINDU

(Founded in 1937)

**(For Internal and Private Circulation only)**

**The Jaffna Hindu College Students' Annual**

# ENGLISH SECTION

**2008**

# THE YOUNG HINDU

*The Jaffna Hindu College Student's Annual*

2008

## Editorial

I extremely feel happy that this magazine **"THE YOUNG HINDU"**, carrying the past events is to be released by the grace of **"Gnana Vairavar"**, after a long passage of time and it has been a pleasure being the editor of the English section.

When I joined this college in Grade six. **"The MILLENNIUM NUMBER"** had been released. I was not fully aware what the Editorial meant. Later on, I could understand the significance of the matters mentioned in the Editorial. The last magazine contained some matters on **"The world's rapid advancement"**, **"Education reforms in Sri Lanka"** and the ways of facing such reforms which should be taken into consideration by our efficient students. Like that our efficient students in all fields still shine safe - guarding the glory of our college.

